நன்றி - நூலகத்திட்டம்


සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 35 1-15 டிசம்பர் 1993 விலை 7/=

**யார் மதிப்பார் விலை?**

வெட்டவெளி குட்டை குளமெல்லாம் வெடிவைத்து
ஒட்ட அழித்த பின்னும் ஓயாமல் - ஓட்டி நின்று
சுடுகின்றார் என்று கதை சொல்லுகின்றீர் உம்முடைய
விடுகதைக்கு யார் மதிப்பார் விலை?

– ஈழமோகம்



# யூ.என்.பி - இ.தொ.கா உறவில் முறிவு?

## சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இன்னொரு அடி?

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் இடையில் கடந்த 27 ஆண்டுகளாக நிலவி வந்த உறவில் முன்னெப்போதுமில்லாதவாறு விரிசல் ஏற்பட்டுள்ளது என்பது இப்போது வெளிப்படையாகிவிட்டது. இவ்வுறவு முற்றாக முறிவதற்கான நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றோ நாளையோ உடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படும் இ.தொ.க, யூ.என்.பி உறவின் விரிசலுக்கான அடிப்படையாக தெற்கில் வேகமாக வளர்ந்து வரும் 'சிங்கள பௌத்த' இனவாதமே தொழிற்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

ஆளுங்கட்சிக்குள்ளேயும், வெளியேயும் ஆளுங்கட்சியினர், எதிர்க்கட்சிகள் மற்றும் சிங்கள இனவாதிகளால் தீவிரமாகப் பரப்பப்பட்டு வரும் 'சிங்கள பௌத்த' இனவெறியினது தொடர்ச்சியான தொண்டமான் மீதான தாக்குதலின் இறுதிக்கட்டமாக இது வெளிப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன், மலையக நிலப்பங்கீடு தொடர்பான காரணங்களுக்கான தனது பேரம்பேசலில் அரசு அக்கறை காட்டவில்லை என்ற காரணத்தை இந்நிலைமை தோன்றுவதற்கான காரணமாக தொண்டமான் அவர்கள் தெரிவித்துள்ள போதும், உண்மையில் யூ.என்.பி தொண்டமானின் தயவு தனக்கு அவசியமில்லை என்று கூறவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளதே இதற்கான காரணம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, 1982 ல் ஜே.ஆர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடக்கம் கடந்த மே 17ம் திகதி நடைபெற்ற மாகாண சபைகளுக்கான தேர்தல்வரை இடம் பெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் யூ.என்.பிக்குப் பக்கபலமாக நிற்பதுடன் இத்தேர்தல்களில் யூ.என்.பி தொடர்ச்சியான வெற்றிகளைப் பெறுவதற்குக் காரணமாகவும் இருந்தது தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா. 1982 இல் ஜனாதிபதி தேர்தலுக்கான தயாரிப்புகளில் ஈடுபடுவதற்கு முன்பே மலையகமக்களுக்கு வாக்குரிமையை வழங்கி, தொண்டமானை தனது நெருக்கமான கூட்டாளியும் ஆக்கிக் கொண்ட ஜே.ஆரே (அப்போதெல்லாம் ஜே.ஆர்-தொண்டமான் அரசு என்றே அன்றைய அரசை எதிர்க்கட்சிகள் வர்ணித்தன) அதற்குப்பின் மிகச் சிறியளவு வாக்குப் பலத்தினால் வெற்றி பெற்ற ஜனாதிபதி பிரேமதாசவோ (அவரது வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தது மலையகவாக்குகளே என்பது வெளிப்படை) செய்யத் துணியாத ஒரு செயலை-தொண்டமானுடன் முரண்படுதலை - டி.பி. விஜயதுங்க அரசு செய்யத் தயாராகியிருக்கின்றது என்றால் அது ஒன்றும் தற்செயலானதாக இருக்க முடியாது. மலையகத்தில் இ.தொ.காவின் பலம் பெரியது என்பதை அங்கீகரித்தது மட்டுமல்ல, அது அப்படியே இருக்கவும் வேண்டும் என்பதில் அவர்கள் இருவரும் கவனமாக இருந்தனர். ஆனால் இன்றைய அரசும் அதன் தலைவர் டி.பி.விஜயதுங்கவும் அவ்வாறு கருதுவதாகத் தோன்றவில்லை. தான் ஒரு 'மலையகப்பகுதியைச் சேர்ந்தவன் என்பதாலும் தற்போது புதிதாக கூட்டுச் சேர்ந்திருக்கும் அனுராவுக்கு அங்குள்ள செல்வாக்கின் காரணமாகவும் தொண்டமானது உதவியின்றியே அதிகப்படியான மலையக வாக்குகளை வென்றெடுக்க முடியும் என்று ஜனாதிபதி கருதுவதாகத் தெரியவருகின்றது. தொண்டமான் தலைமைக்கு பரவலாக மலையகத்தில் கிளம்பிவரும் எதிர்ப்பும் மலையக தேசிய எழுச்சியும் தொண்டமானை வீழ்த்த உதவும் என்பது அவர்களது கணிப்பாக இருக்கின்றது.

→ 11

## முனாசும் கொல்லப்பட்டார்?

அண்மையில் பூநகரியில் நடைபெற்ற யுத்தத்தில் புலிகளிடம் பறிபோன முகாம்களை எப்பாடுபட்டாவது மீட்டெடுக்கவென உடனடியாகவே விசேட படை அணியொன்று பூநகரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்படை அணியில் முன்னாள் கிழக்கு மாகாண இராணுவ உளவுப் பிரிவின் சிம்ம சொப்பனம் என வர்ணிக்கப்பட்ட கப்டன் முனாஸ் என்பவரும் அனுப்பப்பட்டார். முகாமை மீட்டெடுக்கும் யுத்தத்தில் ஈடுபட்ட இவர் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி கொல்லப்பட்டதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கப்டன் முனாஸ் முன்னாளில் கிழக்கு மாகாணத்தால் பல இளைஞர், யுவதிகள் காணாமல் போனதற்கு அல்லது கொல்லப்பட்டதற்கு அல்லது சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதற்கு காரணமானவர் என்பதும், கூடவே பல தமிழ்ப் பெண்களின் கடத்தல்கள் பாலியல் பலாத்காரங்கள் என்பவற்றிற்கும் பெயர் போனவர் என்பதும் கிழக்கு மாகாண மக்களால் அடிக்கடி இவற்றுக்காக நினைவு கூரப்பட்டவர் என்பதும் சரிநிகர் வாசகர்கள் அறிந்ததே.

இவரது 'சேவையைப் பாராட்டுமுகமாக' கொழும்புக்கு இவர் வரவழைக்கப்பட்ட பின்னர் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள இளைஞர்கள், யுவதிகளின் தலைவிதி இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

கொழும்பில் பலர் திடீர் திடீரென மாயமாக மறைந்தது பற்றியும் H.R.T.F. வெளியிட்ட அறிக்கையில் இவர் தொடர்பாகக் குறிப்பிட்டிருந்ததும் முன்னைய சரிநிகரில் வெளிவந்ததை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

அந்த முனாஸ் இந்தத் தாக்குதலின் போது கொல்லப்பட்டதாக இப்போது தகவல்கள் வந்துள்ளன.

## விமானப்படையின் இலக்குத் தவறாத தாக்குதல்

நவம்பர் 13 திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பாரிய பலமான குண்டுவீச்சுத் தாக்குதலில், 132 வருடம் பழமை வாய்ந்த குருநகர் சென்ஜேம்ஸ் தேவாலயம் முற்றாகச் சேதத்திற்குள்ளானது. குண்டு வீச்சு நடைபெற்ற வேளையில் 40 பேர் வரை தேவாலயத்தில் இருந்தனர். அதில் 10 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் விபரம் வருமாறு

1. அருணோதயன் (2 மாதம்)
2. சுதா (6 மாதம்)
3. நவாஜி (01 வயது )
4. சிங்கராயர் நவரோஜ் (6 வயது)
5. S.சுமிதன் (07 வயது)
6. பத்திநாதர் சிறில் (07 வயது)
7. அன்ரன் அன்றனிட்டா சலூக்க (7 வயது)
8. சிங்கராஜா - ஜேம்ஸ் பியாமினா (24 வயது)
9. மதுரநாயகம் மேரிலேஜினி (28 வயது)
10. அருண் (30 வயது)
11. முடியப்பு - உதயன் (30 வயது)
12. செலஸ்ரின் ஜோசப்ரா (35 வயது)
13. ஜேம்ஸ் - அன்னரத்தினம் (40 வயது)
14. பிறேமாவதி (40 வயது)
15. பவுலினாமலர் (40 வயது)
16. பாவிலுப்பிள்ளை - ஜெசிந்தா (45 வயது)
17. பற்றிக் சூசைப்பிள்ளை (45 வயது)
18. ஜேன் லூட்டு சேவியர் (45 வயது)

→ 11

## மீண்டும் வெள்ளை வான் கடத்தல்

மீண்டும் ஒரு இலக்கத் தகடற்ற வெள்ளை வானில் வந்து கடத்திச் செல்லும் சம்பவம் ஒன்று கடந்த நவம்பர் 14ம் திகதி நடைபெற்றுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. இம்முறை கொட்டாஞ்சேனையில் வசிக்கும் 27 வயதுடைய குமாரவேல் கரன் என்பவர் வெள்ளவத்தையிலிருந்து இரவு 8.00 மணியளவில், 155ம் இலக்க பஸ்ஸில் ஏறி ஆமர்வீதியில் இறங்கியிருக்கிறார். இறங்கிய போது இருவர் அவரை அணுகி வெள்ளைவான் ஒன்றில் ஏற்றிச் சென்றுள்ளனர். இத்தனை நாட்களாகியும் இவர் எங்கு இருக்கிறார், எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற விபரங்கள் எதுவும் தெரியவில்லை.

1982 ம் ஆண்டு படிக்கவென இந்தியா சென்று கடந்த 1989இல் சிவில் பொறியியலாளராக நாடு திரும்பியுள்ள இவர் கடத்தப்பட்டதைப் பற்றி பெற்றோர்கள் பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் என்று எல்லா இடங்களையும் அணுகிய போதும் எந்த விதவிபரங்களையும் அறிய முடியவில்லை.

ஆரம்பத்தில் ஜா-எல பொலிசில் உள்ளதாகவும் பின்னர் நீர்கொழும்பு, மாளிகாவத்தை ஆகிய இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் கிடைத்த போதும் அவ்விடங்களுக்குச் சென்று பார்த்த போது அத்தகவல்களில் எத்தகைய உண்மையும் இல்லை எனத் தெரிய வந்துள்ளது.

எனினும் கடைசியாகக் கிடைத்த தகவலின் படி ஈ.பி.ஆர்.எல்.எப் எம்.பி சுரேஸ் பிரேமச்சந்திரனின் மெய்ப்பாதுகாப்பாளர் (இவர் பயங்கரவாத எதிர்ப்புக் குழு(Counter subversive unit) வினால் கொழும்பில் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டு அடித்துத் துன்புறுத்தப்பட்டவர்) விடுதலை செய்யப்பட்டபோது அவர் அண்மையில் 4 பேர் அங்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்ததைத் தொடர்ந்து, அவர்களுள் தமது மகனும்

→ 11

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி

## 'ஷ்றீ லங்காத் தேசியம்'

முன்பெல்லாம் 'சிங்களபௌத்த' பேரினவாதம் பற்றிப் பேசினால் மூக்கைச் சுழிக்கின்ற பலர் நம்மிடையே இருந்தார்கள்.

நாம் வேண்டாத இனவாத கற்பனைகளை கட்டிக்கொண்டு பேசுவதாக அவர்கள் அபிப்பிராயப் பட்டார்கள்.

'சிங்கள பௌத்தம்' என்பது அதன் பிறப்பிலேயே 'தமிழ் எதிர்ப்பு' என்ற அத்திவாரத்தில் தான் கட்டப்பட்டது என்பதை இவர்கள் நம்புவதற்கு தயாராக இருக்கவில்லை.

இப்போது 'சிங்கள பௌத்தர்கள்' நாம் என்று இனவாதிகள் வெளிப்படையாகவே கூறத்தொடங்கிவிட்டார்கள்.

நாம் 'சிங்கள பௌத்தர்கள்' எமது மதம் சிங்கள பௌத்தம். எமது நாடு 'ஷ்றீ லங்கா' என்பது அவர்களது முழக்கமாகிவிட்டது.

'தமிழர்களை என்ன செய்வதென்று இந்த நாட்டில் வாழவிட்டால் அவர்கள் எமது தலைக்கு மேலேயே ஏறிவிடுகிறார்கள்' என்ற ஆதங்கம் அவர்களுக்கு.

பூநகரி பதில் தாக்குதல் கூட 'சிங்கள பௌத்தத்தை' பாதுகாக்கும் ஒன்றாகவே, தெற்குக்குப் படையெடுக்கக்கூடிய தமிழ்ப்பயங்கரவாதிகளின் கொட்டத்தை அடக்கும் நடவடிக்கையாகவே வருணிக்கப்படுகிறது.

'வடகிழக்கில் இருப்பது பயங்கரவாதம் மட்டுமே' என்றகுரல் இந்தச் சிங்கள பௌத்தத்தின் குரல்தான் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இதற்கெதிரான சிங்கள முற்போக்காளர்களின் குரல் அவ்வளவாக பலம் பெறமுடியாத நிலை.

ஆனால், அரசுக்கு முண்டு கொடுக்கும் தமிழ்க்கட்சிகளோ சிங்கள பௌத்தத்துக்குள் எதையாவது பொறுக்கலாமோ என்று தேடுகின்றன.

ஆக, யுத்தம்-வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான யுத்தம்-ஒரு 'தேசிய' யுத்தமாக உருமாற்றப்பட்டுக் கொண்டு வருகிறது.

'புலி எதிர்ப்புக்காக' இவற்றை காணமறுப்பவர்கள் நாளைக்கு தம்மை பாதுகாத்துக் கொள்ள யாருமற்ற நிலைக்குப் போகப் போவதை தவிர்க்கமுடியாது.

தமிழ் மக்களும் இல்லை என்றாகி விட்டபின் 'தந்தை செல்வா' சொன்னதுபோல அவர்களையும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!

புரிகிறதோ?

## கதிரைச் சுகம்

## அல்லது கழுதைச் சுகம்

கிழக்கு மாகாணத்தில் நடக்கவிருந்த உள்ளூராட்சித் தேர்தல் பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடாத்தப் படுவதற்கான போதிய பாதுகாப்பு நிலை இல்லை என்பதுவும், பல இடங்களிலும் மக்கள் இடம் பெயர்ந்து வாழ்கிறார்கள் என்பதுவும் தமிழ்க் கட்சிகளால் சுட்டிக்காட்டப்பட்டு தேர்தலைப் பின்போடுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஆனால், விடாப்பிடியாக தேர்தலை நடத்தியே தீருவது என்பதுவே அரசின் முடிந்த முடிவாக இருந்தது.

வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பான கருத்துக் கணிப்பொன்றினை நாடாத்துவதற்கான முன்னோட்டமாக இதனை நடாத்தவிரும்பிய அரசு எப்படியோ மனம்மாறி இப்போது தேர்தலை ஒத்திப் போட்டுவிட்டது.

வேட்பாளர் பட்டியலுக்கு ஆட்பிடிப்பதில் ஆளுங்கட்சிக்கு ஏற்பட்ட நெருக்கடிதான் இதற்கு காரணமோ என்னவோ?

கிழக்கிலுள்ள நிலைமை சுமுகமானதல்ல என்றும் இதுபோன்ற பல்வேறு காரணங்களை கூறியும் பல தமிழ் கட்சிகள் தேர்தலில் பங்கு கொள்ளப் போவதில்லை என்று அறிவித்திருந்தன.

தேர்தல் நடாத்த அரசு எடுக்கும் முயற்சியைக் கண்டித்தன.

ஆனால் இரகசிய இரகசியமாக சுயேட்சை வேட்பாளர்களை தமது சார்பில் நிறுத்தி தேர்தலில் பங்குபற்ற சகல முயற்சிகளையும் மேற்கொண்டன.

எந்தக் கட்சிகளும் இதற்கு விதிவிலக்கில்லை.

என்ன தான் அரசியல் பேசினாலும் தேர்தல் என்று வந்தவுடன் இவர்கள் பறக்கிற பறப்பைப் பார்க்கும் போது அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

தமிழ் மக்களின் துரதிர்ஷ்டம், அவர்களுக்கு வாய்த்த தலைவர்களாக இவர்கள்?

'நாங்கள் நிற்காவிட்டால் வேறு தீய சக்திகள் நிற்கும்' என்று தமது நடவடிக்கைக்கு நியாயம் வேறு கற்பிக்கிறார்கள் இவர்கள்! பகிரங்கமாக தேர்தலில் நிற்கவும் முடியாது; தேர்தலில் வரும் 'கதிரைச் சுகத்தை' விடவும் முடியாது.

கூழும் வேணும்! மீசையும் வேணும்

தமிழ் மக்களின் முதுகில் சவாரிவிட இவர்கள் இருக்கும்போது; அரசு ஏன்? 'சிங்கள பௌத்தம்' ஏன்?

## பௌத்தத்தின் துரோகம்?


வடக்கு கிழக்கில் தமிழ் மக்களும் சிங்கள இளைஞர்களும் இறந்து கொண்டிருக்கிற வேளையில் சிங்கள இனவாதிகளுக்கும், பௌத்த அடிப்படைவாதிகளுக்கும் பிரச்சினை வேறாகக் காணப்படுகிறது.

ஹாவார்ட் பல்கலைக்கழகப் பேராசிரியரான கலாநிதி ஸ்டான்லி தம்பையாவினால் எழுதப்பட்டு பின்லாந்திலுள்ள யு.என். பல்கலைகழகமொன்றினால் வெளியிடப்பட்ட **'பௌத்தத்தின் துரோகம்?'** எனும் நூல் குறித்த சர்ச்சையிலேயே இப்பொழுது அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இப்நூலானது மகாசங்கத்தின் மீதும், சிங்கள பௌத்தர்கள் மீதும் பழி சுமத்த எழுதப்பட்டதாகும் என்கின்றனர்.

இது ஒரு தனிப்பட்ட நபரின் ஆராய்ச்சி அல்ல; பிரிவினைவாதிகளுக்குப் பக்கச் சார்பான நூலாகும். இராணுவ முரண்பாட்டிற்கு பௌத்தகுருமாரே பொறுப்பேற்க வேண்டும். இந்நூலின் அட்டையில் பிக்குவின் படம் இராணுவத்தன்மை கொண்டதாக வரையப்பட்டுள்ளது என ஜாதிக சிந்தனையாளர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பாராளுமன்றத்தில் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஸ் குணவர்த்தனா இந்நூல் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், ''மகா சங்கத்தினரை




இரக்கமற்ற முறையில் தாக்கும் இந்நூல் பௌத்தர்களே பிரச்சினைக்கு காரணம் எனக் கூறுகின்றது. மகாசங்கத்தின் மீதும், பௌத்த மதத்தின் மீதும் இது ஒருவகைப் புதிய தாக்குதல்''

யூ.என்.பி.யின் பா.உ. வின்சன்ட் ஜெயவர்த்தனா ''பௌத்தம் பல சர்வதேச ஸ்தாபனங்களால் பயமுறுத்தப்பட்டது. ஈழம்வாதிகளால் இப்போது சிங்கள பௌத்த கலாசாரம் தாக்கப்படுகிறது'' என்றார்.

இது தொடர்பாகப் பல பா.உ.க்கள் பாராளுமன்றத்தில் பேசியுள்ளார்கள்.

இவற்றிலிருந்து சற்று வேறுபட்டது, கொழும்புப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர் கலாநிதி உயன்கொடையின் கூற்று.

''இது பௌத்த மதத்தினருக்கோ, பௌத்த தத்துவங்களுக்கோ எதிராக எழுதப்பட்ட புத்தகமல்ல. சில சிங்கள பௌத்த இனவாதிகளின் நடவடிக்கைகளை பௌத்த தத்துவத்தின் அடிப்படையில் விமர்சித்து, கேள்விக்குள்ளாக்கியுள்ளார். பௌத்த மதத்தைக் கட்டிக் காக்கப் புறப்பட்ட குருமாரினதும், ஜாதிக சிந்தனையாளர்களினதும் பௌத்தம் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியது இன்றியமையாதது'' என்றார்.

## மட்டக்களப்பில் நடப்பது சிவில் நிர்வாகமா?

மட்டக்களப்பில் நடப்பது சிவில் நிர்வாகமா அல்லது இராணுவ நிர்வாகமா எனும் வினா எழுகின்றது.

அதிகாரப் பரவலாக்கல் நடாத்துவதாகக் கூறிக்கொண்டு அரசாங்கம் பிரதேச செயலகங்களைத் திறந்துள்ள இந்நிலைமையானது, மாகாண அரசின் அதிகாரங்களைத் திட்டமிட்டுப் பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றது.

பயிற்சி எதுவுமற்ற அல்லது மிகக் குறுகிய காலப் பயிற்சியுடன் சேர்த்துக் கொள்ளப்பட்ட அதிகாரிகளைக் கொண்டுதான் மட்டக்களப்பில் ஒன்று தவிர்ந்த 11 பிரதேச செயலகங்கள் செயற்படுகின்றன. இந்நிலையில் இப்பிரதேச செயலாளர்கள் சரியானவற்றை அமுல்படுத்த முடியாமல் திண்டாடுகின்றனர். இதனால் பாதிக்கப்படுவது சாதாரண ஏழை மக்களே. இந்நிலமை ஒரு புறம் இருக்க, இவ் அதிகாரிகளின் மோசமான நடவடிக்கைகள் மக்களிடையே பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலாலர்களில் ஓரிருவரைத் தவிர ஏனையோரை அவர்களின் அலுவலகத்தில் காண்பதே அரிது. ஒன்றில் அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட குளிரூட்டப்பட்ட ''பிக்கப்''பில் எங்கேயாவது பறந்து கொண்டிருப்பார்கள், அல்லது கச்சேரிக்குப் போவதாகக் கூறிக் கொண்டு தங்களது சொந்த அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருப்பார்கள் (இதற்காக இராணுவ அதிகாரியினால் எச்சரிக்கப்பட்ட பிரதேச செயலாளர்களும் உண்டு) அல்லது வேறு ஏதாவது ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டு மாவட்டத்திற்கு வெளியே தங்களது ''பிக்கப்''பில் சென்றிருப்பார்கள்.

அண்மையில் ஒரு பிரதேச செயலாளர் ''சீதுவையில்'' பொலிசாரால் வாகனத்துடன் கைதுசெய்யப்பட்டு அடுத்த நாள் விடுதலைசெய்யப்பட்டுள்ளார். இன்னொரு அதிகாரி கண்டியில் உல்லாச விடுதியில் இளநங்கை ஒருவருடன் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார். சில பிரதேச செயலாளர்கள் தங்களின் அலுவலகத்திற்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்ய வண்டியையும் கட்டிக்கொண்டு கொழும்பிற்குப் புறப்பட்டு விடுகின்றனர். இன்னும் சில பிரதேச செயலாளர்கள் தங்களின் பரீட்சைக்காகக் கொழும்பில் நின்று விட்டு வந்து, தாங்கள் கொழும்பிற்குப் போய் வந்த செலவுகளையும், ஏனைய செலவுகளையும் பிரதேச செயலகப் பணத்தில் இருந்தே வவுச்சர் போட்டு எடுத்துக் கொள்கின்றார்கள். இவ்வாறான செலவுகளுக்கு அங்கீகாரம் வழங்க அனுபவம் உள்ள கணக்காளர்கள் தயங்கும் போது தாங்களே அங்கீகாரம் வழங்கும் அதிகாரியாகவும் மாறிவிடுகின்றார்கள். இதற்கு இன்னொருபடி மேல் சென்று சில பிரதேச செயலாளர்கள் தங்களைச் சந்திக்க வருகின்றவர்களை துச்சமென மதித்து மரியாதை இல்லாமல் நடந்து கொள்கின்றார்கள்.

இந்த லட்சணத்தில் நிர்வாகம் நடந்தால் அதிகாரப்பரவலாக்கம் யாருக்கு? என்ற கேள்வி எழுவது நியாயமே!

## எல்லைப்புற படையணி மீது புலிகள் தாக்கலாம் என அச்சம்

பூநகரி தாக்குதலையடுத்து அரசபடைகளுக்குச் சொந்தமான, கனரக ஆயுதங்கள் பலவற்றை எடுத்துச் சென்ற புலிகள் பாரிய தாக்குதல்களில் ஈடுபடலாம் என்று வடபகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அச்சம் கொண்டுள்ளதையே காணமுடிகிறது.

நீண்ட தூரத்தில் உள்ள எதிரிகளின் நிலைகளைத் தாக்கவல்ல ஷெல்களை ஏவும் பீரங்கிகள் மற்றும் 120 எம்.எம். பாரிய துப்பாக்கிகளைக் கொண்டு அவர்களது தாக்குதல்கள் இடம் பெறலாம் என படையினர் எதிர்பார்த்து தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் பலவற்றை மேற் கொண்டுள்ளார்கள்.

வவுனியாவைப் பொறுத்தமட்டில், செட்டிகுளம், பம்பைமடு, நொச்சி மோட்டை, மகா கச்சக் கொடி, குடா கச்சக் கொடி, போன்ற எல்லைப்புறப் பாதுகாப்பு நிலைகளில் கூடிய தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள படையினர், புலி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக அங்கு வைக்கப்பட்டிருந்த டாங்கிகள், கனரக துவக்குகள் தாங்கிய பாரிய வாகனங்களை அங்கிருந்து அகற்றி வவுனியாவில் உள்ள தலைமைப் படைத்தள முகாமிற்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

எல்லைப்புறக் காவல் நிலைகள் புலிகளின் தாக்கதல்களுக்கு இலக்காகினாலும், பூநகரியைப் போல இவ்விடங்களிலிருந்து கனரக துப்பாக்கிகளை அபகரித்துச் செல்லாமல் தடுக்கவே இந்த முன்னேற்பாடு எனக் கூறப்படுகிறது.

தாண்டிக்குளம் ஊடாக புலிகள் சிவிலியன்களைப் போல உள்ளே ஊடுருவி, இங்கு முன்னரே பதுக்கி வைத்துள்ள ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்ற சந்தேகமும் படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களை இலகுவாக மடக்கிப் பிடித்து செயலிழக்கச் செய்ய வேண்டும் என்பதிலும் முனைப்பான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் முக்கியமானது அபாயச் சங்கொலி எழுப்பி பாதசாரிகள், சைக்கிளோட்டிகள், வாகனங்கள் என்பவற்றை அந்தந்த இடத்திலேயே அசையாமல் நிறுத்த எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் படையினர் தீர்மானித்துள்ளார்கள்.

இதுகுறித்து பொதுமக்களுக்கு அறிவித்துள்ளதுடன் கடந்தவாரம் மூன்றுமுறிப்பு, வெளிக்குளம், தாண்டிக்குளம், வேப்பங்குளம் ஆகிய எல்லைப் பகுதிகளை உள்ளடக்கிய வவுனியா நகரச் சூழல் முழுதையும் சுமார் முக்கால் மணிநேரம் ஸ்தம்பிதப்படுத்தி பாதுகாப்பு ஒத்திகை ஒன்றையும் படையினர் மேற்கொண்டார்கள்.



*சரிநிகர் மாதம் இருமுறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும் பத்திரிகைச் சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும், இனத்துவ சமத்துவத்துக்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துகளும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகை நாகரீகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.*

*சந்தா:*
*உள்நாடு:175/=*
*வெளிநாடு : 30U.S.$*

*சந்தாவை காசுக்கட்டளை/தபாற் கட்டளை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.*

*எல்லாத் தொடர்புகளுக்கும்*
*ஆசிரியர்*
*'சரிநிகர்'*
*18/2 அலோசாலை*
*கொழும்பு - 03*
*தொலைபேசி: 574047*

நன்றி - நூலகத்திட்டம்



சரிநிகர்
18/2, அலோசாலை
கொழும்பு-03
தொலைபேசி:574047

பிரதம ஆசிரியர் உ. சேரன்

# ஈழத்தை உருவாக்கப் போவது

# புலிகளல்ல; அரசே!

நவம்பர் 26.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறந்த நாள்.

வடக்குக் கிழக்கில் அவரது பிறந்தநாளை புலிகள் கொண்டாடினார்களோ இல்லையோ கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அதைப் பற்றி பேசாதவர்களே இல்லை என்று சொல்லுமளவுக்கு பரபரப்பு.

குண்டுகள் வெடிக்கும்; தாக்குதல்கள் நடக்கும் என்று இரண்டு வாரங்களுக்கு முன்பிருந்தே பரபரப்பான தகவல்களை அரச ஏஜென்சிகளை மேற்கோள் காட்டி பத்திரிகைகள் வெளியிடத் தொடங்கியிருந்தன.

கொழும்புக்குத் தாக்குதல் நோக்கத்துடன் புலிகள் ஊடுருவி இருப்பது பற்றிய 'தகவல்களை' அடிக்கடி தந்து கொண்டிருக்கும் புலனாய்வுத் துறையின் அறிவிப்புக்களின்படி நூற்றுக்கணக்கான புலிகளை பொலிசார் தலைநகரில் கைது செய்து விட்டதாக அறிவித்தன இப் பத்திரிகைகள்.

எங்காவது குண்டு வெடிக்கலாம் என்பதால் எங்கேயும் வெளியே போக வேண்டாம் என்ற வாய்மொழிச் செய்திகள் பரவலாகப் பரவியிருந்தன.

கூடவே இன்னும் ஒரு செய்தியும் பரவியிருந்தது.

அதுதான் பிரபாகரனின் பிறந்த நாளை 'கேக்' வெட்டிக் கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக வெளிவந்த செய்தியாகும்.

இந்தக் 'கேக்' என்பது வேறொன்றுமில்லை. கொழும்பு வாழ் தமிழ் மக்களில் சிலரை வெட்டித் தெருவிலே வீசி விடுவதுதான்!

1983 ஜூலை கலவரத்தின் போதைய அனுபவங்களுடன் இவற்றைச் சிறப்பாக செய்வதற்கான முஸ்தீபுகள் திரைமறைவில் நடந்துதான் இருக்கின்றன என்ற தகவல்கள் இப்போது வந்து கொண்டிருக்கின்றன.

இராணுவ வட்டாரங்களுக்குள் இரகசியமாக திட்டமிடப்பட்ட இந்தக் 'கேக்' வெட்டும் நிகழ்ச்சி எப்படியோ வெளித் தெரிய வந்ததைத் தொடர்ந்து அரசுக்கு பலத்த நெருக்கடி ஏற்படத் தொடங்கியதாகத் தெரிய வருகிறது.

சர்வதேசப் பத்திரிகையாளர்கள், சர்வதேச தூதுவராலயங்கள், எதிர்க் கட்சிகள், பிற மனித உரிமைகள் இயக்கங்கள் என்று படையெடுத்த அனைவருக்கும் 'அப்படி' ஒரு நிகழ்ச்சி நடக்கவே விடமாட்டோம்' என்று உறுதி செய்து கொள்வதற்குள் அரசத் தலைமைக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

'தமிழ் மக்களை தாக்குவது புலிகளுக்கு உதவி செய்வது போன்றதே' என்று பகிரங்கமாகவே அறிவிக்க வேண்டிய நிலை பிரதமருக்கு ஏற்பட்டிருந்தது.

யுத்த முனை பற்றியும், வடக்குக் கிழக்கு நிலை பற்றியும் முற்றிலும் பொய்யான அல்லது தவறான தகவல்களையே பொதுமக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் பத்திரிகைகளும், அந்தப் பொய்களை நியாயப்படுத்த சிங்கள மக்களை அநியாயமாக ஆத்திரமூட்டி தமிழ்ப் படுகொலைகளை நடாத்துவதற்கேற்ற நிலைமையை சிருஷ்டிக்க விரும்பும் இனவாத சக்திகளும் இத்தகைய முயற்சிகளுக்காக திட்டமிட்டுக் கொண்டிருந்தன.

இராணுவ முகாம் மீதான தாக்குதல்களை சிங்கள வீரஇளைஞர்களின் மீதான படுகொலை எனவும், வடக்கு கிழக்குப் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை புலிகளின் மீதான தாக்குதல் எனவும் திரித்துப் புரட்டி எழுதும் பத்திரிகைகளுக்கும் அவற்றுக்கு செய்தி கொடுக்கும் அரச நிறுவனங்களுக்கும் இத்தகைய தொரு நிலைமை நிலவுவது அவசியமாக இருக்கிறது போலும்.

வடக்கில் நடக்கின்ற ஒவ்வொரு தாக்குதலுக்கும் தெற்கிலுள்ள தமிழ் மக்கள் மீது பழி தீர்க்கப்படுமாம் என்ற அச்சம் ஏற்படுவதைத் தவிர்க்க முடிவதில்லை.

பாதுகாப்புக்காக வவுனியாவரைக்குமாவது ஓடிப்போவது என்பது கொழும்புக்கு வந்துவிட்ட தமிழர்களின் தலைவிதியாகி விட்டது.

பிரேமதாசா கொலையின் போதும் சரி, அதற்கு முன் கூட்டுப் படை இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்ட போதும் சரி, இப்போது பூநகரி தாக்குதலின் போதும் சரி இந்த நிலை திரும்பத் திரும்ப வந்து கொண்டுதான் இருக்கிறது.

கொழும்பையும் அதைச் சுற்றியும் 'இரும்புத் தொப்பி' அணிந்த படையினரை குவித்து புலிகளின் ஊடுருவலுக்கு எதிராக நடவடிக்கையில் ஈடுபடுகிறது அரசு.

புலிகள் பிடிபடுகிறார்களோ இல்லையோ தமிழர்கள் பிடிபடுவது மட்டும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

வடக்குக் கிழக்கில் யுத்தம் நடப்பதோ, யுத்தத்தில் வெற்றி பெறுவதோ அல்ல இங்கு முக்கியம். தெற்கிலிருக்கும் தமிழர்களையும் வடக்கு நோக்கி விரட்டி விடுவதுதான் முக்கியம் என்பதுதான் இன்றைய அரசின் தீர்மானம் போலும்.


தாம் போராடுவது தமிழீழத்திற்காக என்று புலிகள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

தாங்கள் போராடுவதோ புலிகளை அழிக்க என்று அரசு கூறிக் கொள்கிறது.

புலிகளால் தமிழீழம் வருகிறதோ இல்லையோ, இந்த அரசாங்கத்தால் அது உருவாக்கப்படத்தான் போகிறது போல இருக்கிறது.

அரசுக்கே இவ்வளவு ஆசையென்றால் அதற்கு ஆதரவு தெரிவிப்பது இங்குள்ள பத்திரிகைகளின் தேசியக் கடமை என்றால் எமக்குமட்டுமென்ன?

நாங்களும் அதற்கு ஆதரவுதான்!



# கிழக்குப் பல்கலைக் கழகத்தில் முஸ்லீம் மாணவர்கள்

## -சாத்தியமான ஒரு தீர்வு?

-அ.சிவரெத்தினம் (கிழக்குப் பல்கலைக் கழகம்)

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் முஸ்லீம் மாணவர்களைச் சேர்ப்பது அம் மாணவர்களது பாதுகாப்புக்கு உகந்தது அல்ல என்று காரணம் காட்டி முஸ்லீம் மாணவர்களை நடப்பாண்டுக்கான அனுமதியில் சேர்த்துக் கொள்ள வேண்டாமென அமைச்சரவை அறிவித்துள்ளது.

பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களைச் சேர்ப்பது தொடர்பான பிரச்சினையை ஒரு இனப்பிரச்சினையாகக் காட்டிக் கொள்ள விரும்பும் சக்திகள் தமது சொந்த அரசியல் நலன்களுக்காக இந்த முடிவை எடுக்கத் தூண்டியிருக்கின்றன.

உண்மையில் அரசியல்வாதிகளால் கூறப்படுவது போல இங்கு நிலவுவது இனப்பிரச்சினையோ அல்லது பயங்கரவாதப் பிரச்சினையோ அல்ல. ஏனெனில் இங்குள்ள சமூக உறவுகள் இவற்றுக்குப் புறம்பாய் அமைந்துள்ளன. சரியாகச் சொல்வதானால் இங்கு நிலவுவது ஒரு அரசியல் பிரச்சினையே. அதாவது இரு இனச் சமூகங்களுக்கிடையில் அதிகாரம் பகிரப்படுவது சம்பந்தப்பட்டதாகும். ஆனால், இவ்வதிகாரத்துக்காக முயல்பவர்கள் இதை ஒரு இனங்களுக்கிடையிலான பிரச்சினையாகக் காட்டிக் கொண்டு இதைச் சாதித்துவிட முயல்கின்றனர்.

90ம் ஆண்டு யூனில் ஏற்பட்ட வன்முறைகளைத் தொடர்ந்து தமிழர், முஸ்லீம்கள் எனும் இனவாதம் இரு சமூகங்களைச் சேர்ந்த தலைவர்களாலும் வலுப்படுத்தப்பட்டதனால் எல்லைப்புறக் கிராமங்களின் மக்கள் வெளியேற்றம் என்பது இரு சமூகத்தாருக்கும் பொதுவானதாகவே இருந்தது. இந்த அடிப்படையிலேதான் கிழக்குப் பல்கலைக் கழக முஸ்லீம் மாணவர்களின் வெளியேற்றமும் அமைந்தது. பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்களாலும் நிர்வாகத்தினராலும் பிற்காலங்களில் முஸ்லீம் மாணவர்களை கிழக்குப் பல்கலைக்கழத்திற்கு திரும்ப வரவழைப்பயில் இருக்கும் போது, புவியியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் தனித்திருக்கும் சிங்கள மாணவர்களுடன் ஒப்பிடுவது வேடிக்கையானதாகும்!

இது போன்றே இவர்கள் பாதுகாப்பு சம்பந்தமாக கூறும் காரணமும் வேடிக்கையானதாக உள்ளது. ஏனெனில் இன்று ஊழியர்களும், மாணவர்களுமாக 23 முஸ்லீம்கள் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து கடமையில் எவ்வித இடையூறும் இன்றி ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களின் உயிருக்கு உத்தரவாதமும் பாதுகாப்பும் எங்கிருந்து யாரால் வழங்கப்படுகின்றன? அத்தோடு இப்பல்கலைக் கழகத்தால் நடாத்தப்படும் வெளிவாரிப் பட்டப் படிப்பில் 40 மாணவர்களும் தமது கல்வியை இங்குதான் தொடர்கின்றனர். திறந்த பல்கலைக் கழகக் கற்கை நெறிகளுக்கும் மாணவர்கள் சமூகங் கொடுக்கின்றனர். இது மட்டுமன்றி மட்டக்களப்பு நகரிலுள்ள 75%க்குமதிகமான வர்த்தக ஸ்தாபனங்கள் முஸ்லீம் வர்த்தகர்களுடையனவே. நகரில் தமிழர்களுடன் சேர்ந்து ஏறத்தாள 500 முஸ்லீம் குடும்பங்கள் வசிக்கின்றன, அவர்களினதும் தமிழர்களினதும் தேவைகளும் நிர்வாகங்களும் ஒருவ



கருத்திற் கொண்டுதான் மேலே குறிப்பிடப்பட்ட 14ம் திகதிய கலந்துரையாடல் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. முஸ்தபா, திரு. ரஹ்மான், கிழக்குப் பல்கலைக் கழக முஸ்லீம் விரிவுரையாளர் போன்ற மட்டக்களப்புப் புத்திஜீவிகளினால் முஸ்லீம் மாணவர்களுக்கென தனியாக ஏறாவூரிலும் காத்தான்குடியிலும் விடுதி வசதியும் போக்குவரத்து வசதியும் செய்துதரப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

ஆயினும், இதைத் தொடர்ந்து பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு முஸ்லீம் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக பரிசீலனையில் ஈடுபட்டிருந்த வேளையிலும் கிழக்குப் பல்கலைக் கழகத்தை வசதி குறைந்த முஸ்லீம் மாணவர்கள் தெரிவு செய்திருந்த வேளையிலும் அமைச்சரவையானது முஸ்லீம் மாணவர்களை அவர்களின் பாதுகாப்புக் காரணங்களுக்காக இப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்க வேண்டாமெனக் கேட்டுள்ளது. இதனால் 92/93ம் கல்வியாண்டுக்கான முஸ்லீம் மாணவர்கள் கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு வருதல் தடை செய்யப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இல்லாத வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக இரு சமூகத்திரும் நிர்வாகத்தினருடனும், அரசுடனும் போராடுவதற்குப் பதில் 'வேலைக் கள்ளிக்குப் பிள்ளைச் சாட்டு' என்ற போக்கில் இனப் பிரச்சினையைக் காரணம் காட்டி நழுவிச் செல்வது ஆபத்தானதாகும். இது காலப் போக்கில் அறிமுகம், நட்பு என்ற உறவுகள் அற்று அந்நியப்பட்ட நிலைமை உருவாவதற்குக் காரணமாகிவிடும். உண்மையில் இனங்களுக்கிடையிலான பிரச்சினை அப்போது தான் தோன்றும்.(இதுதான் அரசியல் வாதிகளுக்கு வேண்டியது!)

முடிவாக, இன்று வளர்ந்து கொண்டிருக்கும் மாணவ சமுதாயம் இதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளவோ,

தில் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன.

இறுதியாக 14.8.93 அன்று இடம்பெயர்ந்த முஸ்லீம் மாணவர்களுடனும் அவர்களின் பெற்றோர்களுடனும் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மீண்டும் தமது கல்வியைத் தொடர்வதற்கு உள்ள இடர்பாடுகளைக் களைவதற்கான கலந்துரையாடல் ஒன்று பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இக் கூட்டத்துக்கு மாணவர்களும் பெற்றோர்களுமே அழைக்கப்பட்டிருந்த போதிலும் தனிப்பட்ட சில நபர்களும் வந்து அக் கூட்டத்தைக் குழப்பினர். அவர்களால் முஸ்லீம் மாணவர்கள் இங்கு கல்வியைத் தொடரமுடியாது என்பதற்கு சுட்டிக்காட்டப்பட்ட காரணங்கள் அர்த்தமுள்ளவையாக இருக்கவில்லை. அதாவது கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்பதே அவர்கள் முன் வைத்த பிரதான காரணமாகும். அத்தோடு திரு.அஷ்ரப் அவர்களினால் ஜனாதிபதிக்குக் கொடுக்கப்பட்ட மகஜர் ஒன்றில் ''சிங்கள மாணவர் ஒருவருக்கு கிழக்குப் பல்கலைக் கழகம் பாதுகாப்பு அற்றதானால் முஸ்லீம் மாணவருக்கு அது எவ்வாறு பாதுகாப்பானதாக இருக்க முடியும்'' எனவும் பாதுகாப்பு சம்பந்தமாக சிங்கள மாணவர்களோடு முஸ்லீம் மாணவர்களை ஒப்பிட்டும் கூறியிருந்தார். உண்மையின் சார்பாக நின்று சிந்திக்கின்ற எந்த மனிதனாலும் இவ்வொப்பீட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் புவியியல் ரீதியாகவும், சமூக உறவு ரீதியாகவும் தமிழர்களும், முஸ்லீம்களும் மட்டக்களப்பில் பின்னிப் பிணைந்த நிலையில் ஒருவர் தங்கியிருத்தல் என்ற நிலையிலேயே நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பது சகலரும் அறிந்ததோர் உண்மையாகும். இது இவ்வாறிருக்கும் போது கிழக்குப் பல்கலைக் கழகத்தில் முஸ்லீம் மாணவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று குரல் ஒலிக்கிறதென்றால் அதற்கான காரணம் என்ன என்பதை அடையாளம் காண வேண்டும். உண்மையில் இது சாதாரண கிழக்கு முஸ்லீம் மக்களால் எழுப்பப்படுவதில்லை. கொழும்பை மையமாகக் கொண்டு வாழ்கின்ற முஸ்லீம்களாலும் மட்டக்களப்பின் வசதி படைத்த முஸ்லீம்களாலுமே எழுப்பப்படுகின்றது. ஏனெனில் கொழும்பை மையமாகக் கொண்டு வாழ்பவர்கள் தங்கள் பிள்ளைகளை தங்களோடு வைத்துப் படிப்பிக்கவும் கிழக்குப் பல்கலைக் கழகத்தை விடப் பலமடங்கு வசதிகளைப் பெற்றிருக்கும் பல்கலைக் கழகங்களில் அவர்களைச் சேர்க்க விரும்புவதாலும் இதைத் தவிர பல்கலைக் கழகங்களுக்கு வெளியே வேறு கல்வி நிலையங்களால் கற்பிக்கப்படும் பிற டிப்ளோமா பாடநெறிகளை கற்பிப்பதற்கும் ஏதுவாகவே இவ்வாறு குரல் எழுப்புகின்றனர். இது போலவே வசதி படைத்தவர்களும் மேற்கூறப்பட்ட வசதிகளுக்காக பணத்தைச் செலவளிக்கவும் தயாராக உள்ளனர். இவர்களே முஸ்லீம் மக்களின் தலைவர்களாகவும் இருப்பதால் தமது விருப்பத்தை இனங்களுக்கிடையான பிரச்சினை என்ற போர்வையின் கீழ் நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

உண்மையில் இதனால் பாதிக்கப்படுபவர்கள் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே. இவற்றைக் பல்கலைக் கழக மாணவர்களினால் கட்டியெழுப்பப்படும் உறவு முறைகளினூடாகவேதான் இன்றைய அதிகார வெறியர்களின் நரித்தனமான நடவடிக்கைகளை வென்று இரு இனங்களுக்குமிடையில் புரிந்துணர்வையும் சமாதானத்தையும் ஏற்படுத்தலாமென விளங்கிக் கொள்ளவோ அதிக காலம் எடுக்கப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம் என்று கூறிக் கொள்ளாலாம்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் முஸ்லீம் மாணவர்கள் கல்வி கற்பது பாதுகாப்பு அற்றது என்ற கருத்து பரவலாக முன்வைக்கப்படுகிறது. இப் பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்படும் முஸ்லீம் மாணவர்களுக்கு அங்கு கல்வி கற்பது ஆபத்தானது என்று கருதும் அரசியல்வாதிகளோ அரசோ இம் மாணவர்களுடைய கல்விக்கான சரியான ஒரு தீர்வை முன்வைக்கவில்லை. முஸ்லீம் மாணவர்களுக்கான தனியான பல்கலைக் கழகம், இஸ்லாமியப் பல்கலைக் கழகம், கிழக்குப் பல்கலைக் கழகத்தை முஸ்லீம்கள் வாழும் பிரதேசத்துக்கு மாற்றுதல் என்பன சில தீர்வுகளாகக் கூறப்பட்ட போதும் அவை பேச்சளவிலேயே நின்று விட்டன. இக் கட்டுரையாளர் தமது கருத்தை தெரிவிக்கின்றார். வாசகர்களிடமிருந்தும் கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

-ஆர்

நன்றி - நூலகத்திட்டம்



## யாழ்ப்பாணம் இன்று — 13

பின்னோக்கிப் பார்க்கலாம். 1985 போராட்டம் உச்சம் பெறா விட்டாலும் போராட்டம் பற்றிய நம்பிக்கை உச்சம் பெற்றிருந்த காலம்.

அரசியல், ஆயுதம், கலாசாரம், கலை நிகழ்வுகள் யாவும் போராட்டப் பக்கம் திருப்பப்பட்டது.

துயரம் தரும் நிகழ்வுகள் நிறைய நடந்த காலம்தான். எனினும் போராட்டம் செம்மைப்படுத்தப்படும்: அது முன்னோக்கி நகர்த்தப்படும் என நம்பிக்கை கொண்டிருந்த காலம்.

1983இல் இறுதியில் யாழ்ப்பாணத்தில் விடுதலை இயக்கங்கள் வளரத் தொடங்கவில்லை; வீங்கத் தொடங்கின. பழுக்கவில்லை; வெம்பின. ஆனால் பழம் என்று நம்பினோம்; வளர்ச்சி என்று நம்பினோம்.

1984இல் இயக்கங்களுக்குள்ளேயே போராட்டம், மோதல்கள், முரண்பாடுகள் அதிலிருந்து தெளிவு அல்லது இனம் காணல்.

அமைப்புக்களிலிருந்து வெளியேறியோர் அல்லது உள்ளிருந்தோர் அல்லது புதிய அமைப்பை உருவாக்கியோர் அல்லது இருந்த அமைப்பில் இருந்து கொண்டே சரியான திசைக்காக, ஜனநாயகத்துக்காகப் போராடியோர்- இவர்கள் குறித்து தெளிவு பிறக்கத் தொடங்கியது 1985.

போராட்டத்துக்குள் போராட்டம் என மக்களே அமைப்புக்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டினர்; கேள்விகள் கேட்டனர்; ஊர்வலம் போயினர்.

பலர் போராட்டம் பற்றி நம்பிக்கை கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலாசாரக் குழு போராட்டம் குறித்து பல கலை நிகழ்வுகளை மேடையேற்றியது. மண் சுமந்த மேனியர் நாடகம். மாயமான் வீதி நாடகம். இந்த மண்ணும் எங்கள் நாட்களும் கவிதா நிகழ்வு. நாமார்க்கும் குடியல்லோம். வில்லுப்பாட்டு. கதாப் பிரசங்கம், ஓவியக் கண்காட்சி. இவை பிரதான நிகழ்வுகள்.

### மானிடவர் நாமிங்கு மரணத்துடன் சம்பாசிக்கிறோம்

அந்த நாட்கள் நன்றாக ஞாபகம் இருக்கிறது. ஊர் ஊராக மண் சுமந்த மேனியர் மேடையேறுகிறது. அதன் பிறகு ஊர்கள் தோறும் சந்திசந்தியாக மாயமான் வீதி நாடகம் மேடையேறுகிறது.

'எம்மைத் தெரிகிறதா? எங்கள் குரல் கேட்கிறதா?' எனும் கேள்வியுடன் மாயமான் வீதி நாடகம் தொடங்குகிறது. இந்தக் குரலுக்குரியவன் தாடியும், கறுத்து மெலிந்த உருவமும் கொண்ட- தில்லை.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் இயங்கியவன். பின் முரண்பாடுகளினால் விலகி,பின்னும் அரசியல் வேலைகளில் ஈடுபாடு கொண்டவன்.

விரக்திப்படாது இருப்பதற்கு நாடக வாழ்க்கையில் தன்னை இழப்பதற்குச் சம்மதித்தான்.

மாயமான் நாடகத்தில் தன்னுடன் நடித்த நண்பன் ஒருவனுக்கு அவன் கடிதம் எழுதியிருந்தான்.

'.... எதை எழுத? எதுவுமே நம்பிக்கை அளிக்கும் வகையில் இல்லை. கடந்த கால வாழ்வின் நம்பிக்கையான, அர்த்தபுஷ்டி நிறைந்த அந்த வாழ்வின் எந்த அம்சமும், எந்தக் கணமும் இலகுவில் மறந்து போகக் கூடியவையாக இல்லை.,... நான் திரிந்த கிராமத்துக் குடிசை வழிகள், வயல் வெளிகள், ஆற்று நீர் எல்லாமே திட்டித் தீர்ப்பன போல் உள்ளன. வெளியில் சிரித்துத் திரிய முடிகிறது. ஆனால் உள்ளுக்குள் வெட்கப்படாமல், அழாமல் இருக்க முடியவில்லை. அடே நண்பா, எப்படியடா உன்னை மறக்க முடியும்? மாயமான் வாழ்க்கை என்ன மாயமாக மறைந்து போய்விடும் என்றா நினைக்கிறாய்?'

தில்லை பின்வரும் வரிகளுடன்தான் கடிதத்தை முடித்திருக்கிறான்.

'... எந்த ஏகாதிபத்தியத்திடமும் ஜனநாயக விரோத சக்திகளிடமும் சரணடையாமல், மக்களைப் பணயம் வைத்து போராடாமல், போராட்டம் பரிணாம வளர்ச்சி அடையும் என்ற நம்பிக்கை நிறையவே உண்டு.... அன்புடன் தில்லை/ நவம்பர், 1988'

இது தில்லையைப் பற்றி விளங்கிக் கொள்ளப் போதுமானது.

இறுதிக் காலங்களில் வவுனியா பாவற்குளத்தில் ஆசிரியர் தொழிலும், ஓய்ந்த நேரங்களில் புத்தகங்கள் படித்தலும், தேடலும். இது தில்லையின் வாழ்க்கை.

இன்னொருவன் **தர்மலிங்கம்.** பெரிய மீசையும், குதூகலமான முகமும், புத்திசாலித்தனமான உரையாடலும், ஓயாத உழைப்புமாக இருப்பவன்.

பின்னர் பல்கலைக்கழகத்தில் , விஞ்ஞான பீடத்தில் படிப்பைத் தொடரவில்லை. ''நான் எவ்வளவு பேரை இயக்கத்துக்கு இழுத்தனான். அதிலை பல பேர் செத்துப் போச்சினம். எனக்கு வசதி இருக்கெண்டு நான் படிச்சால் என்னை நம்பி வந்து ஆத்தலையிற வைக்கு ஆர் மறுமொழி சொல்லுறது? '' என்று கேட்பான்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் இயங்கிப் பின் பிரிந்தவன். பிற்காலத்தில் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் (T.R.R.O) போன்ற சமூக சேவை நிறுவனங்களில் வேலை செய்தான்.

மாயமான் நாடகத்தில் இவனும் நடித்திருந்தான். ஒப்பாரியொன்று வைப்பான். ''கொழும்பிலை வந்து குண்டு போடுவாய் எண்டெல்லோ பாத்திருந்தம். குண்டும் நீ போடெல்லை; குண்டு போடவும் எங்களை விடேல்லையெணோய்ய்ய்.....'' என்று ராஜீவ் காந்தியைப் பார்த்து ஒப்பாரி வைப்பது போல நடிப்பான். நடிப்பவர்களுக்கே சிரிப்பு.

இவன் **தர்மலிங்கம்.**

மற்றவள் **செல்வி**

வவுனியாவில் ஒரு கிராமத்திலிருந்து, அமைப்பு வேலை செய்யப்புறப்பட்டவள். தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தில் இணைந்திருந்தவள். பின் விலகிக் கொண்டவள்.

**தோழி** எனும் சஞ்சிகையின் ஆசிரியை. கவிஞர். தேடல் கொண்டவள். முயற்சி உழைப்பு மிக்கவள். பின்நாட்களில் பெண்நிலைவாத கருத்துக்களால் கவரப்பட்டவள்.

அரசியலும் தன்னைக் கைவிட்டுப் போனபோது, உயர்தரப் பரீட்சை எடுத்துப் பல்கலைக்கழகம் புகுந்தாள். யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் நாடகமும் அரங்கியலும் பகுதியில் இரண்டாம் வருட மாணவி. பிற்காலத்தில் நாடகத்துறையில் ஆர்வம் கொண்டவள்.

**தில்லை, தர்மலிங்கம், செல்வி**

இவர்கள் மாத்திரமல்ல; இன்னும் பலர்.

**ரம்ணி** என்றழைக்கப்படுகிற செல்வகுமார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் கிடைத்தும், அரசியலுக்காக அதனைத் துறந்தவன்.

வேறும் யாழ்ப்பாணத்திலிருந்த தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி (NLFT)தமிழீழ மக்கள் விடுதலை முன்னணித் (PLFT) தோழர்கள் எனப் பலர்.


இவர்கள் மாத்திரமல்ல; புலிகளைத் தவிர்ந்த ஏனைய இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் புலிகளினால் கைது செய்யப்பட்டார்கள்.

இது யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை.

செய்த குற்றம்?- தமது வாழ்க்கையில் பலவற்றை இழந்து அரசியல் பேசியது; அதற்காக உழைத்தது; ஜனநாயகம் மறுக்கப்பட்ட போது பேசாதிருந்தது./ அவ்வளவுதான்.

யாழ்ப்பாணத்து இன்றைய நிலைக்கு இது சிகரம்.

ஜனநாயகம் மறுக்கப்பட்டது. அது கூடப் பரவாயில்லை. முன்னர் அரசியல் ரீதியாக வேலை செய்தவர்கள் இக்காலம் கண்காணிக்கப்பட்டார்கள். கைது செய்யப்பட்டார்கள். பங்கருக்கு அனுப்பப்பட்டார்கள். கொல்லப்பட்டார்கள்.




அயலில் குசுகுசுப்பதற்குக் கூட மக்கள் அஞ்சினார்கள். முன்னர் ஏதோ ஒரு அமைப்பில் வேலை செய்தவர்கள் இக்காலங்களில் மிக மிக அஞ்சினார்கள். ஒவ்வொரு நாள் இரவிலும் வேலியோர சரசரப்பிற்கும் அஞ்சினார்கள்.

விரைந்து செல்கின்ற வாகனம், தன் வீட்டடியில் வேகம் குறைப்பதைக் கண்டு நெஞ்சம் பதறினார்கள்.

ஒவ்வொரு நாளும் மரணம் கலந்த வாழ்க்கை.

சிறிலங்கா இராணுவம், தேடினாலும், துரத்தினாலும், தப்பலாம். ஓடி ஒளிக்கலாம். புலிகளின் தேடலுக்கு ஓட இயலாது. தப்ப முடியாது. பொறிக்குள் அகப்பட்ட எலிதான்.

இருப்பு மிக அபாயகரமாக இருந்தது.

இத்தகு நிலை கற்பனைக்கு அகப்படாத பயங்கரம்.

ஒருவர் கூறுகிறார். கவனியுங்கள். ''நானென்ன செய்ய? ஏன் கலியாணம் முடிச்சன் எண்டு இருக்கு. மனைவி. இரண்டு பிள்ளைகள். ஐயாவும், அம்மாவும் என்னோடை. புலிகள் என்னைப் பிடிப்பார்களா? தெரியாது. பிடிக்க மாட்டார்களா? அதுவும் நிச்சயமில்லை. அவர்களிடம் கேட்க முடியுமா?

பிடித்தால் உடன் பங்கருக்குள். அது நிச்சயம். என்ன காரணம் சொல்வார்கள்? சொல்வதற்கா காரணம் இல்லை? சமூக விரோதி. பிடித்தால் விடுவார்களா? தெரியாது. பிடித்தால் மனைவி, பிள்ளைகள், ஐயா, அம்மா இவர்களை யார் பார்ப்பது?

பிடிப்பார்கள் என்பது நிச்சயமாகத் தெரிந்தால் யாழ்ப்பாணத்தை விட்டு ஓடலாம்.பாஸ் எப்படி பெறுவது?

அது சரி, இவ்வளவு ஏன் பயப்பிட வேண்டும்? என்ன குற்றம் செய்தேன்? அரசியல் பேசியது குற்றமா?

தப்புவதற்கு ஒரு வழி - புலிகளுடன் சேர்வது. அதனையும் அவன் சந்தேகமாகப் பார்ப்பான். அது போதும் பங்கருக்கு அனுப்ப.

சரி, அப்ப என்ன செய்யலாம்?

**அருணா பர்மேஸ்வரன்**

---

## இயக்கவெறி? ௨

**சரிநிகர்: ஜனநாயக வழிமுறைமூலம் அரசுடன் பேசி இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்று காணலாம் எனப் பாராளுமன்ற அரசியலில் இறங்கினீர்கள். ஆனால் ஜனாதிபதி அவர்களோ இங்கு நிலவுவது இனப்பிரச்சினை அல்ல; வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே என அண்மைக் காலமாகத் தெரிவித்து வருகிறார். இதைப் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

**சுரேஸ்:** நீங்கள் கூறுவது போல் சுருக்கமான வழிகளில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று கருதி நாம் பாராளுமன்றம் செல்லவில்லை. இலங்கை அரசாங்கத்தின் நாற்பது வருட அரசியல் வரலாற்றில் பல பேச்சு வார்த்தைகளும் ஒப்பந்தங்களும் ஏற்பட்டு அவை தோல்வியில் முடிவடைந்ததையும் நாம் அறிவோம். தமிழ் மக்களின் பிரச்சினை பன்முகப்படுத்தப்பட்ட ரீதியில் பல்வேறு தளங்களிலும் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்பதையும் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களென நம்புகிறேன். அடுத்ததாக வட-கிழக்கில் மாகாண அரசு உருவாக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களுக்குக் குறைந்த பட்சத் தீர்வு ஒன்று அதனூடாக ஏற்படுத்தப்பட்ட பின்னரும்தான் நாம் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றோம். நாம் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் போது மாகாண அரசிற்கு மேலதிகமான அதிகாரங்களை எடுப்பதற்கு எம்மால் இயன்றவரை பாராளுமன்றத்தினூடு முயற்சி செய்வோமென தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறினோம். எனவே அடிப்படையில் நாம் பாராளுமன்றத்திற்கு வரும் போது தமிழ் மக்களுக்கு ஓர் குறைந்தபட்சத் தீர்வு கிடைத்திருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள் என நம்புகின்றேன்.

ஆனால் கடந்த காலங்களைப் போலவே ஸ்ரீ லங்கா அரசாங்கம் மீண்டும் மோசடி நடவடிக்கையில் இறங்கியது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வட-கிழக்கு மாகாண அரசை ஸ்ரீ லங்கா அரசாங்கம் சீரழித்தது. இதற்குப் புலிகளும் உறுதுணையாக இருந்தார்கள். எமது சொந்தப் போராட்ட அரங்கிலேயே ஜனநாயக மறுப்பு. நண்பர்களைப் பகைவர்களாக்கும் போக்கு அதிகரித்ததன் தவிர்க்க முடியாத விளைவுகளாலும் மக்களுக்கு ஏற்பட்ட நிர்க்கதியான நிலைமையைக் கருத்திலெடுத்து நாம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டோம். இவற்றைக் கவனத்திலெடுத்தே நாம் செயற்பட வேண்டியிருந்தது. கொக்கட்டிச்சோலை தொடக்கம் வடமராட்சி வரை மக்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் போது: வடமராட்சியில் எதிர்த்து நிற்க முடியாமல் புலிகள் பின்வாங்கி இந்தியாவுக்குச் சென்று கொண்டிருந்த போது மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வாய்திறக்க முடியாமல் இருந்த நேரத்தில் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடவும் சரி பிழைகளை ஆராய்ந்து போராட்டத்தைச் சரியான திசைவழியில் கொண்டு செல்லவும் இடையில் ஓர் அவகாசம் தேவைப்பட்டது. இதன் அடிப்படையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடு உருவாக்கப்பட்ட மாகாண அரசு முறையை ஓர் 'இடைக்கால'த் தீர்வாக நாம் ஏற்றுக் கொண்டோம். மிக நீண்ட காலத்தின் பின்னர் தமிழ் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் குறைந்தபட்சத் தீர்வு இதுவாகும். இந்தத் தீர்வானது எமது மக்கள் வட-கிழக்கில் தமது நிர்வாகங்களை தாமே நடத்திச் செல்லக்கூடியவாறு ஓர் மாகாண அரசு முறையைக் கொண்டிருந்தது. இதற்காக 13வது திருத்தச் சட்டத்தினூடு அரசு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு இருந்தது. அதிகாரங்கள் போதாமை போன்ற பல பலவீனங்களும் இதில் இருந்துள்ளன என நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனாலும் எமக்குக் கிடைத்த அதிகாரங்களை அமுல்படுத்துவதற்கு நாம் ஆட்சியாளர்களுடனும் புலிகளுடனும் போராட வேண்டியிருந்தது. இப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான தோழர்களையும் பலிகொடுக்க வேண்டி இருந்தது. இதன் பின்னர்தான் மாகாண அரசைப் பலப்படுத்தவும் அதற்கான அதிகாரங்களைப் பெற்றெடுப்பதற்குமான பாராளுமன்றத்தில் குரல்கொடுக்க வேண்டும் எனவும் நாம் முடிவு செய்தோம். அதுமாத்திரமல்லாமல் அரசு மாகாண சபைக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க மறுத்ததையும் அம்பலப்படுத்த வேண்டி இருந்தது. இந்த அடிப்படையில்தான் நாம் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு வந்தோம். நாம் கூறிய உறுதிமொழியை எம்மால் இயன்ற வரை செயல்படுத்தியும் அரசாங்கத்தின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத , தமிழ் இன விரோத நடவடிக்கைகளை நாம் அம்பலப்படுத்தி வந்திருக்கிறோம். குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எப் மாத்திரமே இந்த அம்பலப்படுத்தல்களைச் சிறப்பாக செய்திருக்கிறது எனக் கருதுகிறேன். ஆனால் புலிகளும் அரசாங்கமும் இணைந்து மாகாண அரசை சீரழித்ததால் அதிக அதிகாரங்களைப் பெறுவதற்கான முயற்சிகள் தோல்வியிலே முடிந்தன. அச்சமயத்தில், புலிகளும் கூட ஈரோஸுக்குள் புகுந்து கொண்டு பாராளுமன்றத்துக்குள் வந்திருந்தார்கள் என்பதை நீங்களும் அறிவீர்கள்.

தமிழ் மக்களுக்கு சுயாட்சி அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் அதற்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் வடகிழக்கு இணைந்த ஓர் அரசியல் அலகு உருவாக்கப்படல் வேண்டும் இவற்றின் ஊடாகவே தமிழ் மக்கள் கௌரவத்துடனும் சுதந்திரத்துடனும் வாழக்கூடிய சூழ்நிலை தோன்றும் என நாம் கருதுகிறோம். இப்படியான ஓர் நிலையை வெறுமனே பேச்சுவார்த்தை மூலம் பேசித் தீர்த்து விடலாம் என நாம் நம்பவில்லை. சர்வதேச நெருக்குதல்கள் மக்கள் அபிப்பிராயத்தைத் திரட்டுதல் போன்றவற்றின் ஊடாகவும், இலங்கை அரசு சிங்கள இனவெறிக்குள் கட்டுண்டு பிரச்சினைக்குத் தீர்வொன்று வைக்க இயலாமையை அம்பலப்படுத்துவதன் ஊடாகவும் சிங்கள ஜனநாயக முற்போக்கு சக்திகள் மத்தியில் எமது நிலையை தெளிவுபடுத்துவதன் மூலமாகவும் மேற்கண்ட சூழலை உருவாக்க நாம் முயற்சித்து வருகின்றோம்.

அரசினாலும் புலிகளாலும் ஜனநாயக உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்ட மக்கள் வெளியில் வந்து கருத்துச் சொல்ல முடியாத நிலை நிலவுகின்றது. எனவே எமக்குச் சாதகமான நிலையில் உள்ள அத்தனை வழிகளையும் பயன்படுத்தியும் வருகின்றோம்.

ஜனாதிபதி இலங்கையில் நிலவுவது இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதப்பிரச்சினை தான் எனக் கூறி வருவதை நாம் மிகவும் வன்மையாக கண்டித்து வருவதுடன் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இவரது மோசமான கூற்றுக்களை அம்பலப்படுத்தி வருகின்றோம். பேரினவாத எண்ணங்களை பிரதிபலிக்கும் இப்பேச்சுக்களுக்கு எதிரான ஓர் கருத்துருவாக்கத்தை தென்னிலங்கை அரசியல் மத்தியில் ஏற்படுத்தி வருவதுடன் ராஜதந்திர மட்டத்தில் இதனை விளங்கப்படுத்தி வருகின்றோம். இலங்கையில் நிலவும் பயங்கரவாதம் புலிப்பயங்கரவாதம் மாத்திரமல்ல அதன் மூலவேராகவே இருக்கும் அரச பயங்கரவாதமும் தான் என்பதனையும் நாம் சகல இடங்களிலும் பிரச்சாரப்படுத்தி வருகின்றோம். ஆகவே இன்றைய இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்பதையும் வலியுறுத்தி வருகின்றோம். 1983 க்குப் பின் அடக்கி வாசிக்கப்பட்ட பேரினவாத முணுமுணுப்புக்கள் இன்று வெறிக்கூச்சலாக மாறி வருவதையும் எதிர்த்து வருகின்றோம்.

**சரிநிகர்: கடந்த ஐந்துவருட ஜனநாயக வழியில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையில் ஏதாவது ஒன்றுக்குத் தானும் தங்களால் தீர்வு காண முடிந்ததா? உதாரணமாக வட-கிழக்கு இணைப்பு, அதிகார பரவலாக்கம், குடியேற்றம்?**

**சுரேஸ்:** நீங்கள் கூறும் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு நாம் ஆளும் கட்சியி

நன்றி - நூலகத்திட்டம்



னரோ ஆட்சியாளர்களோ இல்லை என்பதை முதலில் நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டும். அதேபோல் மாற்று ஆட்சியை உருவாக்கக்கூடிய பலத்தை கொண்ட எதிர்கட்சியினரும் அல்ல. மாறாக ஒரு சிறுபான்மை தேசிய இனத்தின் அடக்கு முறைக்கு எதிராக அவர்களது அடிப்படை உரிமைகளுக்காக போராடுவதே எமது பணி. இதனை நீங்கள் தெளிவாக விளங்கிக்கொள்ளவேண்டும். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பேரினவாத சக்திகள் புரிந்து கொண்ட அளவிற்கு தமிழர் தரப்பில் புலிகளோ புத்திஜீவிகளோ வேறு சில அரசியல் சக்திகளோ இன்னும் புரிந்து கொள்ள வில்லை. ஒப்பந்தத்தில் அங்கீகரிக்கப்பட்ட குடியேற்றம், அதிகாரப் பரவலாக்கல், பாதுகாப்பு முதலான விடயங்களில் அரசு தயக்கம் காட்டிய போது அல்லது விருப்பமின்றி இழுத்தடிப்பு வேலை

> ''முன்னைய ஈழப்பிரகடனத்தையும் இப்போது இலங்கைப் பாராளுமன்றத்தில் இருப்பதையும் ஒப்பிடுவது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்றதே!''
>
> -சுரேஷ் பிரேமச்சந்திரன்

களை மேற்கொண்ட போது வட-கிழக்கு மாகாணசபை தானாகவே அவற்றை அமுல் செய்தது. ஆனால் அவற்றையெல்லாம் சீரழிப்பதில் புலிகள்-அரசு சேர்ந்து செயல்பட்டார்கள். வட-கிழக்கு மாகாண அரசு நடவடிக்கைகளைச் சீரழிப்பதில் அரசு அக்கறையாக இருந்தது. அதிகாரப் பகிர்ந்தளிப்பானது வட-கிழக்கு தனிநாடாவதற்கு வழியாகி விடும் என்று அரசு அச்சமுற்றது.

வட-கிழக்கு இணைப்பு, அதிகாரப்பரவலாக்கம், குடியேற்றம் போன்ற எந்த விதப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண வேண்டுமாயின் அடிப்படையில் நாம் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். அதிகாரம் தமிழ் மக்களின் கையில் இருக்கும் பட்சத்திலேயே குடியேற்றம் போன்றவை கட்டுப்படுத்த முடியும் என்பதுடன் வட-கிழக்கு இணைப்புக்கான பலமான அத்திவாரத்தையும் இட முடியும். வட-கிழக்கில் மாகாண அரசு இருந்த போது இந்த நிலையே இருந்தது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.


இரண்டவதாக ஜனநாயக வழியில் ஏதேனும் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிந்ததா என்று நீங்கள் கேட்கும் கேள்வி. ஜனநாயகத்தின் மீது ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனத்தையே பிரதிபலிப்பதாகவே நான் கருதுகிறேன். இலங்கையில் இனவாத அரசின் துரோகங்கள் உங்களுக்கு நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், நாம் மனம் தளராமல், முயற்சி செய்வோமாயின் நிச்சயமாக, தீர்வை நோக்கி நாம் முன்னேறலாம் என்றே கருதுகின்றேன். அத்துடன் ஜனநாயக முறை என்பது வெறுமனே அரசுடனான பேச்சுவார்த்தை மாத்திரமல்ல. மக்கள் எழுச்சி, சர்வதேச நிர்ப்பந்தங்கள், போன்றவையும் ஜனநாயக ரீதியான அழுத்தங்களை குறைத்து மதிப்பிட முடியாது. உலகின் முக்கிய பிரச்சினைகளான தென்னாபிரிக்க விடுதலை, பாலஸ்தீன விடுதலை போன்ற விடயங்கள் கூட இன்று சர்வதேச நிர்ப்பந்தங்களுக்கு தலைசாய்ந்து பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. இதைப் போன்றே எமது பிரச்சினைகளும் தீர்க்கப்படலாம் என நான் கருதுகின்றேன்.

**சரிநிகர்: *இலங்கை- இந்திய ஒப்பந்தத்திற்கு பின்வந்த பிரேமதாசா அரசு உங்களையும் ஏனைய தமிழ்க்கட்சிகளையும் தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்தில் தம்முடன் இணைத்துக் கொண்டதன் மூலம் சர்வதேச அரங்கில் தனது பேரினவாத நிலையைப் பலப்படுத்தி உள்ளதோடு தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய கோரிக்கையைப் பலவீனப்படுத்தியுள்ளது என்று கூறப்படுவது பற்றி....?***

**சுரேஸ்:** உங்கள் கேள்வியே அடிப்படையில் தவறானது. வெளிப்படையாகத் தெரியும் உண்மைகளை உங்கள் கேள்வி மறைக்கின்றது. எல்லாவற்றையும் பொதுமைப்படுத்தி மேம்போக்காக நீங்கள் முடிவுக்கு வருவது ஒருவிதமான கொச்சைத்தனமான அணுகுமுறையாகவே எனக்குத் தோன்றுகிறது.

முதலாவதாக நாம் பிரேமதாசா அரசுடன் இணைந்து செயற்படவில்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். முதலில் புலிகளும், பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப், த.வி.கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகளுமே அரசுடன் இணைந்து செயற்பட்டன. நீங்கள் கூறியது போல் பிரேமதாசா தனது பேரினவாத நிலையைப் பலப்படுத்தியிருந்தால், புலிகள்-அரசு உறவு ஏற்பட்டதன் பின்னர்தான் அது நடந்திருக்க முடியும்.

இந்திய அமைதிப்படையை வெளியேற்றுவதிலும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை சீர்குலைப்பலும் புலிகளுடன் சேர்ந்து செயற்பட்ட பிரேமதாசா 1990ல் இரண்டாவது ஈழப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னும் புலிகளுடனான உறவைப் பேணி வந்தார்: தனக்கும் புலிகளுக்கும் உள்ள உறவை அண்ணன், தம்பி உறவாகப் பிரஸ்தாபித்தார். பிரேமதாசாவுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத பிரேரணை பாராளுமன்றத்திற்கு வந்தபொழுது புலிகள் ஆபத்பாந்தவர்களாக பிரமதாசாவின் பதவியைக் காப்பாற்ற ஈரோஸ் உறுப்பி



னர்களை அனுப்பி வைத்தார்கள். இச்சந்தர்ப்பதில் எல்லாம் நாம் பிரேமதாசாவுக்கு எதிராகச் செயற்பட்டதைத் தாங்கள் அறிவீர்கள். புலிகள் இலங்கை அரசுடன் சேர்ந்து இயங்கியமை, இந்தியாவின் பிரதமரான ராஜீவ் காந்தியை கொலை செய்தமை போன்ற புலிகளின் நடவடிக்கைகள் தான் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பலவீனப்படுத்தியவை.

**சரிநிகர்: *ஈழக்கோரிக்கையைக் கைவிட்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏற்றது சரியென்று நியாயப்படுத்துகிறீர்களா?***

**சுரேஸ்:** அன்றைய காலகட்டத்தில் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டமை அறிவுபூர்வமான செயல் என்றே நான் கருதுகிறேன். சகல தமிழ் விடுதலை இயக்கங்களும் எல்.ரி.ரி.ஈயால் தடை செய்யப்பட்டு ஜனநாயகம் மறுக்கப்பட்ட சூழ்நிலையிலும் புலிகள் ஸ்ரீ லங்கா அரசாங்கத்தை இராணுவரீதியில் எதிர் கொள்ள முடியாத சூழ்நிலையிலுமே இவ்வொப்பந்தம் உருவாக்கப்பட்டது. அச்சூழ்நிலையில் மக்களுக்கு ஓர் இடைக்காலத் தீர்வு அவசியமாக இருந்தது என்றும் நான் நம்புகின்றேன். ஏற்கனவே நீங்கள் கேட்ட முதலிரண்டு கேள்விகளுக்குமான பதிலில் இதற்கான காரணங்களை விளக்கியுள்ளேன்.

நாம் ஒவ்வொரு குறிப்பிட்ட காலகட்டத்திலும் யதார்த்த சூழ்நிலைகளுக்கு பொருந்தக் கூடிய நிலைப்பாடுகளை எடுத்தே செயற்பட்டு வந்துள்ளோம். இயக்கங்கள் ஒன்றுபட்டு போராட்டத்தை நடாத்திய காலகட்டத்தில் திம்புப் பேச்சுவார்த்தை நடைபெற்ற பொழுது தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளில் விட்டுக் கொடுக்காத நிலைப்பாட்டை மேற்கொண்டோம். புலிகள் இயக்கத்தின் ஜனநாயக விரோதப் போக்கு வலுவடைந்த போது ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்தோம். போராட்டம் பலவீனமடைந்து சிங்கள இராணுவம் வடமராச்சியில் புகுந்த போது ஓர் இடைக்காலத் தீர்வின் அவசியத்தைப் புரிந்து கொண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டோம். இவ்வாறான செயற்திட்டங்கள் அந்த சூழ்நிலைகளுக்குத் தேவைப்பட்டதாகவே நான் கருதுகிறேன். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க இந்த வழிமுறைகள் தேவைப்பட்டன என ஆணித்தரமாக நான் நம்புகிறேன். எமது அடிப்படைக் கோரிக்கையை வென்றெடுப்பதற்கான போராட்டத்தின் ஒரு வழிமுறையாகவே நான் இதைக் கருதுகிறேன்.

**சரிநிகர்: *இனப்பிரச்சினையைத் தீர்க்க இந்திய மத்தியஸ்தம் அவசியமானது. இந்தியாவால்தான் தீர்க்க முடியும் என்ற கருத்துப்பட இப்போதும் குறிப்பிட்டு வருகிறீர்கள். ஏற்கனவேயான மத்தியஸ்தம், ஒப்பந்தம், அமைதிப்படை, ஆயிரக்கணக்கான மக்கள் அழிவு என்பவற்றுக்கு பிறகும் அவ்வாறு நீங்கள் கூறுவது சரி என்பீர்களா?***

**சுரேஸ்:** இந்தியா அன்றும் இன்றும் எமது நட்பு சக்தி என்றே நாம் கருதுகின்றோம். எமது போராட்டத்தை சர்வதேச அரங்கிற்கு கொண்டு சென்றதில் இந்தியாவின் பங்கு குறிப்பிடத்தக்கது. ஈழத்திற்கு ஆதரவாக இல்லாவிடினும் தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகளுக்கு இந்தியா ஆதரவாக இருநது வநதுள்ளது. இநதியா தமிழ மக்களுக்கு ஆதரவாக இருந்தவரை ஆட்சியாளர்கள் தயங்கித் தயங்கியே செயற்பட்டு வந்தனர். ஆனால் புலிகளின் செயற்பாடுகளினால் இந்தியாவின் ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக ஏற்பட்ட மாற்றங்கள் ஸ்ரீ லங்கா அரசுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்திய அமைதிப்படையோடு யுத்தத்தை தொடங்கி எமது மக்களின் அழிவுக்கு காரணமாக இருந்தவர்கள் புலிகளே தவிர அதற்கு இந்தியாவைக் குற்றம் சாட்டுவதில் அர்த்தம் இல்லை. இந்திய அமைதிகாப்புப்படை வந்திருந்த சந்தர்ப்பமானது எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான அரியதொரு வாய்ப்பை அது ஏற்படுத்தி இருந்தது. அச்சந்தர்ப்பத்தை நாசப்படுத்தியவர்களும் நம்மவர்களே. 1983க்குப் பின் அடக்கி வாசிக்கப்பட்ட பேரினவாத பேச்சுக்கள் இன்று வெறி கூச்சல்களாக கிளம்பியிருப்பது ஏன் ஏற்பட்டது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்தியாவில் 50 மில்லியன் தமிழர்கள் இருக்கின்றார்கள். இந்தியா ஈழத்தமிழர் விடயத்தில் பரிவுடன் நடந்து கொள்கின்றது என்ற அச்சம் இலங்கைக்கு இல்லாமப் போயுள்ளது. பூகோள அரசியல்ரீதியாகவும் அண்டை நாடு என்ற அடிப்படையிலும் இந்தியாவின் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியாவுக்கு ஒரு கடமைப்பாடு இருப்பதாகவே நாம் கருதுகின்றோம். இவைதவிர இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்குவதில் பிரதான பங்களிப்பை வழங்கி அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உறுதிப்பாடு கொடுத்தவர்கள் என்ற அடிப்படையிலும், இனப்பிரச்சினையைத்தீர்ப்பதில் அவர்களுக்கோர் கடமைப்பாடு உண்டென்றே நாம் கருதுகின்றோம். புலிகளையும் அரசாங்கத்தையும் நிர்ப்பந்திக்கக் கூடிய சக்தியாக இந்தியாவே இருந்து வருகின்றது.

**சரிநிகர்: *தங்களது மாகாண சபை ஆட்சியின் போது முதல்வர் வரதராஜப்பெருமாள் அவர்கள் ஈழப் பிரகடனம் ஒன்றைச் செய்தார்கள். இப்போது இலங்கை அரசின் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கிறீர்கள். இதனை எப்படி விளங்கப்படுத்துவீர்கள்.***

**சுரேஸ்:** வட-கிழக்கு மாகாணசபை ஆட்சியில் இருந்த போது மாகாண சபைக்கான அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள மாகாண அரசு மத்திய அரசுடன் நீண்ட போராட்டத்தை நடத்தி வந்தது. ஆனால் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதற்கு பதிலாக வட-கிழக்கு மாகாணசபையை சீர்குலைப்பதிலேயே அரசு அக்கறை காட்டி வந்தது. புல்களுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கமான புரிந்துணர்வைத் தொடர்ந்து இது இன்னும் உக்கிரமடைந்தது. இச்சமயத்தில் தான் வட-கிழக்கு மாகாண சபை 19 அம்சக் கோரிக்கை ஒன்றை அரசுக்கு கொடுத்து அதை நிறைவேற்றும் படியும் ஒரு வருடத்துள் இது நிறைவேற்றப்படாத பட்சத்தில் தனிநாட்டைப் பிரகடனப்படுத்த வேண்டி ஏற்படும் என்றும் அறிவித்தது.

மாகாண அரசு இருந்த காலத்திலேயே நாம் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டோம். எமது கோரிக்கைகள், நாம் என்ன செய்கின்றோம் போன்ற விடயங்களை ஏற்கனவே விபரமாக கூறியுள்ளேன். மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது மாதிரி ஈழப்பிரகடனத்திற்கும் பாராளுமன்றத்தில் இருப்பதற்கும் முடிச்சு போடுவதில் எந்த அர்த்தமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் பத்திரிகைகளாலும் பொதுமக்களாலும் பேச எழுத முடியாத விடயங்களை நாம் பாராளுமன்றத்தின் ஊடாக அம்பலப்படுத்தி வருகின்றோம். அதுவும் கூடாதென நீங்கள் நினைத்தால் உங்கள் அணுகுமுறையில் தவறு இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

**சரிநிகர்: *மாகாண சபைகள் எந்த அதிகாரமுமற்ற சபைகள் அதனை வைத்து எதிர்க்கட்சிகள் எம்மை ஒன்றும் செய்து விட முடியாது என்று ஜனாதிபதி அவர்களும் அரசு மாகாண சபைகளுக்கு எந்த அதிகாரத்தையும் வழங்கவில்லை என்று சந்திரிகா அவர்களும் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். அவ்வாறான ஒரு மாகாண சபையை தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக ஏற்றதை இப்போதும் சரியென்று நினைக்கிறீர்களா?***

**சுரேஸ்:** மாகாண சபை என்றது. இடைக்காலத் தீர்வுதான். இலங்கையில் மாகாண சபை முறை என்பது ஒரு புதிய விடயம். கடந்த காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் வட-கிழக்கு மாகாண சபை போக மிகுதியாவும் ஐ.தே.கட்சியின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இருந்தது. அதனால் அவர்கள் அதிகாரத்தைக் கேட்கவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எப் மாத்திரமே போராடியது. இன்று மூன்று மாகாண சபைகளை எதிர்க்கட்சி கைப்பற்றியுள்ளது. இது மாகாண சபைகள் மேலதிகமாக அதிகாரங்களைப் பெற மிகவும் ஒத்தாசையாக இருக்கும். ஜனாதிபதிதான் தான் தோன்றித்தனமாகப் பேசுகின்றார் என்பதற்காக அரசியல் சாசனத்தில் உறுதிப் படுத்தப்பட்டவற்றை அவர் ஒன்றும் செய்ய முடியாது அத்துடன். மாகாண சபை இடைக்காலத் தீர்வு மாத்திரமல்லாமல் நிரந்தரத் தீர்வு ஒன்றிற்கான பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான சிறந்த அடித்தளமும் கூட. ஆகவே மாகாண சபை முறையை முற்று முழுதாக நிராகரிப்பது என்பதற்குப் பதிலாக அதனை இன்னும் செழுமைப்படுத்துவது என்பதே சரியானதாக இருக்கும். அதாவது தற்காலிக இணைப்பு நிரந்தரமாக்கப்படுதல், மேலதிக அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல். இணைப்பாட்சி முறை ஒன்றை உருவாக்கல், இதனை நோக்கியே எமது அணுகுமுறைகள் இருக்க வேண்டும் என நான் கருதுகின்றேன்.

**சரிநிகர்: *கிழக்கு மாகாணத்தில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பையும், ஏனைய தேர்தல்களையும் நடாத்துவதனூடாக அரசு வட-கிழக்கைப் பிரிக்க எடுக்கும் முயற்சி தொடர்பாக தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்து வருகின்றீர்கள்?***

**சுரேஸ்:** அரசின் இப்படியான முயற்சிகளை நாம் முழுமையாக நிராகரிப்பதுடன், இதற்கெதிரான கருத்துக்களையும், நாம் மக்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்தி வருகின்றோம். அரசின் கொள்கைகள் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களை சிறுபான்மை இனமாக்கி அவர்களது அடையாளத்தை இல்லாமல் செய்வதுதான் என்பதை நாம் விளங்கப்படுத்தி வருகின்றோம். இதற்கெதிராக மக்கள் அபிப்பிராயங்களையும் திரட்டி வருகின்றோம். இன்னும் சொல்லப்போனால் இவற்றுக் கெதிராக சாத்தியமான வழிகளில் எல்லாம் கருத்துக்களை உருவாக்கி வருகின்றோம்.

**சரிநிகர்: *அண்மைய தேர்தல்களில் போட்டியிடும் எண்ணமுள்ளதா?***

**சுரேஷ்:** உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதில்லை என்பதை நாம் ஏற்கனவே தீர்மானித்துள்ளோம். ஒன்று உள்ளூராட்சித் தேர்தல்கள் என்பது கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றை நடாத்துவதற்கான முதற்படி என நாம் கருதுவதாலும். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்துவதை நாம் ஏற்காததாலும், உள்ளூராட்சி முறை என்பது முழுமையாக மாகாண சபையின் விடயம், இது தொடர்பாக முடிவுகள் எடுக்கும் உரிமை மத்திய அரசுக்கு இல்லை என்பதாலும், முழுக்க முழுக்க ராணுவக கட்டுப்பாட்டுக்குள் நடக்கும் தேர்தல் ஆதலால் அது அரசுக்கு சாதகமாகவும், நீதி, நேர்மையற்ற தேர்தலாக

→ 11

நன்றி - நூலகத்திட்டம்

# திருகோணமலை ... ஒரு அமைதியான...

''குரைகடலோதம் நித்திலங் கொழிக்கும் கோணமாமலை அமர்ந்தாரே'' என்பது சம்பந்தரது பாடல். திருகோணமலை என்றதும் எவருக்கும் இரண்டு விடயங்கள் நினைவுக்கு வரும். ஒன்று; கோணேஸ்வரம். மற்றையது; கன்னியா வெந்நீரூற்று.

ஒரு மாலைப் பொழுதில் இந்தக் கோணேஸ்வரத்தின் உச்சியில் நின்று தொலைதூரத்தே பிறிமா ஆலையிலிருந்தும், துறைமுகத்தில் தரித்து நிற்கிற கப்பல்களிலிருந்தும் நட்சத்திரங்களைப் போல் கண் சிமிட்டுகிற மின்விளக்குகளையும், கீழே ஓவென்ற பேரிரைச்சலுடன் பாறைகளுடன் மோதி எழும் அலைகளையும் பார்த்துக் கொண்டே இருப்பதென்பது ஒரு சுகானுபவம்தான்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் முதன்முறையாக திருமலை சென்ற போது கிடைத்த அனுபவம் இப்படித்தான் இருந்தது.

ஆனால் 83 இனப் படுகொலையின் போது கோணேஸ்வரர் கோயிலுக்குப் போகிற வழியில் கோட்டை வாயிலில் இருந்த பிள்ளையார் சிலையை கடலில் தூக்கி வீசி விட்டு 'கண தெய்யோ நாண்ட கீயா' (கணபதி தெய்வம் குளிக்கப் போய்விட்டார்) என்று சிங்களக் காடையர்கள் சுவரில் எழுதினார்கள் என்கிற செய்தியைத்தான் 84இல் திருமலை சென்ற போது அறிய முடிந்தது.

'ஆட்டு மந்தைக்குள் நுழைந்த ஓநாயைப் போல' ஸ்ரீ லங்கா அரசு இராணுவம் கோணேஸ்வரர் கோயிற் கோட்டைக்குள் நுழைந்திருந்தது. கோணேஸ்வரர் கோயிலுக்குப் போவதற்கான கெடுபிடிகள் ஆரம்பமாகி இருந்தது.

86இல் வழிபாட்டுக்காக கோணேஸ்வரர் கோயிலுக்குப் போவது தடை செய்யப்பட்டிருந்தது.

கோயிலுக்குப் போகிற வழியில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இதே காலப்பகுதியில் கோணேஸ்வரர் ஆலயம் இருந்த மலையில் மிகப் பெரிய புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டது; கோணேஸ்வரரை மறைக்குமாப் போல.

ஏற்கனவே திருமலை மாவட்டத்தின் எல்லைப் புறங்களில் உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் மிக வேகமாக திருமலையை விழுங்கிக் கொண்டு வந்தன. இந்தக் குடியேற்றங்கள் 1946இல் 21%மாக இருந்த சிங்கள மக்களின் விகிதாசாரத்தை 1981இல் 33.62 வீதமாக ஏறத்தாழ தமிழ் மக்களின் விகிதாசார அளவிற்கு உயர்த்தியிருந்தது.

83 இனப்படுகொலையை அடுத்து பெருமளவான தமிழ் மக்கள் தமது வீடுகளையும் நிலபுலங்களையும் விட்டு அகதிகளாக இடம் பெயர்ந்தார்கள். இடம்பெயர்ந்தவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. தொடர்ந்த ராணுவக் கெடுபிடிகளினால் பன்குளம், கந்தளாய், தம்பலகாமம் போன்ற பல்வேறு பகுதிகளிலிருந்த தமிழ் மக்களால் பயிர் செய்யப்பட்டு வந்த நிலங்கள் சிங்களமயமாகிக் கொண்டு வந்தன. இந் நிலைமைகளை வளாத்துச செலவதில் அரசு பிரதான பங்கு வகித்து வந்தது.

88ம் ஆண்டு இந்தியப் படை வந்திருந்தது.

திருகோணமலை முற்றவெளியில் மிகப்பெரிய முகாம் ஒன்றைப் போட்டிருந்தார்கள்.


வழிபாட்டுக்காகக் கோணேஸ்வரம் திறந்து விடப்பட்டிருந்தது.

ஆனால், அரச படையினர் இன்னமும் கோட்டைக்குள் அடங்கி இருந்தார்கள்.

எண்பதுகளில் நகரைச் சூழ உருவாக்கப்பட்டிருந்த சிங்களக் குடியேற்றங்களில் பெருமளவானவை இந்தியப் படை வருகையின் பின் விலக்கப்பட்டிருந்தன.

காலம் காலமாக தமது வீடுகளையும், நிலங்களையும் இழந்திருந்த தமிழ் மக்கள் ஏழெட்டு வருடங்களுக்குப் பிறகு முதன்முறையாகத் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினார்கள்.

இவ்வளவு காலமும் சிங்களவர்களால் அபகரிக்கப்பட்டிருந்த அவர்களது வீடுகள் மீளவும் அவர்களுக்குக் கிடைத்தன. இவ்வளவு கால அகதி வாழ்க்கைக்கும் ஒருவாறு முற்றுப் புள்ளி வைத்தாதயிற்று என்று பெருமூச்சு விடுவதற்குள் 90இல் மீள ஆரம்பமான யுத்தம் அவர்களை விரட்டியது.



திரும்பவும் அகதிகளானார்கள்.

அரசும் படைகளும் துணை நிற்க புத்த பிக்குகளின் தலைமையில் சிங்களக் குடியேற்றங்கள் மிக வேகமாக முளைக்கத் தொடங்கின.

இதுவரை காலமும் நகரை அண்டியும், நகரின் நுழைவாயிலிலும் உருவாக்கப்பட்ட குடியேற்றங்கள் இப்போது நகருக்குள் தமிழ், முஸ்லீம் மக்களது காணிகளிலும், கோயில் காணிகளிலும் என சிங்கள நிலங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. சிங்களக் குடியேற்றங்கள் நகரை மெல்ல மெல்ல விழுங்கிக் கொண்டிருக்கின்றன.

* * *

## TRINCO IS OUR LAND

.........இயக்கத்தின் திருமலைப் பொறுப்பாளராக இருக்கிறேன். அண்மைக் காலமாக தமிழ் முஸ்லீம் மக்கள் குடியிருந்த காணிகளிலும், கோயில் காணிகளிலும் அத்துமீறிச் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருவது குறித்துப் பேசுவதற்காக திருமலைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவரிடம் சென்றேன். அவர் ஒரு சிங்களவர்.

நான் இது தொடர்பாக பேசத் தொடங்கியதுமே அவர் எனது பேச்சை இடைமறித்து இப்படிச் சொன்னார்: 'ஏதாவது சிவில் நிர்வாக வேலையில் நீங்கள் தலையிடுவதானால் ஒன்றில் வவுனியாவுக்குப் போங்கோ அல்லது மட்டக்களப்புக்குப் போங்கோ அப்படி இல்லையென்றால் கொழும்புக்குப் போங்கோ. ஆனால் இஞ்சை மட்டும் எதுவும் செய்ய வெளிக்கிடாதையுங்கோ. ஏனென்றால் திருமலை எங்களது நிலம்!''

சிங்களமயமாக்கப்பட்டு வரும் திருகோணமலையில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் மட்டக்களப்பைப் போல நேரடியாக இராணுவத்தினரால் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

பின்னணியில் இருந்து கொண்டு அரசும் இராணுவமும் பௌத்த மதகுருமார்கள், சிங்கள மக்கள் ஆகியோரைக் கொண்டு நடாத்தி வருகின்றன. இது கிளம்பக் கூடிய எல்லா எதிர்ப்புகளையும் இனவாத மூலாம் பூசி இலகுவில் முடக்கி விடக்கூடிய விதத்தில் நடாத்தப்பட்டு வரும் ஒரு வகைப் புதுமையான சதியென்றே சொல்கிறார்கள் திருமலைத் தமிழ், முஸ்லீம் மக்கள்.

திருமலை நகர்ப்புற சந்தையுள் எம்மைச் சந்தித்த மரக்கறி வியாபாரி ஒருவர் தெரிவித்த தகவல்கள் இந்தப் பிரச்சினையைத் தெளிவாக விளக்குகின்றன. ''83கலவரத்துக் பிறகு சந்தைப் பக்கம் போக முடியவில்லை. மீன் வெட்டுற கத்தியாலை வெட்டு வாங்கிச் செத்த சனம் ஏராளம். இதாலை தமிழர்களுக்கெண்டு உருவானதுதான் திருஞான சம்பந்த வீதிச் சந்தை. இப்ப முழுக்க முழுக்க மரக்கறி வியாபாரக் கட்டுப்பாட்டை அவங்கள் எடுத்ததாலை இந்தச் சந்தையை மூடிட்டு பழைய பசாருக்கே போறம்.

சந்தையிலை சாமான் விற்க மட்டும் தான் எங்களுக்கு முடியும். கண்டி போல தூர இடங்களுக்குப் போய் முன்னையைப் போல சாமான் கொண்டு வந்து விற்க எங்களுக்கு ஏலாது. அது முழுவதும் சிங்களாக்களின்ரை கையிலை தான் இருக்குது. தப்பித் தவறி நாங்கள் செய்ய வெளிக்கிட்டால் வழியிலை மடக்கி அடிச்சுப் போடுவான்கள்....''

## நீதிமன்ற உத்தரவா? யாருக்கு?

திருமலை புகையிரத நிலையத்துக்குப் போகும் வழியில் ஜ மாலியா பள்ளிவாசலுக்குச் சொந்தமான மையவாடி ஒன்று. கடற்கரையை அண்டியிருக்கும் திருமலை முஸ்லீம் மக்களினால் பயன்படுத்தப்பட்டு வந்த இந்த மையவாடிக்கான காணி உறுதி கூட இப்பள்ளிவாசவிடம் இருக்கிறது. ஆனால் திருகோணமலை நகரத்தைச் சுற்றி சிங்கள மக்களை குடியேற்றும் அரசின் திட்டத்திற்கேற்ப இம் மையவாடியின் கடற்கரையை அண்டிய பகுதிகளும் அபகரிக்கப்பட்டன. இதை எதிர்த்து பள்ளிவாசல் நிர்வாகிகள் தொடுத்த வழக்கில் திருமலை மாவட்ட நீதிமன்று அது பள்ளிவாசலுக்குச் சொந்தமானது என்று தீர்ப்பளித்திருந்தது.

எல்லாத் தீர்ப்புக்களையும் போலவே இத் தீர்ப்பும் உடைப்பில் போடப்பட்டு விட்டது. குடியேற்றத்திற்காக ஆக்கிரமிக்கப்பட்ட நிலம் இன்னமும் திருப்பி வழங்கப்படவில்லை.

''ஏற்கனவே எங்கடையாக்கள் ஒருக்காக் கொண்டு வந்த மரக்கறி வானை அவங்கள் பத்தவைச்சிட்டாங்கள். அதுக்குப் பிறகு இப்ப அவங்கள் மட்டுமதான். எங்கடையாக்கள் போறதேயில்லை என்று இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கிறார் ஒரு முஸ்லீம் இளைஞர்.

மரக்கறி வியாபாரத்தை மட்டுமல்ல, தூர இடங்களுக்கான பஸ் போக்குவரத்துச் சேவையும் கூட சிங்கள பஸ் சொந்தக்காரர்களாலேயே நடாத்தப்படுகின்றது. உள்ளூருக்குள் போக்குவரத்து ஏதாவது வேண்டுமென்றால் செய்ய முடியும். ஆனால் தூரஇடங்களுக்கான பஸ் சேவையை நடாத்த தமிழ், முஸ்லீம் பஸ் சொந்தக்காரர்களுக்கு அவர்கள் அனுமதி வழங்குவதில்லை. சில காலத்திற்கு முன் பஸ் சேவையை நடாத்திய முஸ்லீம் பஸ் சொந்தக்காரர் ஒருவரது பஸ் வண்டி முப்பது பிரயாணிகளுடன் இவ்வாறு தான் பஸ் நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பில் சேதமுற்றது. இதைச் செய்தவர்கள் புலிகள் என்றுதான் முதலில் கதை பரப்பப்பட்டது. ஆனால் விசாரித்ததில் இது சிங்கள பஸ் சொந்தக்காரர்கள் மட்டுமே தூரதேச பஸ் போக்குவரத்தைச் செய்யும் ஏகபோகத்தை எடுத்துக் கொள்வதற்கான சதி வேலை எனப் பின்னாளில் தெரிய வந்தது என்று குறிப்பிடுகிறார் நகரில் கடை நடாத்தும் ஒரு முஸ்லீம் வர்த்தகர்.

கடற்கரை ஓரங்கள் முழுதுமாக சிங்களவர்களைக் குடியேற்றியுள்ளனர் எனக் குறிப்பிடும் ஒரு முஸ்லீம் மீனவரைச் சந்தித்தோம். கடலில் மீன் பிடிக்கச் செல்வதற்கு கடற்படையினரின் அனுமதியைப் பெற வேண்டும். இப்போதெல்லாம் பெருமளவு படகுச் சொந்தக்காரர்களாகச் சிங்களவர்களே இருக்கின்றார்கள். ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல அனைவருக்குமே தடை இருந்த போதும் அவர்கள் போகும் போது கடற்படை கண்டு கொல்வதில்லை. தமிழ் முஸ்லீம் மீனவர்கள் அதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. தமிழ், முஸ்லீம் மீனவர்கள் கரையோரத்தில் மட்டுமே மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

''பிடிக்கிற மீனை நாம் சிங்கள முதலாளிகளுக்குத் தான் விற்க வேண்டி இருக்கிறது. நாம் சொந்தமாக நகரத்துக்கு வெளியே எடுத்துச் செல்ல அவங்க விட மாட்டாங்க. மீன்களை வெளியே கொண்டு போய் வியாபாரம் செய்யிற உரிமையை அவங்களே எடுத்திட்டாங்க'' என்கிறார் அவர் வேதனையுடன்.

ஆக போக்குவரத்து, மீன், மரக்கறி வியாபாரம் என்பவற்றுக்காக நகருக்கு வெளியே தொடர்பு கொள்வதற்கான உரிமை தமிழ், முஸ்லீம் மக்களுக்கு மறுக்கப்பட்டு வருவது அங்கு இப்போது அங்கீகரிக்கப்பட்ட ஒரு விடயமாகப் போய் விட்டது.

''இதற்கெல்லாம் அரசாங்கம் ஒண்டும் செய்வதில்லையா? நீங்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தவில்லையா? '' என்று கேட்டோம் நாம்.

ஒரு விசித்திரமான மனிதனைப் பார்ப்பது போலப் பார்த்தார் அந்த மீனவர். பிறகு ஒரு மெல்லிய சிரிப்புடன் இவ்வாறு சொன்னார்: ''... ...னுக்கு நிண்டு செய்... அவங்களிட்டை சொ... யோசனம்?... எங்கட... சரியான ஆள் இல்லை... பந்தன் ஐயா போலை... இதுகளைப் பற்றிக் க...

''இங்குள்ள தமிழ் வி... களிடம் இது பற்றிச் செ... '' என்று இன்னொ... டோம்.

''அவங்கட பாட்... அவங்களுக்கு ஏலு... லை'' என்றார் அவர் ...

* *



மட்டக்களப்புக்கும் ... ஒரு சின்ன வித்தியா... நகருக்கு வெளியிலு... உள்ள மக்கள் நகரில் ... வாங்... செல்வதற்... நோ... இரா...

## சிங்களக் குடியேற்றங்கள்:



டி.எஸ். சேனநாயக்காவினால் 1941இல் உருவாக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்தித் திட்டம் 1947 அளவில் துரித நடைமுறைக்கு வருகிறது. இதுவே கிழக்கின் முதல் குடியேற்றத் திட்டமாகவும் விளங்கியது. இதனாலேயே மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதி அபகரிக்கப்பட்டது. இதுவே பின்னாளில் தமிழ், முஸ்லீம்களின் பகுதிகள் இணைக்கப்பட்ட அம்பாறை மாவட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

1952ம் ஆண்டிலிருந்தே திருமலை மாவட்டத்தின் கந்தளாய்,அல்லை, பன்குளம்(மொரவேவா), வான்எல, பெரியவிளாங்குளம்(மகா திவுள்ள), கல்லோயா, கல்பிட்டியால, பகுதிகள் யாவும் ஒன்றாக இணைக்கப்பட்டு சேருவல எனும் புதிய தேர்தல் தொகுதி 1976இல் உருவாக்கப்பட்டது. தமிழ் மக்களுக்குரிய பாரம்பரியமான இப்பிரதேசங்கள் பறித்தெடுக்கப்பட்டதோடு அப்பிரதேசங்களின் பெயர்களும் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டுவிட்டன. திருமலை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பான 1010 சதுர மைலில் 576 சதுரமைல் இத்தொகுதிக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 436 சதுர மைல் பகுதியே திருமலை, மூதூர் ஆகிய இரு தொகுதிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்ட நேரடி, மறைமுக குடியேற்றத்திட்டங்களுக்கு மேலால் இன்றுவரை பல திட்டமிட்ட நிலப்பறிப்புக்கள் அரச மற்றும் படையினர் ஆதரவுடன் நடைபெற்று வருகின்றன. இன்றைய திருமலை கிட்டத்தட்ட முற்று முழுதாக சிங்களப் பிரதேசமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் வகையில் தமிழ், முஸ்லீம் மக்கள் மீதும் அவர் தம் பிரதேசங்கள் மீதும் மேறகொளளபபடும அததுமறலகளினால் உக்கிரமடைந்த இனத்துவ முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இலங்கை-இந்திய உடன்படிக்கையின் பின்பு கூட துரிதகதியில் அரசு குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு அண்மைக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களாக அனுராதபுரம் வீதியில் பத்தாம் கட்டையில் உள்ள வானாறு-ஜெயந்திபுரப் பகுதி, திருமலை, கண்டி வீதியில் பாலம் போட்டாறில் இருந்து தம்பலகாமம் பகுதி வரையான ஜயபுரக் குடியேற்றங்கள் குறிப்பிடத்தக்கவை.

இத்தகைய குடியேற்றங்களில் பின்னணியில் அரசாங்கமே செயற்படுகின்றது என்பதனை பலத்த ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியும் என்று குறிப்பிடு

## பாதுகாப்பு நிதி கொடுத்தும்...

1992ம் ஆண்டு நாட்டின் பாதுகாப்பு நிதிக்காக எமது ஜனசக்தி உணவு முத்திரைகளைக் கூடத் தியாகம் செய்திருந்தோம் ஒவ்வொரு குடும்பத்திடமிருந்தும் பெறப்பட்ட உணவு முத்திரைகளின் மொத்தப் பெறுமதி ரூபா 84,260. திருமலை மாவட்டத்திலேயே பாதுகாப்பு நிதிக்காக சேர்க்கப்பட்ட அதிகூடிய இத் தொகையை ஜனாதிபதியி



டம் நேரில் கையளித்தோம். இதற்குப் பிறகாவது எமக்கு கருணை காட்டுவார்கள் எங்கள் காணிகளை எங்களுக்குத் தருவார்கள் என்று. ஆனால் அப்படி எதுவுமே நடக்கவில்லை.

லவ்லேன் முஸ்லீம் அகதிகள்

. சிறுபா...




## ஒரு இட...

கலவரங்களினால் ... தியா, யாழ்ப்பாண... போன்ற இடங்களு... தமிழ் மக்களின் கா... போயுள்ளன. இவை... காடாக இருப்பதாக... யாக மீளப்பெறுவத... அரச அதிகாரால் ... றது இடம்பெயர்ந்த... விருத்தும் மற்றும் இ...

நன்றி - நூலகத்திட்டம்



## தன் மூக்கை வெட்டி ....

தமிழ்ப் பிரதேசங்களில் அத்துமீறிக் குடியேறிய, குடியேற்றப்பட்ட சிங்களக் குடியேற்றவாசிகளைச் சுட்டும், குத்தியும், வெட்டியும், கொழுத்தியும் கொல்பவர்கள் புலிகள். அது மாத்திரமல்ல அனுராதபுரத்தில் அப்பாவிச் சிங்கள மக்களையும் புலிகள் கொன்றிருந்தார்கள்.

ஆனால், அரசாங்கத்திற்கும், புலிகளுக்குமிடையிலான பதினான்கு மாதகால 'தேன் நிலவு' காலத்துச் சுவைமிக்க சம்பவமொன்று.

அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகளின் கீழ் உவர்மலைக்கு அண்மித்ததாக உள்ள பகுதி ஒன்றில் குடியேற்றப்பட்டிருந்த சிங்களமக்கள் மாகாண சபையின் அதிகாரக் காலப்பகுதியில் வெளியேறியிருந்தனர், வெளியேற்றப்பட்டனர். ஆனால் இதே சிங்கள குடியேற்ற வாசிகளில் 100 குடும்பங்களை 'தேன் நிலவு'க் காலத்தில் நல்லுறவு நோக்க அடிப்படையில் (மாகாண சபை கலைக்கப்பட்ட 1990 மார்ச்சின் பின்) தமிழீழ விடுதலைப் புலிகள் மீளகுடியேற்றினர். அதாவது தமிழ் மண்ணில் சிங்கள மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் குடியேற்றப் பட்டனர்.

ஐ.பி.கே.எஃப். காலத்தில் குடியேற்ற வாசிகள் அடித்து விரட்டப்பட்டதற்கு பிராயச்சித்தம் காண செய்யப்பட்டதாக இந் நடவடிக்கை வர்ணிக்கப்படுகிறது.

விரட்டப்பட்ட தமிழ், முஸ்லீம் மக்களின் மீதான நடவடிக்கைகளுக்கு பிராயச்சித்தம் செய்யப் போவது யார்?

# ...றிப்பு - ... ஆக்கிரமிப்பு:

...டம் கொண்டு போகத் தேவையில்லை. தமக்கு தேவையான பொருட்களுக்கான பட்டியலை அவர்கள் தம்மூர் கிராம சேவகரிடமே கொடுத்து விடலாம். அவரது 'பரிந்துரை'யுடன் அது அவர் மூலமாக இராணுவத்திடம் போகும். இராணுவ அதிகாரிகளின் 'அப்புறூவல்'இன் பின் அப்பட்டியல் திரும்பவும் கிராமசேவகரினூடாக அதனைக் கொடுத்தோரிடம் வந்து சேரும். அப் பட்டியலில் உள்ள பொருட்களை மட்டுமே அவர் நகரத்திலிருந்து வாங்கிக் கொண்டு திரும்ப முடியும். பட்டியலுக்குச் சற்று அதிகமாக - தூரத்திலிருந்து வரும் சிரமத்திற்காக- ஒருவர் வாங்கிச் சென்றால் அவர் முஸ்லீம் ஆயினும் சரி தமிழராயினும் சரி உடனடியாகப் புலிக்கு சாமான் கொண்டு செல்பவராகச் சந்தேகிக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றார். நகரை விட்டு வெளியேறும் பாதை (மட்டிக்களி றோட்)யில் வைத்து பலத்த சோதனை நடக்கிறது. கிராமங்களிலிருந்து நகருக்கு வருகின்ற ஒவ்வொரு விரது பாசலும் சோதிக்கப்படுகின்றன. திரும்பிப் போவோரது பட்டியல்களும் சாமான்களும் 'செக்' பண்ணப்படுகின்றன.

கிராமங்களுள் மக்களின் நடமாட்டம் கூட நன்கு கண்காணிக்கப்படுகிறது. அயலூர்வாசியாயினும் சரி, ஒருவர் அடிக்கடி இன்னொரு கிராமத்துக்கு போய்வருவார் என்றால் அவர் புலிகளுக்கு தகவல் கொண்டு செல்பவராகச் சந்தேகிக்கப்படுகின்றார். அதன் பின் வழமையான அடி, உதை ....விசாரணைகள்.

* * *

சிங்களமயமாக்கலின் முக்கியமான அம்சமாக இங்கு தொழிற்படுவது நிலப்பறிப்புத்தான். இந்துக் கோவில்களுக்கு, பள்ளிவாசல்களுக்கு சொந்தமான நிலங்களில் சிங்களக் குடியிருப்புகள் அத்துமீறி நடாத்தப்படுகின்றன. பொலிஸ், இராணுவம் எதிப்பவற்றின் பின்பலத்துடன் நடாத்தப்படும் இவற்றை பௌத்த மதகுருக்கள் முன் நின்று நடாத்துகின்றார்கள்.

நகரை அண்டிய லவ்லேன் பகுதியில் நடைபெற்ற அத்துமீறல் காணிபறிப்பு (பார்க்க பெட்டிச் செய்தி) தொடர்பாக பேசப்போன முஸ்லீம் வயோதிபர் ஒருவர் இவ்வத்துமீறலை தலைமை ஏற்று நடாத்தும் 'ஸ்ரீ சீல விசித்தி ஹிமி'யினால் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்றை நினைவு கூர்கிறார் லவ்லேன் வாசியொருவர்.

நெற சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான களஞ்சியம் ஒன்றில் தற்காலிகமாக குடியேறியிருக்கும் இந்த 'லவ்லேன்'வாசிகளை அகதிகளாக பதிந்து கொள்வதற்குக் கூட மறுத்து வருகிறார் கள் என்று குறைபட்டுக் கொள்ளும் அவர் தமது நிலைமையை இப்படி விளக்குகிறார் ''எங்களை அகதிகளாகப் பதிஞ்சாப் பிறகு மீளக் குடியேற்றம் என்டு ஒண்டு செய்ய வேண்டி வருமெண்டுதான் அதை மறுக்கிறாங்கள். இதனால் எங்களுக்கு நிவாரணம் எதுவும் தருவதில்லை. உணவுக் களஞ்சியம் இருக்கிற காணியில்தான் நாங்கள் இப்போ இருக்கிறோம். அதை விட்டும் எழும்பச் சொல்கிறார்கள். அவர்கள் காணி தரட்டும் நாங்கள் எழும்புறம்.''

காணியற்றிருந்த முஸ்லீம் மக்கள் 83க்கு முன்னர் திருமலை பஸ் டிப்போவுக்குப் பின்னாலிருந்த அரச காணிகளைத் திருத்திக் குடியேறினர். 83 படுகொலையின் போது இவர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டனர். இந்தியப் படை வருகையோடு மீளவும் இக் காணிகளில் வந்து குடியேறினார்கள். 90 யுத்தம் மீள ஆரம்பித்ததையடுத்து இனந்தெரியாதவர்களால் இவர்களது குடில்கள் எரிக்கப்பட்டன. இப்போது களங்சியத்தில் வாழ்க்கை நடாத்துகின்றார்கள். அங்கிருந்தும் இவர்களை எழும்புமாறு கட்டாயப்படுத்துகின்றது அரசு.

இது தொடாபாக களஞ்சியததில அகதியாக இருக்கும் முஸ்லீம் இளைஞர் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார் ''அரச அதிபர் எங்களைக் களஞ்சியத்திலிருந்து வெளியேறுமாறு கூறுகின்றார். நாங்கள் முன்னர் இருந்த முடிக்குரிய காணிகளை எங்களுக்குத் தாருங்கள் அதிலே போய்க் குடியிருக்கிறோம் என்றோம். ஆனால் அரச அதிபர் அதைத் தர மறுக்கிறார். அதைத் தர முடியாவிட்டால் சிங்களப் பள்ளிக்கூடத்துக்கு முன்னால் இருக்கிற ஆறு ஏக்கர் அரச காணியைத் தரச் சொல்லிக் கேட்டோம். அதுவுமில்லாவிட்டால் சேவையர் டிப்பாட்மென்ற் காணி எட்டு ஏக்கர் காடாய்க் கிடக்கு. அதில் நாலு ஏக்கரைத் தாருங்கள் நாங்கள் காடு வெட்டி இருக்கிறம் என்றோம். ஆனால் அவர் சம்மதிக்கவில்லை. பதிலாக தமிழர் ஒருவரது காணியைக் குறிப்பிட்டு அக்காணியில் போய்க் குடியேறுமாறு சொன்னார். நாங்கள் மறுத்து விட்டோம்''.

ஜனாதிபதி இடம்பெயர் சேவையின் போது முன்னர் நாங்கள் குடியிருந்த டிப்போவுக்குப் பின்னுள்ள காணியில் முக்கால் ஏக்கரை ஒரு பிக்குவுக்குக் கொடுத்தார்கள். பெமிற்றை ஜனாதிபதி கொடுக்கும் போது நாங்க பார்த்தம். மீதியான எங்களுடைய காணியை எம்மிடம் கொடுக்குமாறு ஜனாதிபதி பிக்குவுக்குச் சொன்னார். பிக்குவும் சம்மதித்தார். ஆனால் இப்போது முஸ்லீம்களான எங்களை குடியேற்றுவது தனக்குப் பாதுகாப்பில்லை என்று கூறி தனது பாதுகாப்புக்காக சிங்களவர்களைக் குடியேற்றுகிறார். பொலிஸிற்குச் சொல்லியும் பிரயோசனமில்லை. ஆனால் எமது காணியை நாம் கடைசி வரைக்கும் யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம்''

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் சிங்கள அரசு ஆறுதலாகவும், திட்டமிட்ட முறையிலும் திருகோணமலை நகரையும் அதன் இயற்கைத் துறைமுகத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கி ஏப்பமிட்டுக் கொண்டிருக்கிறது.



## நிலப்பறிப்பு: முஸ்லீம் மக்களும் விலக்கல்ல!

1983ம் ஆண்டு எதுவித காணியும் இல்லாதிருந்த பெருமளவான முஸ்லீம் குடும்பங்களும், சில தமிழ்க் குடும்பங்களும் ஒன்று சேர்ந்து திருமலை பஸ் டிப்போவுக்குப் பின்னாலிருந்த அரச காணியில் காடுகளை வெட்டி துப்பரவு செய்து குடியேறினர். 83இனப் படுகொலையை அடுத்து பொலிஸாரால் பயமுறுத்தப்பட்டதனால் இவர்கள் இக் காணிகளில் இருந்து வெளியேறி ஐ மாலியா கிராமத்தின் கடற்கரையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நிலங்களை விட்டு ஓடவேண்டியதாயிற்று. அகதிகளாக லவ்லேன் களஞ்சியத்தில் இப்போதும் இரக்கிறார்கள். 1992ல் இக் காணியில் 80பேர்ச் விகாராதிபதிக்கு வழங்கப்பட்டது. மீதிக் காணி 33 அலகுகளாக்கப்பட்டு 33சிங்களக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. அரச அதிபர், ஆளுநர், விகாராதிபதி தலைமையயில் நிலஅளவையாளர் மூலம் இந் நிலம் பகிரப்பட்டது.



முஸ்லிம் மையவாடியில் புத்தாக்கு கட்டப்பட்ட சிங்களவர்களின் வீடுகள்.

...யோரங்களில் தற்காலிகமாகக் குடியிருந்தனர் இதற்கிடையில் 84ம் ஆண்டு இக் காணியை ஸ்ரீ சீல விசுத்தி என்ற புத்த பிக்குவுக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கத் தீர்மானித்திருந்தது. எனினும் 87இல் நிலைமை சீரடைந்ததும் 43முஸ்லீம் குடும்பங்களும் 14 தமிழ்க் குடும்பங்களும் மீளவும் இக் காணியில் குடியேறினர்.


உப்பவெளிப் பொலிஸார் இக் காணிகளை விட்டு வெளியேறுமாறு முஸ்லீம், தமிழ் மக்களை பயமுறுத்தி வந்தனர். இதேவேளை இந்த மக்கள் உதவி அரச அதிபர், அரச அதிபர் ஆகியோருக்கு இது தொடர்பாக மகஜர்களைக் கையளித்தனர் எனினும் அரசு அக்கறை கொள்ளவில்லை.

90இல் யுத்தம் ஆரம்பித்ததும் இவர்களது வீடுகள் எரிக்கப்பட்டன. உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. உயி...

இதேவேளை இக் காணியில் முன்னர் வசித்து வந்த முஸ்லீம் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து 92இல் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையின் போது இக் காணியை மீளவும் தமக்குத் தருமாறு அல்லது வேறு குடியிருப்பு வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோரியுள்ளனர். இது சம்பந்தமாக தொடர்புடைய பல அமைச்சுக்களுக்கும் மகஜர் அனுப்பியுள்ளனர்.

ஆனால், இதுவரை எந்தப் பதிலும் இவர்களுக்கு கிடைக்கவில்லை. தங்கள் வீடுகள் சிங்கள மக்களால் அபகரிக்கப்பட்ட பின் தஞ்சமடைந்துள்ள நெற்சந்தைப்படுத்தும் கட்டிடத்துக்குள் ஒதுங்கியுள்ள தம்மை அகதிகளாகக் கூட அங்கீகரிக்க அரசு மறுத்து வருகிறது என்று இவர்கள் ஆதங்கப்படுகிறார்கள்.

# ...மை இனக் குழுமங்களை 'சிறுபான்மை'யாக்கும் ஒரு சதி





...கிறார் நாம் சந்தித்த இளம் சட்டத்தரணி ஒருவர். 1987 மாகாண சபை உருவாக்கத்தின் பின்பு காணி அதிகாரம் மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப் பட்டது என்று கூறப்பட்ட போதும் திருமலையைப் பொறுத்தவரை அப்படி எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. காரணம் அரச காணி அலுவலர் பீரிஸ் அவர்களிடமே இது தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் இருந்தன. இவர் அரசாங்க அதிபரின் கட்டுப்பாட்டிலோ அன்றி மாகாண ஆளுநரின் கட்டுப்பாட்டிலோ இல்லை. நேரடி மத்திய அரசினதும், பிரிகேடியரதும் அனுசரணையுடன் செயற்படுகிறார்.

இவரது நடவடிக்கைகளில் அதிருப்தி அடைந்த ஆளுநரும், அரச அதிபரும் காணி அமைச்சர் அத்துக்கோரளையூடாக இடமாற்ற முயற்சித்தனர். ஆயினும் பிரிகேடியர் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு அவரது இடமாற்றத்தை ரத்துச் செய்துள்ளார்.

''காணி அலுவலர் பீரிஸ் அவர்களே தனியாருடைய காணிகள் எங்குள்ளன? அரச காணிகள் எங்குள்ளன எனக் கண்டறிந்து அக் காணிகளில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதில் முன் நிற்கிறார். குறிப்பாக பட்டணமும் சூழலும் அடங்கிய உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே இவரும் பிரிகேடியரும் அதிகளவு கவனம் செலுத்தி வருகின்றனர்''எனவும் அச் சட்டத்தரணி மேலும் குறிப்பிட்டார்.

''இதற்காக மாகாணசபைக்குப் புறம்பாக தனியான காணி ஆணைக்குழு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளார்கள். இதில் மத்திய அரசின் காணி ஆணைக் குழுத் தலைவர், நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர், நில அளவைத் திணைக்கள மாஅதிபதி, அரசாங்க அதிபர், மாகாண காணி அலுவலர் ஆகியோர் அடங்கின்றனர். திருமலைக் காணி அதிகாரியும், நில அளவையாளருமான இதே பீரிசும் இக் குழுவில் உள்ளடங்குகிறார்''

இதனூடாக இப்போது வழங்கப்படும் காணிகளுக்குக் கூட 1989ம் ஆண்டிற்குரிய திகதியிடப்பட்ட பெர்மிட் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

ஆக இன்று திருமலையில் நடைபெறும் நில ஆக்கிரமிப்புக்கள் யாவுமே அரசாங்கத்தின் அனுசரணையுடன் அரச அலுவலர்களாலும், பௌத்த மத நிறுவனங்களாலும், ராணுவத்தினராலும் திட்டமிட்டே மேற்கொள்ளப்படுகின்றது என்பது தெட்டத்தெளிவான விடயமாகிறது.

இந்த நிலப்பறிப்புக்கு உள்ளாவது தமிழ் மக்கள் மட்டுமல்ல. இப்போது முஸ்லீம் மக்களும்தான்.

## ...ய் பிரமுகரின் குமுறல்...

... மீளக் குடியேற்றத்திற்கெனக் கொண்டு வரப்படுகிறார்கள். ஆனால், அரசு அவசர அவசரமாக அவர்களது நிலங்களை மீளப் பறித்து வருகிறது. அவர்கள் வந்து எங்கு குடியேறுவது? அரசு எந்த அடிப்படையில் இதனைச் செய்கிறது? இப்படிப் பறிக்கப்படுகிற காணிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

நன்றி - நூலகத்திட்டம்

# இலங்கையின் அரசியலமைப்புக்களும் இனப் பிரச்சினையும் -3



"கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்கள் இலங்கையிற் பிரித்தானியராட்சி நிறுவப்பட்டதன் பின்பு முதன் முதல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட முறைமையாகும். இது ஏற்கனவே நிலவிய மானிய முறைச் சமுதாய அமைப்பிலிருந்து வெற்றிகரமான முறிவினைக் குறித்து நின்றது." கோல்புறூக்-கமரன் சீர்திருத்தம் பற்றி கே.எஸ்.டி.சில்வாவினால் முன்வைக்கப்பட்ட இக்கருத்து மிகச் சரியானதொரு கூற்றென்றே கூற வேண்டும். ஏனெனில் இச்சீர்திருத்தமே அரசியல், பொருளாதார, சமூகரீதியாக இலங்கையை காலனித்துவ சுரண்டலுக்கு ஏற்றதாக மாற்றியமைத்த செயன்முறையின் அடித்தளமாக இருந்தது. போத்துக்கேயர், ஒல்லாந்தர் என்போரின் ஆட்சிமுறைகள் சட்டம், சமயம் போன்ற விடயங்களில் சில புதிய அம்சங்களை புகுத்திய போதும் மானியமுறைச் சமுதாய அமைப்பை மாற்றவில்லை. அவர்கள் அச்சமுதாய அமைப்பைப் பேணிக்கொண்டு இலாபம் பெறவே முனைந்தனர். ஆனால் பிரித்தானியர் இருக்கின்ற அமைப்பை முழுமையாக மாற்றி நீண்டகாலத்திற்குத் தங்கள் தயவில் நிற்க வேண்டிய நிலையை உருவாக்கினர்.

அரசியல், பொருளாதார அம்சங்களில் தங்கியிருக்கும் இயல்பை உருவாக்கியதோடு பிரித்தானியர் அமைதியடையவில்லை. இலங்கை காலங்காலமாக சங்கடப்படக்கூடிய புதிய பிரச்சினையையும் அவர்கள் உருவாக்கினர். அதுதான் இன்று புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை ஆகும். பாரம்பரியமாக வாழ்ந்த இனங்களுக்கிடையே முரண்பாட்டைத் தோற்றுவித்ததுமல்லாமல் இந்திய வம்சாவழியினர் என்னும் புதிய இனத்தையும் அவர்கள் தொடர்பான பிரச்சினையையும் கூட அறிமுகப்படுத்தினர்.

தங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அனைத்து அரசியல் திட்டங்களிலும் பல்லின சமூகத்தன்மையையும் அவற்றுக்கிடையேயான நல்லுறவின் அவசியத்தையும் முற்றாகப் புறக்கணித்து இனங்களுக்கிடையே முரண்பாடுகளை வளர்க்கும் விதத்திலேயே தமது திட்டங்களை அவர்கள் வகுத்தனர். இதனாலேயே திரு சுசில் சிறிவர்த்தனா பிரித்தானியர் காலத்து அரசியல் யாப்பு பற்றி கூறும் போது "பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் காணப்பட்ட இன அடிப்படையிலான கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் மிகவும் வெளிப்படையாகவும் நேரடியாகவும் வெளிப்படுத்தும் சாதனம் பிரித்தானியரது அரசியல் யாப்புகளாகும்" என்றார்.

சுசில் சிறிவர்த்தனாவின் கூற்றிற்கு கோல்புறூக்-கமரன் அரசியல் திட்டம் கூட விதிவிலக்காக இருக்கவில்லை. அவற்றில் காணப்பட்ட அனேக அம்சங்கள் காலனித்துவ சுரண்டலை நிலை நிறுத்தியதோடு இனமுரண்பாட்டையும் வளர்த்து விடுவதாய் அமைந்திருந்தன.

## சட்டசபை அறிமுகம்:-

கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்தின் பிரதான அம்சம், இலங்கையில் சட்டசபையை முதன்முதலாக அறிமுகப்படுத்தியமை ஆகும். இச்சட்டசபை அறிமுகத்தின் பிரதான நோக்கம் பெருந்தோட்ட முதலீட்டாளர்களை ஊக்குவிக்கக்கூடிய சட்ட வசதிகளைச் செய்வதாக இருந்த போதும் காலனித்துவ சுரண்டலுக்கு ஏற்ற வகையில் தமக்கு ஒத்துழைக்கக்கூடிய உள்ளூர்த்தலைமை ஒன்றை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. இதனாலேயே உள்ளூரவர்களும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இவ்வாறு உள்ளூரவர்களை நியமிக்கும் போது கூட தமக்கு நன்கு ஒத்துழைக்கக்கூடிய வகையில் சிங்கள மக்களில் இருந்து புரட்டஸ்தாந்துமதத்தை சேர்ந்தவர்களையும் தமிழ் மக்களிலிருந்து உயர் குழாமைச் சேர்ந்தவர்களையுமே தெரிவு செய்தனர். இதுபற்றி குமாரி ஜெயவர்த்தனா குறிப்பிடும் போது "1833 தொடக்கம் 1912 வரை கரையோரச் சிங்கள மக்களின் பிரதி நிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒருவரைத் தவிர ஏனையவர்கள் அனைவரும் புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர்களே" என்றார்.

இச் சட்டசபையில் உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர்கள், உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் என இருவகையான அங்கத்தவர்கள் அங்கம் வகித்தனர். உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களாகக் காணப்பட்ட போது உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களில் தமிழர்-1, சிங்களவர்-1, பறங்கியர்-1 என்ற வகையில் சுதேசிகளும் காணப்பட்டனர்.

சட்டசபைக்கு புறம்பாக சட்ட அமுலாக்கத்துக்கென சட்டஅமுலாக்க சபை ஒன்றும் உருவாக்கப்பட்டது. ஒன்பது அங்கத்தவர்களைக் கொண்ட இச் சட்ட அமுலாக்க சபையின் அங்கத்தவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களாகவே இருந்தனர். சட்டசபையின் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் சட்ட அமுலாக்கலில் அங்கம் வகிக்காமை பிரித்தானியரின் பாராளுமன்றம் சார்ந்த அரசியற் கொள்கைக்கு எதிரானதாகவே இருந்தது.

கோல்புறூக்கினால் உருவாக்கப்பட்ட இச் சட்டசபை வடிவம் இரண்டு அம்சங்களில் பல்லின சமூகத் தன்மைக்கு எதிரானதாக இருந்தது. ஒன்று சட்டசபையின் அமைப்பு வடிவம். இரண்டாவது அதன் பிரதிநிதித்துவ வடிவம்

சட்ட சபையின் அமைப்பு வடிவத்தைப் பொறுத்தவரை, அது நாட்டின் பல்லின சமூகத்தன்மையையும் தேசங்களின் தன்மையையும் கவனத்தில் எடுக்க

சட்டசபையின் அமைப்பு வடிவத்தைப் பொறுத்தவரை, அது நாட்டின் பல்லின சமூகத்தன்மையையும் தேசங்களின் தன்மையையும் கவனத்தில் எடுக்கவில்லை. கோல்புறூக் அரசியல் திருத்தத்திற்கு முன்னர் இலங்கையில் கரையோரப்பகுதி, கண்டிப்பகுதி, தமிழ்ப்பகுதி என மூன்றுவகையான நிர்வாக முறைகள் காணப்பட்டன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியில் கூட அவர்கள் கண்டியைக் கைப்பற்றாவிட்டாலும் கரையோரப் பகுதிகளிலும், தமிழ்ப்பகுதிகளிலும் வெவ்வேறு வகையான நிர்வாக முறைகளையே பேணினர். இந் நிலைமை அன்றைய கால கட்டத்தில் மூன்று தேசங்கள் இலங்கையில் இருந்தமையையே தெளிவுபடுத்தின. இம் மூன்று தேசங்களும் தங்களுக்கான சட்டங்களை உருவாக்கும் வகையில் சட்டசபைகளை உருவாக்கியிருந்தால் பிற்காலத்தில் கூர்மையடைந்திருந்த இன முரண்பாட்டைத் தவிர்த்திருக்கலாம். இனங்களுக்கிடையே ஐக்கியத்தையும் வளர்த்திருக்கலாம். எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா அரசியலுக்கு வந்த போது இதனை நன்றாக உணர்ந்திருந்தார். இதனாலேயே மூன்று அரசுகள் அடங்கிய சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

## மூன்று தேசங்களை ஒன்றாக்கிய கோல்புறூக் திட்டம்!

வில்லை. கோல்புறூக் அரசியல் திருத்தத்திற்கு முன்னர் இலங்கையில் கரையோரப்பகுதி, கண்டிப்பகுதி, தமிழ்ப்பகுதி என மூன்றுவகையான நிர்வாக முறைகள் காணப்பட்டன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியில் கூட அவர்கள் கண்டியைக் கைப்பற்றாவிட்டாலும், கரையோரப்பகுதிகளிலும், தமிழ்ப்பகுதிகளிலும் வெவ்வேறு வகையான நிர்வாக முறைகளையே பேணினர். இந் நிலைமை அன்றைய கால கட்டத்தில் மூன்று தேசங்கள் இலங்கையில் இருந்தமையையே தெளிவுபடுத்தின. இம் மூன்று தேசங்களும் தங்களுக்கான சட்டங்களை உருவாக்கும் வகையில் சட்டசபைகளை உருவாக்கியிருந்தால் பிற்காலத்தில் கூர்மையடைந்திருந்த இன முரண்பாட்டைத் தவிர்த்திருக்கலாம். இனங்களுக்கிடையே ஐக்கியத்தையும் வளர்த்திருக்கலாம். எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா அரசியலுக்கு வந்த போது இதனை நன்றாக உணர்ந்திருந்தார். இதனாலேயே மூன்று அரசுகள் அடங்கிய சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

மாறாக இலங்கை முழுவதற்கும் ஒரு சட்டசபையை உருவாக்கி அமுல்நடத்த முயற்சித்த போது அது காலப்போக்கில் பேரினவாத ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஒரு சட்டசபையாக மாற்றப்பட்டதோடல்லாமல் பல்லின நாடான இலங்கையைச் சிங்களவர்களுக்கு மட்டுமே உரிய சிறீலங்காவாக மாற்றப்படுவதற்கான அடிப்படையாகவும் அமைந்தது.

சட்டசபையின் பிரதிநிதித்துவ வடிவத்தைப் பொறுத்தவரை இனவாரியான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமை, இனங்களுக்கிடையே முரண்பாடுகள் வளர்வதற்குத் துணை புரிந்தது. காலனிய ஆதிக்கத்துக்குட்பட்ட ஒரு நாட்டின் பல்வேறு இனங்களும் தம்மிடையே ஐக்கியப்பட்டு காலனிய ஆதிக்கத்திற்கு எதிராகக் குரலெழுப்புவதற்குப் பதிலாக காலனிய ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டு தத்தமது இனங்களுக்கான சலுகைகளைக் கோரும் நிலையை எடுப்பதற்கு இது காரணமாக அமைந்தது. இந் நிலைமையானது காலனிய ஆதிக்கத்திற்கு கீழுள்ள நாட்டில் காலனியத்திற்கு எதிரான தேசியவாதம் உருவாவதற்குப் பதில் (இந்தியா போன்று) சிங்கள, தமிழ் தேசியவாதங்களாக உருப்பெற்றது. இதன் விளைவுதான் தமது அங்கத்துவம் கூட்டப்பட வேண்டும் என்றும் தமது இனத்துக்கே கூடுதலான சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் எழக் காரணமாயின.

### கோல்புறூக் சட்டசபையின் அமைப்பு வடிவம்

சட்டசபை

| உத்தியோகப்பற்றுள்ளவர் (9பேர்) | உத்தியோகப்பற்றவர்கள் (6பேர்) |
| --- | --- |
| (அனைவரும் ஆங்கிலேயர்) | ஐரோப்பியர்- 3<br>பறங்கியர்- 1<br>சிங்களவர்- 1<br>தமிழர்- 1 |

1889இல் முஸ்லீம்களுக்கும், கண்டியச் சிங்களவர்களுக்கும் ஒவ்வோர் பிரதிநிதி த்துவம் கொடுக்கப்பட்டது.

இச்சட்டசபையின் அறிமுகம் பிரித்தானியர்களைப் பொறுத்தவரை இருவகையான நன்மைகளைக் கொடுத்தது. ஒன்று காலனித்துவ சுரண்டலுக்கு ஏற்றவாறான சட்டசபை வடிவத்தை உருவாக்கிக் கொள்ள முடிந்தது. இதன் பின்னர், தாம் உருவாக்குகின்ற எல்லா விடயங்களுக்கும் சட்டரீதியான அந்தஸ்த்தைக் கொடுக்க முடிந்தது. தாம் நினைத்தவாறு பெருந்தோட்ட முதலீட்டாளர்களுக்கான வசதிகளை சட்டரீதியாக செய்து கொடுக்க முடிந்தது. அத்தோடு

## செம்பாட்டான்

தம்முடன் ஒத்துழைக்கக்கூடிய் தம்முடைய தயவில் தங்கியிருக்கக்கூடிய உள்ளூர்த்தலைமை ஒன்றை உருவாக்கவும் முடிந்தது.

மற்றையது தனக்கு எதிராக ஒன்றுபட்டு போராடக்கூடிய தேசிய சக்திகள் உருவாகி வளர்வதைத் தடுக்கக்கூடியதாக இருந்தது. இனவாரிப் பிரதிநிதித்துவ முறை பெரிதும் அதற்கு உதவியாக இருந்தது. இனமுரண்பாடு கூர்மையடைவதற்கு முன்னர் தோன்றிய தேசிய இயக்கமான இலங்கை தேசிய காங்கிரஸ் கூட இரண்டு வருடங்களுக்கிடையில் கரையோரச் சிங்கள மக்களின் அமைப்பாக மாறியது.

இலங்கையில் பிரித்தானியருக்கு எதிரான தேசிய இயக்கம் ஒன்று உருவாகாமைக்கு பிரித்தானியர்களின் சூழ்ச்சிகளை விட இலங்கையில் தேசிய முதலீட்டாளர் வர்க்கம் ஒன்று இல்லாமையும் பிரதான காரணமாக இருந்தது. பிரித்தானியர்கள் இலங்கையில் பாரிய முதலீட்டு முயற்சியாக பெருந்தோட்டத்துறையை ஆரம்பித்த போது ஓர் வெற்றிட நிலையிலேயே ஆரம்பித்தனர். அவர்களோடு போட்டியிட யாரும் இருக்கவில்லை உள்ளூர் முதலீட்டாளர் வர்க்கம் பிரித்தானியர்கள் பெருந்தோட்ட முயற்சியில் இறங்கிய போது அவர்களுக்குத் துணையாகக் காடழித்தல், உணவுச்சாலைகளை அமைத்தல், மதுபானம் விற்றல் போன்ற தொழில்களில் ஈடுபட்டே வருமானத்தைத் தேடிக் கொண்டனர். இவ் வருமானத்தால் கிடைத்த முதலீட்டைக் கொண்டே சிறியளவில் பெருந்தோட்டச் செய்கையிலும் ஈடுபட்டனர். இதற்கும் கூட சந்தை வாய்ப்புக்கும், தொழில்நுட்பத்துக்கும் பிரித்தானியர்களையே நம்பியிருந்தனர். இதனால் பிரித்தானியர்களுடன் பொருதுவது அன்றி அவர்களோடு இணைந்த வகையிலேயே தமது கருமங்களை ஆற்ற வேண்டியவர்களாக இருந்தனர். இவர்களே உள்ளூர்த் தலைவர்களாகவும் உருவான போது காலனித்துவத்திற்கு எதிரான பலமான தேசிய இயக்கம் என்பது வளர்ச்சியடையக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கவில்லை.

அதேவேளை சிறியளவில் இலங்கையில் எழுச்சியடைந்த தேசியவாதம் கூட கிறிஸ்தவ மதத்திற்கும், ஏனைய இனங்களுக்கும் எதிரான பௌத்த சிங்கள தேசியவாதமாக இருந்ததே தவிர காலனித்துவத்திற்கு எதிரான பலமான தேசிய இயக்கமாக வளரவோ பிரித்தானியருக்கு சார்பாக அரசியல் திட்டத்தினூடு எழுந்த தலைமையை மீறியோ வளர முடியவில்லை.

ஆனால் இந்தியாவில் இந்நிலை எதிர்மாறானதாக இருந்தது. இந்தியாவை பிரித்தானியர் கைப்பற்றிய போது அங்கு ஏற்கனவே வளர்ச்சியடைந்த முதலீட்டாளர் வர்க்கம் ஒன்று இருந்தது. அது நெசவுத் தொழில், இரும்பு உருக்குத் தொழில், கப்பற் போக்குவரத்து என்பவற்றில் வளர்ச்சியடைந்த நிலையில் இருந்தது. பிரித்தானியர் இவற்றை அவர்களிடம் இருந்து பறித்தே முதலீட்டு முயற்சியில் இறங்கினர். இதனால் அங்கு தேசிய போராட்டம் இயல்பாகவே வெடித்து தேசிய இயக்கமும் இயல்பாகவே வளர்ச்சியடைந்தது. வளர்ச்சியடைந்த தேசிய இயக்கமும் இனமுரண்பாட்டுக்கு அப்பால் எல்லாத் தேசிய இனங்களையும் இணைத்த தேசிய இயக்கமாக வளர்ச்சியடைந்தது

## நிர்வாக மாற்றங்கள்

கோல்புறூக் சீர்திருத்தத்தின்படி இலங்கை முழுவதும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. மூன்று வகையான நிர்வாகம் இருந்த நிலை மாற்றப்பபட்டது. மூன்று தேசங்களின் எல்லைகளும் கூட மாற்றியமைக்கப்பட்டன. இலங்கை முழுவதும் ஐந்து மாகாணங்களாக மாற்றியமைக்கப்பட்டது. இவ்வாறு மாற்றியமைக்கும் போது தேசிய இனங்கள் தமது நிலத் தொடர்ச்சியைப் பேணக்கூடிய தன்மைக்கு வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. திட்டமிட்டரீதியில் அவை தேசிய இனங்களாக எழுச்சியடையக் கூடிய வாய்ப்புக்களை அழிக்கும் வகையிலேயே எல்லைகள் இடப்பட்டன. தமிழ்த் தேசிய இனம் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் எனக் கூறு போட்டுப் பிரிக்கப்பட்டது. அதே போல கண்டிய மக்களின் பெரும்பாலான பிரதேசங்கள் தென் மாகாணத்திற்கும் மத்திய மாகாணத்துக்கும் வடக்கு மாகாணத்துக்குமாக பிரிக்கப்பட்டது.

இவர்களது புதிய மாகாண அமைப்பின்படி வடமாகாணத்திற்கு யாழ்ப்பாணம், மன்னார், தீவுப்பகுதி, வன்னி, அனுராதபுரம் பகுதிகளும் கீழ் மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, தமன்கடவை, விந்தனை பகுதிகளும் தென்மாகாணத்திற்குள் காலி, மாத்தறை, தங்காலை, அம்பாந்தோட்டை, பதுளை பகுதிகளும் மேல் மாகாணத்தினுள் கொழும்பு, களுத்துறை, சிலாபம், புத்தளம் பகுதிகளும் மத்திய மாகாணத்தினுள் மாத்தளை, கண்டி, உடுநுவர, யட்டிநுவர, தும்பளை பகுதிகளும் உள்ளடக்கப்பட்டன.

நிர்வாக மாற்றங்களைச் செய்யும் போது கண்டியப் பிரதேசத்தை உடைப்பதிலேயே பிரித்தானியர் பெரும் கவனம் செலுத்தினர். கண்டிய மக்களிடமிருந்தே தமக்கு எதிர்ப்பு வரும் என்று கருதியமையால் அதனை துண்டு துண்டாக்கி மேல்மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்குள் செருகினர். இதன் மூலம் கண்டியர் ஒரு தேசமாக எழுச்சி பெறுவதையும், ஐக்கியப்பட்ட போராட்டம் நடத்துவதையும் தடுத்து நிறுத்தினர். எனினும் இதனையும் மீறி 1848இல் வீரபுரன் அப்பு தலைமையில் ஆயுதப் போராட்டமாக சுதந்திரப் போராட்டம் வெடித்த போது அதனைக் கோரமாக நசுக்கி வெற்றியும் கண்டனர். பிற்காலத்தில் ஏனைய கரையோர சிங்கள மக்களை கண்டிப் பிரதேசத்திற்குள் ஊடுருவ வைத்தும் இந்திய வம்சாவழியினரை குடியேற்றியும் கண்டிய மக்களின் தனித்துவத்தை சிதைத்தனர்.

தமிழ்த்தேசிய இனத்தைப் பொறுத்தவரையிலும் கூட அவர்கள் நீண்டகால நோக்கில் சிந்தித்தே வடக்கு, கிழக்கு எனப் பிரித்தனர். அவர்கள் ஒரு தேசிய இனமாக எழுச்சி பெறுவதற்கு முட்டுக்கட்டை போட்டனர். இவர்களுடைய மாகாணப் பிரிப்பினால் ஏற்பட்ட விளைவை இன்று வரை தமிழ்த் தேசிய இனம் அனுபவித்தே வருகின்றது.

(வரும்)

ஊர் மோனத்தவமியற்றும் கோலம். ஆற்றங் கரை கூட அடங்கிக் கிடந்தது.
மேற்கே -பாலத்திற்கப்பால் பற்றி எரியும் வீடுகள். கடைகளினின்றும்-மேலெழும்பும் புகை மூட்டத்திற் குள் சூரியன் மறைந்து கொண்டிருந்தான்.
இரண்டு மூன்று மாதங்களாக எதிர்பார்த்திருந்த தரு ணங்கள்... இன்றுதான் பலத்துள்ளது போலும்...
''ராணுவம் புலிபாஞ்செ கல் றோட்டாலெ வந்து தான் வளைப்பானுகள்.''
''நீங்கெ பாருங்கெ அவனுகள் ஆத்திலெ கண் போட்டிலெ வந்துதான் அடிப்பானுகெள்.''
''இந்தத்தடவ சண்டெ வந்தா பொடியளுக்குத்தான் வெற்றி. அவைகள் காட்டுக்குப் போக மாட்டினம். செத்தாலும் வீதியிலான் சாவினம்.''
இதெல்லாம் நடக்காது ராணுவம் மியான்குளத் தாலே சுத்திவளைப்பானுகள். புலிகள்ற பாடு திண் டாட்டந்தான்.''
''சீ! இதென்ன கதை. இன்னும் ரெண்டு மணிநேரத் திலெ கும்புறுமூலை ராணுவ முகாம் புலிகள்றெ கையிலெ.''
கூட்டமாக கூடிநின்று கதைத்தவர்களில் புலிகளின் முக்கிய பிரமுகரும், வட்ட நீதிவானுமாகிய அல் ஹாஜ் உதுமாலெவ்வை ஜே.பியின் கதையைக் கேட்டு அவனுக்கும் ஓர் இனம் புரியாத ஆறுதல்.
'யாரவது சண்டையில் வென்றாலும் பரவாயில்லை. ஆனால் பத்து வருஷமாக எல்லோரும் தோற்றுக் கொண்டே போகிற சண்டை எப்போது ஓயும்.
'குடும்பத்துடன் பாசிக்குடா சென்று கண்கள் சிவப் பேறக் குளித்து -கோழிக் கறியும் இடியப்பமும் மூக் குமுட்டப்புடிச்சி...'
மனம் ஆவல் கொண்டு தாவியது.

அண்மையில் அவனுடைய பதின்மூன்று வயது மகளை கொழும்பிற்கு கூட்டிப் போயிருந்தான்.

''வாப்பா கடல் நீலம் என்று தெரியும். ஆனா இப்படி கருநீலம் என்று தெரியாதே'' என்றாள்.

என்ன கொடுமை. ஊரிலிருந்து இரண்டு மைல்களுக் கப்பால் தான் -அந்தப் பூலோக சொர்க்கம் பாசிக் குடா கடற்கரை. இந்தப் பிஞ்சுகள் இன்னமும் பார்க் காத சொர்க்கம். மனத்திற்குள் இந்தச் சண்டைக் காரர் களை இவன் சபித்துக் கொண்டான்.

''பட்பட் பட்பட் பட்பட்'' ஏகே47இன் மகிழ்ச்சி ஆர வாரம்.
''டு....மீ....ல்டும்..'' ஊரையே விழுங்கி விடும் நாதம்.
அவனுடைய வீட்டிற்குள்தான் ஷெல் இறங்கியதோ?

ஊர்- தவம் கலைந்து சிதறியது.
கதைத்துக் கொண்டிருந்த நண்பர்கள் 'கப்சிப்' என்று - வீடுகளை நோக்கி நடையைக் கட்டத் தொடங்கி னார்கள்.
இவனுடைய காதுக்குருத்துக்கள் பிளந்து சிதறிய தைப் போல.. அவனுடைய உடல் 'படபட' வென்று ஆட்டம் போட்டது.
அடைத்திருந்த முன் கதவுகளிரண்டும் படீரெனத் திறந்து கொள்ள - ஜன்னல் கதவுகளின் சட்டங்களில் சொருகியிருந்த கண்ணாடிகள் பூச்சிதறல்களாக...
''அங்கெ...என்னெத்த பாக்கிறீங்கெ, நீங்கெளும் வாங்களென்.''
அவனுடைய மனைவிதான் குசினியின் 'கொங்கீ றீட்' பிளேட்டிற்குள்ளிருந்து குரல் விடுகிறாள். அதுவே உயிர்காக்கும் 'பங்கர்' என்றெண்ணினாள் போலும்.

''அப்பிடியே எல்லாரும் குப்புறப்படுங்கெ. நீ சத்தம் போடாமெ புள்ளைகளிரண்டையும் பாத்துக்க..'
''ஓ! ஃபீக்கா இஞ்செ எல்லாத்தையும் நனைச்சிப் போட்டாள். புள்ளய்க்கி பயத்தலெ மூத்திரம் பெய்த்து. கட்டிலெ இரிக்கிற சாக்கிலெ ஒண்ட எடுத் தாங்கெ.''
அவன் சாக்குகட்டிலயிருந்து ஒன்றை உருவிக் கொடுத்து விட்டு -மீண்டும் வானத்தைப் பார்த்தான்.

குண்டு வீசும் 'பொம்மர்' ஒன்று அவனுடைய கிரா மத்தைச் சுற்றிச்சுற்றி...
''றபீக்கா! வாப்பாட்டெச்சொல்லி 'எப்எம்' மீட்டரெ பிடிக்கச் சொல்லுங்கெ.''
அடுத்த வீட்டிலிருந்து இஸ்மாயில் குரல் கொடுத் தான்.

பாத்துக்குள் பொழுது விழுந்து விட்டால் வீட்டை விட்டு வெளியேற மறுக்கும் கால்கள். பாசிக்குடாக்க டற்கரையில் நீரை உதைத்துத் தள்ளி நீச்சலடிக்க முடியாத கால்கள்.
கடைசியில் -வீதியில் வேகமாக நடக்கமுடியாத கால்கள்.



# கட்டிப்போட்ட கால்கள்

எஸ்.எல்.எம்.ஹனிபா

அவனும் துணிந்த கட்டைதான்.
உடனே அவன் ரேடியோவில் 'எப்எம்' மீட்டரை திருப்பி ஓட விடுகிறான்.
''தும்ரிய பொல லங்கம தியன்ன லொக்கும கொட னிகல்ல.'' ரேடியோவிற்குள் விமானியின் குரல்.
இவனுக்கு மகிழ்ச்சி-பரபரப்பு
மீண்டும் முன்வாசல் பிளேட்டிற்குள் நின்றவாறு வானத்தைப் பார்க்கிறான்.
அந்தக் குண்டு வீசும் விமானம் -திடீரெனக் குப்புற விழுந்து- விழுந்த கையோடு இடியோசையை இறக்கி விட்டு -மிகவும் உல்லாசமாக வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.
அந்த விமானி கொடுத்து வைத்தவன். வானத்திலும் குஸ்தி போடுகிறான்.
நமக்கு இந்த மண்ணில் நடக்கக் கூடத்திராணி யில்லை.
கால்கள் இரண்டு இருந்தென்ன செய்ய?
கட்டிப் போட்ட கால்கள்.
நிலவில் கடற்கரையில் நடக்க மறந்த கால்கள். உப்

எந்த இடத்தில் எந்த வெடியோ?
மினி வெடியோ? கண்ணி வெடியோ?
மிஸ்பயறிங்கோ? மினிபஸ்ஸில் கடத்தலோ?
மரணத்துள் வாழ்வு! வாலாயமாகிப் போய்விட்ட வாழ்வு! ஒப்பாரியில்லாத வாழ்வு.
துப்பாக்கிச் சப்தம் இல்லாவிட்டால், தூக்கம் வர அடம்பிடிக்கும் விழிகளைக் கொண்ட வாழ்வு.
ஆஹா அற்புத வாழ்வு!
திடீரென 'கரண்ட்' கட்டாகி விட்டது.
அவன் எண்ணங்கள் சிதைந்தன.
அடிபட்ட பாம்பு -காற்றைக் குடித்து- 'புஸ்' ஸென்று ஊதிப் பருத்து. அசைவதைப் போல ஊர் அரவப்ப டத் தொடங்கியது.
''இஞ்செ வெளிலெ வா''
தேவன்ட எமர்ஜென்ஸி 'லைட்டை எடுத்துக் கொண்டு மகன்தான் வெளியில் வந்தான்.
'ஸ்விட்சைப்'ப் போட்டு மதில் சுவரில் ஏற்றி வைத் தான்.
ஆனைப்பசிக்கு சோளப்பொரிபோல -கரிய இருள்

அந்த விளக்கையே விழுங்கப் பார்த்தது.
கூட்டிக்குள்ளிருந்து குஞ்சுகள் வெளிவருவதைப் போல, பக்கத்து வீடுகளில் தீப்பெட்டிக்குள் தவமி ருந்த அக்கினிக்குஞ்சுகள் ஒவ்வொன்றாக வெளி யில் வந்து -சிறகுகளை அசைத்து அசைத்து இருளை விரட்டியது.
காற்றையே கிழித்துக் கொண்டு வருவதைப் போல ஒரு சைக்கிள்.
''பெரிய்ய பள்ளி வாசல்லெ குண்டு விழுந்து நூத் துக்கு மேலே மய்யத்து.''
இவன் காதுமடல்களைச் சிலுப்பிக் கொண்டான்
வீட்டின் மேற்குச் சந்தியால் இன்னுமிருவர். அடுத்த கிராமத்தை நோக்கிப் பறக்கிறார்கள். இவனாக எது வும் கேட்கவில்லை.
''பொடியனுகெள் பாலத்துக்கு குண்டுவெச்சி உடைச்சுப் போட்டானுகெள்!''
இவனுக்கு தலைக்குள் கொக்கி போட்டு...
அப்போது-
வீட்டின் கிழக்கிலிருந்து ஆற்றங்கரைக்குச் செல்லும் வீதியில் இவனுடைய மருமகன் தல்லதெறிக்க ஓடி வந்தான்.
''பெற்றோல் ஷெட்-சென்றி பங்கரெல்லாம் தூள் தூள். பொடியனுகளெல்லாம் பறந்திட்டானுகள்.''
'இந்த நேரத்தில் இவனெங்கே அங்கே போனான்?' மனத்திற்குள்ளேயே.
முச் சந்தியில் அமைந்து விட்ட அவனுடைய வீட் டின் முன்னால் நின்று கொண்டே -செவிப்பறையில் எல்லாவற்றையும் வாங்கி அடுக்கிக் கொண்டான்.
அவனுக்குத் தலை வெடித்து விடும்போலிருந்தது.
'கண்களினால் ஒரு தடவை இந்தக் காட்சிகளை எல் லாம்...' மனம் அலைபாய்ந்தது.
''ஊரு கிடந்து கலங்கிது நீங்கெ புதினம் பாக்கிங்கெ. '' எரிச்சலும் ஆற்றாமையும் அவள் வார்த்தைகளில் இணைந்து வெளிப் போயிற்று.
அவன் கடகடவென்று சிரிக்கத் தொடங்கினான்.
நல்ல வேளை -இன்றைய இந்த இரவில் முஅத்தி னின் அந்தச் சப்தம் கேட்காமல் விட்டதில் அவன் மகிழ்ச்சி கொண்டான்.
'அமரர் பிலாலின் பாங்கோசையை -இங்கு யார் சொல்லிக் கேட்போம்?' அந்த வேளையிலும் அவ னுக்கு அப்படியொரு ஆசை முகிழ்த்தது.

''ஓய்! கவிஞர் என்ன காணும் கனவு காண்கிறீர்?''
அவனுடைய யாழ்ப்பாணத்துச் சுப்பிறிண்டன் நண் பன் செந்தில் நாயகம் வீட்டின் கேற்றில் 'டோர்ச் லைற்' சகிதம்.
அவனைப் பார்க்க இவனுக்கு பொறாமையாக இருந்தது. இந்த நேரத்தில் இவன் கறுவாக்கேணியி லிந்து... இவன் கூட ரவியும்...?
'உதுபாரும் உங்களின்ட சந்திக்குப் போய்வாறம். பள்ளியில ஷெல் விழுந்து ஒரு உம்மாக்குக் காயம். வேறொன்றும் நடக்கல்ல.
'பாலத்திற்கு?'
'பாலமோ? என்ன விசர் கதை விடறியள். பாலம் பாலமாத்தானிரிக்கி.''
'பொடியன்களெல்லாம் எங்கே?' இவன்.
'அவங்கெ போக வேண்டிய இடத்திற்குப் போய் இருப்பினம்.
செவிப்பறையில் அடுக்கி வைத்திருந்த மூட்டைகள் ஒவ்வொன்றாக வெளியில் வந்து விழத் தொடங்கிய தில்-
அவனுக்கு மிகப் பெரிய ஆறுதலாயிருந்தது.

## வேனிற் காலத்தில் யாழ்ப்பாணத்து இரவில்

மாநகர கட்டிட கொத்தளங்களுக்குள்ளும்
இரவில் நான் கண்டேன்
வேட்டைக்காரனின் பட்டி மூன்று நட்சத்திரங்கள்
நாங்கள் வானத்தைப் பார்த்து
நட்சத்திரங்களை அனுபவித்து எவ்வளவு காலம்


நான் என் வீட்டில் நிற்க உணர்ந்தேன்
எங்கள் வீடு
இப்போது அது எனக்கு ஒரு கோட்டை
அமாவாசை நோக்கும் நிசிகளில்
எங்கள் வீட்டு வேலிமரங்களையும் மதில்களையும்
வானம் வளைந்து தொடும்
வேனிற்காலத்தில்
யாழ்ப்பாணத்து இரவில்
சாப்பிட்டு விட்டு வானத்தைப் பார்த்து உலாவுவேன்

அன்ரா சொல்லுவா
அதிக நட்சத்திரங்களைக் காண்கிற நாட்களில்
கனவில் அதிக இனிய நண்பர்கள் வருவர்
எரிவெள்ளி விழும் வாழைக்குள் பொன் விளையும்

வைகறையில் நாங்கள் எழும்பி
முகம் கழுவ முத்தத்திற்கு இறங்க
துருவக்கரடியும் அருந்ததியும்
நித்திரை அசதிகள் தீர்த்தெல்லாம் அவைகள்

எல்லாம் காலம் தானே

நட்சத்திரன் செவ்விந்தியன்



## நான்

நான் மனிதன்

எனக்கு ஒரு முகம்
எனக்கு ஒரு இதயம்

வெயிலிலும் மழையிலும்
துயரிலும் மகிழ்விலும்
எனக்கு ஒரு நிறம்

இதயத்தில் ஹிட்லராகவும்
முகத்தில் மகாத்மாவாகவும்
நான் இருந்ததில்லை

போர்க்கருவிகளற்ற உலகும்
விலங்குகளற்ற வாழ்வும்
எனது கனவு.

நான் மனிதன்.

எனக்கு ஒரு முகம்
எனக்கு ஒரு இதயம்.

உனக்குத்தான் தெரியுமே.

ரபீக்

நன்றி - நூலகத்திட்டம்



# காஷ்மீரிய மக்களின் சுயநிர்ணய உரிமை:

# சில கசப்பான உண்மைகள்!

-சிசைரோ

காஷ்மீரில் நடைபெற்று வரும் போராட்டம் உலகைக் கவரத் தொடங்கி விட்டது. இஸ்ரேலின் உருவாக்கம் எப்படி நிரந்தத் தலையிடியாக இருந்ததோ அதை விடச் சற்றும் குறையாத அளவுக்கு தலையிடி கொடுத்தது இந்தியா-பாகிஸ்தான் சுதந்திர நாடுகளாகப் பிரிந்தமை. இந்தத் தலையிடியின் தலைப்பிள்ளைதான் காஷ்மீர் போராட்டம். தலையிடி 1947இலேயே கருக்கொண்டு பின்னாளில் உருக்கொள்ளத் தொடங்கியது. இன்றைய சந்ததியினருக்கு இத் தலையிடியின் தாற்பரியம் புரிவதில்லையாதலால் வரலாற்று நிகழ்வுகள் சில குறிப்பிடப்படுவது அவசியமாகின்றது இவ்விடத்தில்.

அரசுக்கெதிரான போராட்டங்களில் தமிழ்மக்கள் பெற்றுள்ள அனுபவம் ஒரு குறுகியகால வேகத்தின் விளைவாக ஏற்பட்டது. ஆனால் காஷ்மீரிய மக்கள் 1947இலிருந்து போராடி வருகின்ற போதும் ஈழத்து வேகம் அங்கு காணப்படவில்லைதான். ஆனால் போராட்டத்திற்கான நியாய அடிப்படை காஷ்மீரிய மக்களுக்கு அசைக்க முடியாத அரணாக உள்ளது. ஏனெனில், உண்மையிலேயே, இம் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை என்பது ஆசைகாட்டி மோசஞ் செய்யப்பட்ட விசயமொன்றாகிறது. இந்தியாவும் ஐ.நாவும் தான் இதில் குற்றவாளிகள். இந்தக் குற்றத்தைப் பயன்படுத்தி தனது நலனைத் தேடுவதில் குறியாக உள்ளது பாகிஸ்தான்.

உலகின் மிகவுயர்ந்த மலைத் தொடர்களால் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்குப் பிரதேசமே காஷ்மீர். வருடத்தின் பெரும்பகுதி 'உறக்கத்தில்' கழிய வேண்டிய அளவுக்கு ஒரே குளிர். கோடைகால வாசஸ்தலமாக மட்டும் பயன்பட்டிருக்க வேண்டிய பகுதி குருதி கொட்டிக் கொண்டிருக்கிறது. 14ம் நூற்றாண்டுவரை (இந்திய) இந்து மன்னர்களினாலும் பின்னர் (1579) மொகலாய ஆட்சியின் கீழும் வந்த இப்பிரதேசம் 18ம் நூற்றாண்டில் ஆப்கானிஸ்தான் ஆட்சியினரின் கட்டுப்பாட்டிலிருந்தது. 1819இலிருந்து சீக்கியப் பேரரசு இங்கு உருவாக்கப்பட்டதுடன் 1846இல் இது பிரித்தானியரிடம் ஒப்படைக்கப்படும் வரை ரஞ்சித் சிங் என்பவரால் ஆளப்பட்டதெனத் தெரிகிறது. நமது அரசியலோடு ஒப்பிடுவதானால் ரஞ்சித் சிங்கின் ஒப்படைப்பை சங்கிலியனின் ராஜதானி போர்த்துக்கேயரிடம் ஒப்படைக்கப்பட்டமையுடன் ஒப்பிடலாம். தற்போதைய ஜம்மு-காஷ்மீர் மாநிலம் என்பது இரண்டாவது ஆங்கில-சீக்கிய யுத்தத்தின் பின்பு பிரித்தானியர் காஷ்மீர் மீதான கட்டுப்பாட்டினை ஜம்முவிலிருந்த பட்டத்து மகாராசாவிடம் ஒப்படைத்ததன் மூலம் உருவாக்கப்பட்டது (1847). இப்படி ஒரு மாநிலம் உருவாக்கப்பட்டமைக்கு உள் நோக்கமும் உண்டு. இந்தியாவுக்கும் ஆப்கானிஸ்தான், சீனா என்பவற்றிற்கும் இடையில் ஒரு தாங்கு அரசை உருவாக்குதே இந்த உள்நோக்கமாகும்.

அப்போதைய கவர்னர் ஜெனரல் மவுண் பேட்டன் பிரபு கொடுத்த அழுத்தத்தினால் ஏராளமான சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைவதென்ற தீர்மானத்தையே எடுத்தன. இந்த வகையில் காஷ்மீரும் இணைய வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இங்கே பெரும்பான்மையாக முஸ்லீம் மக்கள். ஆனால் ஆட்சியாளர் இந்துக்கள். மகாராஜா ஹரிசிங் ஆட்சியிலிருந்தார். இந்தியாவின் முதல் பிரதமர் நேரு கூட காஷ்மீரியப் பிராமணர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் மொத்தச் சனத்தொகையில் முஸ்லீம்கள் ஏறத்தாழ 12%. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் முஸ்லீம்களே 2/3 பங்கு பெரும்பான்மையினர். காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் முஸ்லீம்களே நெருக்கமாக வாழ்கின்றனர். இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்கு சற்று முன்னர் கூட, காஷ்மீர் தொடர்ந்தும் சுதந்திரமாக இருக்கும் என்ற நம்பிக்கை மகாராஜா ஹரிசிங்கிற்கு ஊட்டப்பட்டிருந்தது. ஆனால் இந்த நம்பிக்கை, பாகிஸ்தான் பக்கத்திலிருந்து வந்த படையெடுப்பால் தகர்ந்தது. பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் செல்வாக்குள்ளதான 'பதான்ஸ்' என்ற இனக் குழுவினரே காஷ்மீர் மீது படையெடுத்தனர்.



இந்தப் படையெடுப்பாலும் (செப்.1947), காஷ்மீரிய முஸ்லீம்கள் மேற்குப் பகுதிகளில் செய்த கிளர்ச்சியினாலும் மகாராஜா புதுடில்லியின் தயவை நாட வேண்டியவரானார். 'காஷ்மீரிய சிங்கம்' எனப் பெயர் பெற்றவரும் அங்கு எதிர்க்கட்சியை நிறுவியவருமான ஷேக் அப்துல்லாவும் நேருவைச் சந்தித்து காஷ்மீரைக் காப்பாற்றும்படி கோரினார். இந்த மாநிலம் இந்தியாவுடன் இணைந்த பின்னரே அங்கு படைகளை அனுப்பி வைப்பதாக நேரு பதிலளித்தார். இதன் விளைவாக ஒக்டோபர் 27, 1947இல் மகாராஜா ஹரிசிங் காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் உடன்படிக்கையில் கையொப்பமிட்டார். உடனடியாக இந்தியப் படைகள் விமானத்தில் வந்து காஷ்மீரில் இறங்கின. பாகிஸ்தானிலிருந்து வந்த இனக் குழுவினரை இவை பின்வாங்கச் செய்தன. பதான்ஸ் ஏற்கனவே கைப்பற்றியிருந்த பிரதேசமே 'அசாட் காஷ்மீர்' என அழைக்கப்படுகிறது. இது பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டு விட்டது. 1948 மார்ச்சில் ஷேக் அப்துல்லா மாநில அரசாங்கத்தின் இடைக்கால முதலமைச்சரானார்.

## துரோகத்தின் தொடக்கம்

மகாராஜா ஹரிசிங் ஒப்பமிட்ட இணைப்பு ஆவணத்தின் வாசகம் ஏழு பின்வருமாறு கூறுகின்றது ''இந்த ஆவணத்திலுள்ள எதுவேனும் ஏற்பாடு இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்பு எதனையும் ஏற்குமாறு என்னை வற்புறுத்துவதாகாது. அல்லது அத்தகைய அரசியலமைப்பு எதனதும் கீழ் இந்திய அரசாங்கத்துடன் உடன்படிக்கைகள் செய்யும் எனது சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதுமாகாது''.

இந்த வாசகமே இந்தியாவின் இன்றைய ஆட்சியாளர்களுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்குவது. காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது சரிதானா என்ற வினாவை ஒருவர் எழுப்பினால் அவர் ஏழாம் வாசகத்தைப் படித்து விட்டார் என்று பொருள். 'அந்தக் கதையெல்லாம் வேண்டாம். மற்றையதைப் பாருங்கள்' என இந்திய ராஜதந்திரிகள் உடனே பதிலளிப்பார்கள். காஷ்மீரின் இந்த நிபந்தனையுடன் கூடிய இணைப்பினால்தான் இந்திய அரசியலமைப்பில் 370ம் உறுப்புரை சேர்க்கப்பட்டது. இந்த உறுப்புரையின்படி அரசியலமைப்பின் முதலாம் உறுப்புரையும் 370ம் உறுப்புரையும் மட்டுமே காஷ்மீருக்கு நேரடியாகவே ஏற்புடையதாகும். ஏனைய உறுப்புரைகள் யாவும் 'காஷ்மீருக்கு ... நீட்டிக்கப்படலாம்'. ஆனால் அதற்கு முன்பு மாநில அரசாங்கத்துடன் கலந்தாலோசிக்க வேண்டும். சில விடயங்களில் கட்டாயமாக அதன் சம்மதம் பெறப்படல் வேண்டும். இவ்வகையில் இந்திய அரசியலமைப்புக் கூட மாநில அரசாங்கத்தின் சம்மதமின்றிச் சில விடயங்களில் அங்கு ஏற்புடையதாகாது என்ற நிலை. இது மட்டுமல்ல, காஷ்மீருக்கு மட்டுமே இந்திய மாநிலங்கள் எல்லாவற்றையும் விட தனியான மாநில அரசியலமைப்பு என்று ஒன்றும் உள்ளது. பூரண சமஷ்டி நாடுகளில் . மட்டும் காணப்படும் அம்சம் இது. இணைப்பின் போது மவுண்ட்பேட்டன் பிரபு வெளியிட்ட அறிக்கை பின்வரும் உத்தரவாதத்தை அளித்திருந்தது. ''ஏதாவது மாநிலத்தில் இணைப்பு விவகாரம் பிணக்கிற்கு உட்படுமானால் இணைப்பானது அந்த மாநில மக்களது விருப்பத்தின்படி தீர்மானிக்கப்படும். காஷ்மீரைப் பொறுத்தளவில் அங்கு சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டு படையெடுப்பாளர் அகற்றப்பட்டதும் இணைப்புத் தொடர்பாக அங்கு சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப்படும் என்பதே எனது அரசாங்கத்தின் விருப்பாக உள்ளது''.

இந்த அறிக்கையும் இந்தியர்களுக்கு மிகவும் 'அலர்ஜி'க்கான விடயமாகும். ஏனெனில் இன்று வரை அத்தகைய வாக்கெடுப்பு எதுவுமே நடாத்தப்படவில்லை. இதற்கு இந்திய அரசாங்கம் கூறும் காரணமோ இன்னும் வேடிக்கையானது. அறிக்கையிலுள்ள படையெடுப்பாளர்அகற்றப்பட்டதும்- என்ற வாசகம் மிக முக்கியம். இங்கு படையெடுப்பாளர் (பாகிஸ்தானிய பதான்ஸ்) காஷ்மீரின் ஒரு பகுதியை (அசாட் காஷ்மீர்) இன்னும் ஆக்கிரமித்தபடியுள்ளனர். அவர்கள் விரட்டப்படும் வரை வாக்கெடுப்பு இல்லை என்பது இந்தியாவின் வாதம். உண்மையில் இந்த விரட்டலுக்காகவே இரண்டு யுத்தங்கள் புரியப்பட்டன. ஆனாலும் எல்லைகளில் பெரிதான மாற்றங்கள் ஏற்பட்டதாக இல்லை.

இன்னொரு நொண்டிச்சாட்டு, காஷ்மீர் மக்கள் உள்ளூர் தேர்தல்களில் வாக்களித்தமை, மாநில அரசியலமைப்பை உருவாக்கியமை என்பதை வைத்துப் பார்த்தால் மக்கள் இணைப்பை அங்கீகரித்து விட்டார்கள் என்பது. இவ்வேளையில்தான் அங்கு ஐ.நா. தலையிட்டு எல்லைக் காவல் செய்யவேண்டி ஏற்பட்டது. இது ஒரு கண்காணிப்புப் பணியாக உள்ளது.

இணைப்பு என்றதும் எமக்கு வடக்கு-கிழக்கு இணைப்பு ஞாபகம் வராமலிருக்க முடியுமா? இந்திய-இலங்கை உடன்படிக்கையின் உறுப்புரை 2(3) இல் கூறப்பட்டிருக்கும் சர்வசன வாக்கெடுப்பு ஏற்பாடு அடிக்கடி காஷ்மீரை ஞாபகப்படுத்துவதுண்டு. சர்வசன வாக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்வதும் பின்னர் அதனைக் காலவரையற்று இழுத்தடிப்பதும் ஒன்றும் புதிதல்ல என இதிலிருந்து படிக்கலாம். மவுண்பேட்டன் பிரபுவின் தந்திரமும் இந்தியாவின் ஏமாற்று வித்தையும் அப்படியே இங்கும் 'ஊடுருவி'யுள்ளதைப் பார்க்கிறோம். ஆனால் இலங்கையில் இது பற்றி அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டியவர்கள் சிங்கள மக்களே என நாம் நினைக்கலாம். அதுவல்ல முக்கியம். பிரச்சினையில் ஒரு தொடர்ச்சியைத் தக்க வைப்பதற்கு நாசுக்கான ஏற்பாடு இது என்பதை உடன்படிக்கையை ஆதரித்தோரில் எம்மில் எத்தனை பேர் உணர்ந்திருந்தனர் என்பது தெரியவில்லை. இடைத் தேர்தல்கள் முதலில், பின்பு சர்வசன வாக்கெடுப்பு என நமது ஜனாதிபதி கூறிவருவது முட்டாள்தனமாக அல்ல. காஷ்மீரிய அனுபவமே என்பதைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். தேர்தலின் முடிவுகள் எப்படி இருக்கும் என்பதைப் புரிந்து கொண்ட இந்தியா காஷ்மீரில் சர்வசன வாக்கெடுப்பை நடாத்தவில்லை. முடிவுகள் எப்படியிருக்கும் என்பதைக் கண்டறிய நமது ஜனாதிபதி முதலில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்திப் பார்க்கப் போகிறார்.

## சமரசங்கள் சரிவருமா?

ஷேக் அப்துல்லாவும், நேருவும் 1953 இலிருந்து முரண்பட்டனர். இதன் விளைவு அவரது தொடர்ச்சியான சிறை வாசம். 1964 இல் முதலாவது தீவிரவாதக் குழு தோற்றுவிக்கப்பட்டது. ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி (ஜே.கே.எல்.எவ்.) காஷ்மீரின் பூரண விடுதலையைக் கோரிப் போராடுகிறது. பங்களாதேஷ் உருவாகியதும் தன் கை ஓங்கி விட்டதை அறிந்து இந்தியா சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் பாகிஸ்தானை அழைத்தது. 1972 யூலை 02 இல் ஒப்பமிடப்பட்ட 'சிம்லா' உடன்படிக்கையின்படி -1965 இல் வரையப்பட்ட யுத்த நிறுத்த எல்லைக் கோட்டை மதித்து நடத்தல். காஷ்மீர் சம்பந்தமான பிரச்சினைகளைப் பேசித் தீர்த்தல். இறுதித் தீர்வுக்காகச் சமாதான ரீதியிலான பேச்சுவார்த்தையில் ஈடுபடல்- என்ற கடப்பாடுகளை இரு நாடுகளும் ஏற்றுக் கொண்டன.

எநதளவுக்கு 1947ஆம் ஆண்டைய தனது கடப்பாடுகளை இந்தியா தட்டிக் கழிக்க முயல்கிறதோ அந்தளவுக்கு பாகிஸ்தான் இன்று சிம்லா உடன்படிக்கையின் இந்தக் கடப்பாடுகளை அலட்சியப்படுத்துகிறது. ஆனால் இந்தியாவுக்கு -இந்த உடன்படிக்கையை விட வேறு பற்றுக்கோடு எதுவுமில்லை. இதுதான் தற்போதைய இழுபறி. 870மைல் நீளமான யுத்தநிறுத்த எல்லைக் கோட்டில் இருநாடுகளுமே ஒவ்வொன்றும் இரண்டு இலட்சம் படைவீரர்களை நிறுத்தி வைத்துள்ளன. ஐ.நா. படைகளும் இங்கேதான் நிலை கொண்டுள்ளன.

1982இல் ஷேக் அப்துல்லா இறக்க அவரது மகன் ஃபாரூக் அப்துல்லா முதலமைச்சரானார். மாறிமாறி காங்கிரஸ் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு. இது 1975இல் இந்திரா காந்தியினால் தொடக்கி வைக்கப்பட்ட விவகாரம். 1986இல் ராஜீவ் காந்தியும் ஃபாரூக்கும் செய்த உடன்பாடு காஷ்மீரிய மக்களை வன்முறைப் பாதைக்குத் தூண்டியது. 1987இல் புதிய கட்சி பிறந்தது. தேர்தலில் நடைபெற்ற அப்பட்டமான மோசடியால் மிதவாதத் தலைமைகளே வேண்டாம் என்ற நிலை காஷ்மீரில் ஏற்பட்டு விட்டது. அன்றைய தேர்தலில் புதிய கட்சியான முஸ்லீம் ஐக்கிய முன்னணியின் வாக்குப் பெட்டிகளுக்குக் காவல் நின்ற இளைஞர்களைத் தான் இன்றும் இந்தியப் படையினர் பட்டியல் வைத்துத் தேடி வருகின்றனர். வன்முறைகள் வெடித்தன. பாகிஸ்தானில், பயிற்சி என்பது இரகசிய விடயமல்ல. 1990 ஜனவரியிலிருந்து அங்கு ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 3,000 மக்கள் இறந்துள்ளதாக மனித உரிமைகள் நிறுவன அறிக்கைகள் கூறுகின்றன. 43 போராட்டக் குழுக்கள் உள்ளதாகவும் அறியப்படுகின்றது.

காஷ்மீரிய மக்களுடைய விருப்பு என்ன என்பதை அவர்கள் வெளிப்படுத்த 1947இலிருந்து இன்றுவரை எவ்விதச் சந்தர்ப்பமும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அவர்கள் தனி நாடாகப் போக விரும்புகிறார்களா? பாகிஸ்தானுடன் இணைய விரும்புகிறார்களா? அல்லது இந்தியாவுடனேயே தொடர்ந்தும் இருக்க இசைகின்றார்களா? எப்படிக் கண்டு கொள்வது? இந்த மக்களது சுயநிர்ணய உரிமை மிகப் பெரிய ஜனநாயக நாட்டினால் மீறப்பட்டுள்ளது. இந்த நாட்டின் சர்வதேசச் செல்வாக்கு காரணமாகவே காஷ்மீரிய மக்களது சுயநிர்ணய உரிமைக்குரல் குரல்வளைக்கு வெளியே வரமுடியாதபடி அமுக்கப்பட்டு வருகின்றது. ஒப்பந்தம், உடன்படிக்கை, வாக்குறுதி என்பவற்றால் ஏமாற்றப்பட்டு விட்ட காஷ்மீரிய மக்கள் இன்று சிக்கலிலிருந்து விடுபட வழியறியாது குருதிக் காணிக்கை செலுத்துகிறார்கள்.

கடந்த செப்டெம்பரில் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பேசுகையில் ஐ.நாவின் கவனத்துக்குரிய ஒரு விடயம் காஷ்மீர் என அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டார். ஐ.நாவின் செயலாளர் நாயகத்தின் வருடாந்த அறிக்கையில் காஷ்மீர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1990 பெப்ரவரியில் 4லட்சம் மக்கள் காஷ்மீரிய வீதிகளில் ஊர்வலமாகச் சென்று ஐ.நா கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் ஒப்படைத்த மகஜரில் தமக்குப் பூரண சுதந்திரம் வேண்டும் எனக் கேட்டிருந்தனர். ஆனாலும் 'ஹேஷ் உல் முஜாஹிடீன்' போன்ற தீவிரவாதக் குழுக்கள் பாகிஸ்தானுடன் இணைவதை விரும்புகின்றன. இதன் செல்வாக்கு தற்போது அதிகரித்து வருகிறது.

இந்தியப் படையினரின் அத்துமீறல்கள் தனியாக ஆராயப்பட வேண்டிய ஒரு விடயம். எல்லா விதங்களிலும் 'அந்நியமானவர்கள்' எனக் கருதப்படும் இவர்கள் காஷ்மீரில் கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். சில நகரங்களையே கொளுத்தியுத்தியுள்ளதாக அறிக்கைகள் கூறியுள்ளன. பாலியல் பலாத்காரம் முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது. உல்லாசப் பயணம் வந்த கனேடியப் பெண் ஒருவரை படையினர் பாலியல் பலாத்காரம் செய்த கதை உலகறிந்த விடயம். ஆனால் வெளிவராமல் அமுக்கப்பட்டு விட்டவை ஏராளம். இந்த வரிசையில் அண்மைய ஹாஸ்ரத்பால் பள்ளிவாசல் முற்றுகையும் அமைந்துள்ளது. ஹிஸ்புல் முஜாஹிடீன் என்ற கட்சியின் தீவிரவாதத் தலைவரை கைது செய்ய நடாத்தப்பட்ட முற்றுகை இறுதியில் பிசுபிசுத்து விட்டது. அவர் பள்ளிவாசலுக்குள் இருந்தார் என்பதற்குச் சான்றில்லை. எத்தனை நாளைக்குக் குரல்வளையை நெரிப்பது? அடக்கப்படும் மக்களுக்கு வெளியிலிருந்து குரல்கள் எழுவதும் தவிர்க்க முடியாததே!

நன்றி - நூலகத்திட்டம்



## ஆனையிறவில் முப்படை நகரம்

வடக்கில் யுத்தம் ஆரம்பமானதும் நாம் அரசுக்கு ஐந்து யோசனைகளை முன்வைத்திருந்தோம். அவற்றில் இரண்டையாவது அரசு நடைமுறைப்படுத்தி இருந்தால் இன்றைய நிலைமை ஏற்பட்டிருக்காது என மடிகே பஞ்ஞா சீஹ மகா நாயக்க அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நாம் கொடுத்த யோசனைகளில் முதலாவது, ஆனையிறவுப் பகுதியில் முப்படைநகரமொன்றை அமைப்பது. கடைகள், வைத்தியசாலை, பாடசாலை உட்பட அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் கொண்ட முழு நிறைவான நகராக அது இருக்கும். இரண்டாவது யோசனை ஆனையிறவுக்கும் வவுனியாவுக்கும் இடையிலுள்ள 125,000 ஏக்கர் வரையிலான பெரும்காடுகளை அழித்துக் குழாய்க் கிணறுகளை அமைத்து விவசாயக் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்துவதும் அவற்றில் இன விகிதாசாரப்படி மக்களைக் குடியேற்றுவதுமாகும்.

ஆனால் அரசு இந்த யோசனைகளில் அக்கறை கொள்ளவில்லை. இதன் விளைவை இப்போது நாடு அனுபவிக்கிறது என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

## வடக்கில் யுத்தத் தீ

அரசவிரோதக் கருத்துக்களை மாணவர் மத்தியில் பரப்பும் நோக்குடன் சிங்கள மொழியும் இலக்கியமும் என்ற பாட வினாப்பத்திரத்தில் வினாக்களைத் தயாரித்தனர் என்றதன் பேரில் இரண்டு ஆசிரியர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினூடாக ஆண்டு பத்து இறுதித் தவணைப் பரீட்சைக்காக தயாரிக்கப்பட்ட சிங்கள மொழியும் இலக்கியமும் வினாத்தாளில் வடக்கிலோ யுத்தத் தீ, தெற்கிலோ இரத்தத்தை உறைய வைக்கும் சம்பவங்கள். முழு இலங்கையையுமே இன்று உறுதியற்றதாகி உள்ளது. இதற்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் எதைப் பற்றியும் அலட்டிக் கொள்வதில்லை. முழுநாடுமே அந்நிய முதலீட்டாளர்களிடம் அடகு வைக்கப்பட்டுள்ளது. இதனூடாக நாட்டின் பொருளாதாரம் சிதைக்கப்படுகிறது. இது பற்றிச் சிந்தித்து இலங்கையின் எதிர்காலம் பற்றி ஒரு கட்டுரை வரைக என்கிற வினா தயாரிக்கப்பட்டிருந்தது.

அரச விரோதக் கருத்துக்களை மாணவர் மத்தியில் பரப்பும் நோக்குடன் இவ்வினா தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறி உடனடியாக இதுபற்றி விசாரணை ஒன்றை நடாத்துமாறு வடமத்திய மாகாண முதலமைச்சர் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இது தொடர்பாக விசாரணை நடாத்திய பொலிஸார் பாடசாலை ஆசிரியர்கள் இருவரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வினாப்பத்திரம் கடந்த 11ம் திகதி நடைபெற்ற பரீட்சையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் விடை எழுதியுமுள்ளனர் எனினும் இவ்வினாப்பத்திரத்தைச் செல்லுபடியற்றதாக்கி புதிய பரீட்சை ஒன்றை கல்வித்திணைக்களம் நடாத்த உள்ளதாகத் தெரிய வருகிறது.

## இமானிப் ...

19. குருஸ் அருள்நாயகி (45 வயது)
20. அருளம்மா (47 வயது)
21. ஜேம்ஸ் - வவாச்சி
22. ஜேசுநாயகம் - லூசியம்மா
23. கனோஜ் (70 வயது)

இது இவ்வாறு இருக்க சிறிலங்காப் படைகளின் மிருகத்தனமான குண்டுவீச்சுக்களையும் தாக்குதல்களையும் எதிர்த்து டிசெம்பர் 3ம் திகதி வெள்ளிக்கிழமை காலை குருநகர், பாசையூர் மக்கள் மௌன ஊர்வலம் ஒன்றை நடாத்தவும் அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## அரசியலமைப்பு மாற்றம்: சில குறிப்புக்கள்

– இராவப்பன்

இலங்கையின் அரசியலமைப்பை மாற்றுவது பற்றி சில மட்டங்களில் இப்போது பேசிக் கொண்டிருக்கிறார்கள். அரசியலமைப்பில் மாற்றம் அல்லது புதியதொரு அரசியலமைப்பு தேவை என்பதில் கருத்து முரண்பாடில்லை. ஆனால் இதனைச் செய்வதற்கு நாட்டின் இன்றைய நிலை பொருத்தமாக இருக்கிறதா என்பது ஒரு நியாயமான வினா. ஒரு நாட்டின் அரசியலமைப்பு ஆக்கப்படல் வேண்டும்.

நமது நாட்டைப் பொறுத்தவரை இன்றைய உள்நாட்டுப் போருக்கு அரசியலமைப்பு ஒரு பிரதான காரணியாகும். எனவே புதிய அரசியல் அமைப்பாயினும் அல்லது மாற்றமெனினும் வட-கிழக்கு மக்களின் கருத்துப் பெறப்படுதல் அவசியம். ஆனால் இன்றைய நிலையில் இம் மக்களின் கருத்தினைத் தெளிவாக அறிந்து கொள்வது சாத்தியமற்றது. குறைந்தபட்சம் ஒரு யுத்தநிறுத்தமின்றி கருத்துக்கணிப்பு இயலாத ஒன்றாகும்.

1972/78இல் அரசியலமைப்புகள் தமிழ் மக்களின் ஆதரவின்றி ஏற்பட்டவையாகும். மூன்றாவது முறையும் அவர்களின் உரிமைகளை மறுக்கும் அரசியல் அமைப்பை ஏற்படுத்த முனையும் எவரும் நாட்டுப் பிரிவினைக்கு உந்துதல் அளிப்பவர்களாக இருப்பார்கள். 1972இன் அரசியல் கட்டமானது நாட்டைக் குடியரசாக்க வேண்டுமென்பதை விட சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்காக அச்சட்டத்தில் உள்ள பகுதிகளை நீக்குவதிலேயே கருத்தாக இருந்தது. கோடீஸ்வரன் வழக்கில் பிரிவி கவுன்சில் வழங்கிய தீர்ப்பே இந்த அரசியல் சட்டத்தின் மூல வேர். 1978இல் ஏற்படுத்தப்பட்ட அரசியல் சட்டம் தேர்தல், பாராளுமன்றம் என்பவற்றின் ஊடாக சர்வாதிகார ஆட்சியை இந்நாட்டில் ஏற்படுத்துவதை உள் நோக்காகக் கொண்டதாகும். பிற காரணிகள் சரிவர ஒத்துழைத்திருப்பின் இன்று இந்நாட்டில் சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டிருக்கும்.

நாட்டில் அமைதியை ஏற்படுத்த முன்பு அரசியல் சட்டத்தை திருத்த/மாற்ற முனைபவரின் உள் நோக்கம் சந்தேகத்துக்குரியதாகும். பொருளாதார சீர்குலைவினால் ஏற்பட்டுள்ள விலைவாசி ஏற்றம், சிலாபத்தில் அமைக்கப்பட்டு வரும் அமெரிக்க (சந்தேகத்துக்குரிய) ஒலிபரப்பு நிலையம், வட கிழக்கை அழித்தொழிக்க ஒதுக்கப்பட்டு வரும் பணத்தில் இடம்பெறும் ஊழல் என்பவற்றை மூடி மறைக்க அரசியல் அமைப்பு பற்றிய பேச்சு சிறிது காலம் உதவக் கூடும்.

அத்துடன் பிறிதொரு முக்கிய விடயத்தையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். 16ம் நூற்றாண்டில் தென்னிலங்கையில் அரசாட்சி செய்தவர்களின் விவேகக் குறைவினால் முழுத் தீவும் ஏறக்குறைய 400 ஆண்டுகளாக அந்நியரின் பிடியில் இருந்தது. ஓரளவு அரசியல் விடுதலை பெற்று 50 ஆண்டுகள் ஆவதற்கு முன் மீண்டும் அந்நியரின் ஆளுகைக்குட்படுத்தும் விவேகமற்ற ஆட்சியே தென்பகுதியில் நிலவுகிறது. இந்த நிலை மாற வேண்டும் அல்லது மாற்றப்பட வேண்டும். இல்லாவிட்டால் வரவுள்ள அந்நியருக்கு நிலபாவாடைகளை இன்றிருந்தே ஆயத்தமாக வைத்திருங்கள்.

பல்வேறு பொறுத்தமற்ற காரணங்களைக் கூறுவதன் மூலமாக உள்நாட்டு யுத்தத்தினைத் தொடர விரும்பும் சக்திகளே அந்நியர் வருகைக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். மொழிப்பற்று, மனிதாபிமானம் போன்ற போர்வைக்குள் இக் கயவர்கள் மறைந்திருப்பதால் மக்களை ஏமாற்றுவது இவர்கட்கு இலகுவாகின்றது. இருள் திருடனுக்கு உதவுவது போல் நாட்டின் குழப்ப நிலை இவர்களுக்கு வாய்ப்பாக உள்ளது.

## மீண்டும் ...

ஒருவரோ என அங்கலாய்க்கின்றனர், இவ்விளம் பொறியியலாளரின் பெற்றோர்கள். இதேவேளை கடந்த 17ம் திகதி கிருலப்பனையில் வைத்து எருவிலைச் சேர்ந்த விநாயகமூர்த்தி என்ற இளைஞரும் இதேபாணியில் கடத்தப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது. கொழும்பில் மட்டுமல்லாமல் திருமலையிலும் இதே வெள்ளைவான் கடத்தல் மீள ஆரம்பித்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது. அண்மையில் வெள்ளை வான் கடத்தல் முயற்சி ஒன்றிலிருந்து தப்பியோடிய திருமலையைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் தொடர்பான தகவலும் எமது அலுவலகத்திற்குக் கிடைத்துள்ளது.

இவ்வாறு நடைபெறும் கடத்தல்கள் பற்றித் தமக்கு எதுவும் தெரியாதென பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பானவர்களே கைவிரிக்கின்றனர். கடத்துபவர்கள் யார்? கடத்தப்படுபவர்கள் எங்கு வைக்கப்படுகிறார்கள்? என்ன ஆகிறார்கள்? இன்னும் எத்தனை பேர் இப்படிக் கடத்தப்படப் போகிறார்கள்? எவ்வளவு காலத்துக்கு?
யாருக்கும் விடை தெரியாத கேள்விகள் இவை.

## யூ.என்.பி ...

அண்மையில் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் பேசுகையில் இன்னொரு மாகாண சபையும் தமது கைக்குள் வரப் போவதாக எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க அறிவித்ததை தொடர்ந்தே இந்த உறவு முறிதல் பேச்சுக்கள் பரவலாக அடிபடத் தொடங்கின. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இப்பேச்சுவார்த்தையின் பின்பும் கூட தொண்டமான் - டி.பி.விஜயதுங்க உறவு சரிப்பட்டு வந்துவிடவில்லை. மாகாண அளவில் எதிர்க்கட்சிகளை சார்ந்து நிற்க தாம் முடிவெடுக்கவேண்டி வரும் என ஆட்சியாளரை மிரட்டும் நிலைக்கு தொண்டமான் தள்ளப்பட்டிருப்பது இந்த உறவின் சீர் கேட்டை தெளிவாக்க காட்டுகிறது.

1977 தேர்தலின்பின் அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் யூ.என்.பியுடன் சேர்ந்து கொண்ட தொண்டமான் தலைமையிலான இ.தொ.காவை தொடர்ந்து எதிர்க்கட்சிகளும், யூ.என்.பிக்குள் உள்ள சிலரும் எதிர்த்தே வந்துள்ளனர். ஆயினும் ஜே.ஆர்.பிரேமதாச ஆட்சிக் காலங்களில் இவ்எதிப்பு கட்சிக்குள் அவ்வளவாக தலைதூக்கிவிடவில்லை. ஆனால் தொடர்ச்சியான தமது அரசியல் ஸ்திரப்பாட்டுக்கும், அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்குமாக 'சிங்கள பௌத்த' பேரினவாதத்தை இவ்வரசுகள் திட்டமிட்டு வளர்த்துவரவே செய்தன. பிரேமதாச ஆட்சிக் காலத்து கந்தளம ஹோட்டல் விவகாரத்தில் தொண்டமான பகிரங்கமாகவே எதிர்க்கப்பட்டார். வடக்கு கிழக்குப் பிரச்சினைக்காக அவர் முன்மொழிந்த தீர்வு விளைகள் காரணங்கள் எதுவும் கூறப்படாமலேயே ஒதுக்கப்பட்டது. தனிநாடு ஒன்றைத் தமிழருக்கு பெற்றுத்தர தொண்டமான் அடிகோலுகிறார் என்றும் இது குறித்து எதிர்க்கட்சிகள் சாடின.

அண்மைய ஹெல உருமய இயக்கம், சிங்கள ஆரக்சக்கசபா, ஜாதிக சிந்தனய போக்குகளின் உருவாக்கத்துடனும் வடக்கு கிழக்கு யுத்தத்தை நியாயப்படுத்த 'சிங்கள பௌத்த' இனவாதம் வளர்க்கப்பட்டதாலும் உருவாகியுள்ள நிலைமை யூ.என்.பிக்கு கட்சிக்குள்ளும் வெளியிலும் அரசியல் ரீதியான நெருக்கடிகளை உருவாக்கி வந்துள்ளது. ஒருபுறத்தில் சிங்கள பௌத்தத்தை ஆதரிக்க யுத்தத்தை நடாத்த வேண்டி இருப்பதுவும் இன்னொரு புறத்தில் தமிழ் மக்களை பாதுகாப்பதாக காட்டிக் கொள்ள வேண்டி இருப்பதுவுமான இருதலைக் கொள்ளி நிலை இந்த அரசுக்கு!

இ.தொ.கா-யூ.என்.பி பிளவா அல்லது யூ.என்.பி தனது அரசியல் தலைமையை இழப்பதா என்ற நிலைமை இதன் காரணமாக உருவாகியிருந்தது. இந்த ஒரு நிலையில், யூ.என்.பி அநுரா கூட்டு, டி.பி.விஜதுங்க தலைமை, தொண்டமானது தலமைக்கு உருவாகியுள்ள நெருக்கடி என்பவற்றில் நம்பிக் கைவைத்து இ.தொ.காவை இழக்கவும் யூ.என்.பி தயாராகிவிட்டதாக இன்றைய விரிசல் தெரிவிக்கிறது.

'சிங்கள பௌத்தத்திற்கான' தலைமையை நேரடியாகவே யூ.என்.பி ஜாதிக சிந்தனய, ஹெல உருமய சக்திகளிடமிருந்து தானே எடுத்துக் கொள்ள செய்யப்பட்டுள்ள இம்முடிவு, இந்நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சத்தையே ஏற்படுத்தியுள்ளது. வெறும் அரசியல் கூட்டு என்ற அளவில் தொண்டமான் தூக்கி வீசப்படவில்லை, மாறாக சிங்கள பௌத்த இனவாதத்திற்கு பதில் சொல்ல வேண்டிய நெருக்கடியிலேயே இது நடந்திருக்கின்றது.

சிறுபான்மை மக்கள் மீது அக்கறை கொண்டிருப்பதாக வேடம்போடுவதற்கு யூ.என்.பிக்கு சந்தர்ப்பம் கொடுத்து வந்த தொண்டமான் தலைமைக்கு தம்மைத் தக்கவைத்துக் கொள்வதற்காக வேனும் இன்று வெளியேற வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளதும் இங்கு கவனிக்கத்தக்கது.

தோட்டங்களை மீள 30வருட குத்தகைக்கு கம்பனிகளுக்கு வழங்க அரசு எடுத்துள்ள முடிவு, தொடர்ச்சியான மலையக சுற்றிவளைப்புகள், காணிப்பறிப்புகள் என்பவற்றை பார்த்துக் கொண்டு சும்மா இருப்பதனால் இ.தொ.கா. மலையகத்தில் நீண்டநாள் நிலைக்க முடியாது என்பது தொண்டமானுக்கும் புரிந்திருப்பதே முரண்பாடு இவ்வளவு தீவிரமானதற்கு காரணமாகும்.

எனினும், தொண்டமான் நாளையே கூட அரசுடன் சமரசத்துக்குப் போக மாட்டார் என்பதற்கு எந்த எனினும், நிச்சயமும் இல்லை என்பதையும் சில அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அப்படியொரு நிலைமை ஏற்படும்பட்சத்தில் தொண்டமான் தனது தலையில் தானே மண் அள்ளிப் போடுவது போலவே அமையும் என்று கருதப்படுகிறது.

## முன்னைய ஈழப் பிரகடனத்தையும் ...

வுமே இருக்கும் என்பதாலும் தேர்தலுக்கான பாதுகாப்பான சூழல் இல்லை என்பதாலும் நாம் இத் தேர்தலில் பங்கு பற்றுவதில்லை எனத் தீர்மானித்துள்ளோம்.

**சரிநிகர்:** ***அவசரகாலச் சட்ட நீடிப்பு, வட- கிழக்கு இணைப்பு தொடர்ச்சியான யுத்தம், தொடரும் குடியேற்றம், இளைஞர் கைதுகள் இவை தொடர்பாக தங்கள் கட்சி என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.***

**சுரேஷ்:** இதே மாதிரிக் கேள்விகளுக்கு முன்னரும் பதில் கூறியுள்ளேன்.

**சரிநிகர்:** ***தமிழ் பேசும் மக்களவ பிரச்சினைகளை ஒற்றையாட்சியில் தீர்த்து விடலாம் என்பது பற்றி...***

**சுரேஷ்:** தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை ஒற்றையாட்சிக்குள் முழுமையாக தீர்த்து விட முடியாது என்பதை ஏற்கனவே திட்டவட்டமாகக் கூறியுள்ளோம்.

**சரிநிகர்:** ***தீர்வு தொடர்பாக அரசு இதுவரை நடாத்திய பேச்சுக்களில் தங்களுக்குக் கிடைத்த அனுபவம் எத்தகையது?***

**சுரேஷ்:** அரசு இனவாதச் சேற்றில் மூழ்கிப் போயுள்ளது. அதற்குத் தேர்தலில் வெல்வதுதான் நோக்கமே தவிர பிரச்சினைகளைத் தீர்ப்பதல்ல. பிரபாகரனை நம்ப முடியாதென அரசாங்கம் சொல்லும் அதேவேளை அரசாங்கமும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை அற்று இருப்பதாகவே நான் கருதுகின்றேன். ஆட்சியாளர்களின் மனம் மாறி தமிழரின் உரிமைகளை கொடுப்பார்கள் என்பதெல்லாம் வெறும் கனவாகத்தான் இருக்கும். அரசாங்கத்திற்கு சர்வதேச நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டாலே தவிர, அரசாங்கம் பிரச்சினைகளைத் தீர்க்காது. இந்திய-இலங்கை ஒப்பந்தம் கூடத் திணிப்புத்தான். எனவே இவ் நிர்ப்பந்தங்களை உருவாக்கத்தான் நாம் முயற்சி செய்ய வேண்டும். மறுபக்கத்தில் புலிகளாலும் இப்போராட்டத்தைத் தொடர முடியுமே தவிர தீர்வை நோக்கிப் போக முடியாது. சில தாக்குதல்களில் புலிகள் வெல்லலாம். ஆயுதங்களைக் கைப்பற்றலாம். இதற்காக முழுமையாக ராணுவ ரீதியில் அரசை வெற்றி கொண்டு விடுவார்கள் என்பதில்லை. புலிகளும் கூட தமிழ் மக்களின் கௌரவத்தை சுதந்திரத்தை பாதிக்காத அவர்களின் சுயாட்சி தொடர்பாக உண்மையாகவே பேச்சுவார்த்தைக்கு முயற்சித்ததில்லை. அழிவுகளைப் பற்றியோ, ஒரு தலைமுறையே அழிந்து போகின்றது எனபதைப் பற்றியோ இவர்கள் சிந்திப்பதில்லை. ஜனநாயக முறைக்கு வந்தால், அதுதான் தமது கடைசி நாட்களென அவர்கள் நம்புகின்றார்கள். எனவே இவர்களும் கூட எமது மக்களின் நலன்களை விட தமது நலன்களையே பிரதானப்படுத்துவதாகத்தான் தோன்றுகின்றது. மொத்தத்தில் இவர்கள் இருபகுதியினர் மீதும் அழுத்தத்தைப் பிரயோகித்து ஓர் சுமூகமான தீர்வுக்கு வரச் சர்வதேச சமூகத்தின் உதவி தவிர்க்க முடியாததென நான் கருதுகின்றேன்.

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

சரிநிகர்

## அகதி முகாம்களை கலைக்கும் அரசின் தொடரும் முயற்சி

# மடு முகாமுக்கான உணவுப் பொருள் விநியோக நிறுத்தம்!

தம்பு திருநாவுக்கரசு

வன்னிப் பகுதியில், இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசமாகிய மடு தேவாலயப் பகுதியில் அமைந்துள்ள அகதி முகாமில் உள்ளவர்களுக்கான நிவாரண உணவு விநியோகம் குறித்து இன்னும் உறுதியான ஏற்பாடுகள் எதுவும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் அங்கு தஞ்சமடைந்துள்ள சுமார் 35,000 பேர் பட்டினி நிலையை எதிர்நோக்கியுள்ளார்கள். அங்கு இயங்கி வரும் வைத்தியசாலைக்குரிய மருந்து வகைகளும் அனுப்பி வைக்கப் படாதமையினால் அங்குள்ள நோயாளிகளும் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்கியுள்ளார்கள்.

வவுனியா மாவட்டத்தின் செட்டிக்குளம் பிரதேசம் மற்றும் மன்னார் மாவட்டத்தின் வங்காலைப் பகுதி என்பன படையினரின் கட்டுப்பாட்டில் வந்துள்ள போதிலும், இப் பகுதிகளின் பெரும் பகுதிகளில் இடம்பெயர்ந்தோர் மீளக் குடியமர முடியாத நிலைமையே நிலவுகின்றது. எனினும் இப் பகுதிகளைச் சேர்ந்த ஆறாயிரத்திற்கும் மேற்பட்டவர்களை சொந்த இடங்களுக்குத் திரும்பி வருமாறு படையினர் கோரிக்கை விடுத்து, ஒக்டோபர் மாதக் கடைசி முதல் மடு அகதி முகாமிற்கான நிவாரண உணவு விநியோகம் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

செட்டிகுளம் பகுதிக்கு ஏற்கனவே திரும்பிச் சென்றுள்ள 300க்கும் அதிகமான குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப் படாமல் கரம்பைமடு, அடம்பங்குளம், முதலியா குளம், மணிக் அரிசி ஆலை ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

'சொந்தக் கிராமங்களில் சென்று குடியேற முடியாத நிலையில் நாங்கள் எவ்வாறு மடுவை விட்டு போவது?' என வினா எழுப்பி, படையினரின் நடவடிக்கையை எதிர்த்து மடு அகதி முகாமைச் சேர்ந்தோர் கடந்த மாதம் ஆர்ப்பாட்டம் செய்தனர். அங்கு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்த யூ.என்.எச்.சி.ஆர் அதிகாரிகளைப் பூட்டி வைத்துக் கெரோ செய்தார்கள். இதனையடுத்து யூ.என்.எச்.சி.ஆர் அதிகாரிகள் தமது சேவையை நிறுத்தி அங்கிருந்து வெளியேறி விட்டார்கள். இதனையடுத்து வவுனியா ஊடாக அவர்களது வழித் துணையோடு மடு அகதி முகாமிற்கு நடைபெற்று வந்த நிவாரண உணவு விநியோகப் பணி கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது


இந்த நிலைமைகள் குறித்து தெளிவான விபரங்களைப் பெற்றுள்ள சமூக சேவைகள், புனர்வாழ்வு, புனர் நிர்மாண அமைச்சு இந்த அகதிகளுக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உணவு விநியோகம் மேற்கொள்ளப்படும் என அறிவித்த போதிலும், எதுவிதமான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

''மடு அகதிகளுக்கு வவுனியா ஊடாக மாத்திரமே உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட முடியும். இதற்கான அவசர நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளத் தவறுமானால் அங்குள்ள அகதிகள் பாரதூரமான பாதிப்புகளுக்கு ஆளாக நேரிடுவதைத் தவிர்க்க முடியாது'' என்று நிவாரணப் பணியாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

மடு அகதி முகாமை அண்டியுள்ள பெரிய தம்பனை, இரணை இலுப்பைக் குளம், பூவரசங்குளம் போன்ற இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதி மக்களுக்கான நிவாரண உணவு விநியோகப் பணிகளை மேற்கொண்டுள்ள செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கச் சமாஜம், வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கச் சமாஜம் என்பவற்றிற்கு மடு அகதி முகாம் உணவு விநியோகம் குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். இதே போல செட்டிகுளம், வவுனியா ஆகிய பிரதேசச் செயலாளர்களுக்கும் கூட இவ் விடயம் குறித்துக் கலந்தாலோசிக்கப்படவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

''வவுனியாவில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம், கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசம் ஆகியவற்றிற்கு நிவாரண உணவுப் பொருட்கள் பங்கீட்டு உணவுப் பொருட்கள் விநியோகித்த வகையில், அரசாங்கத்திடம் இருந்து 72லட்சத்து 50ஆயிரம் ரூபா வருமதியாக உள்ளது. இந்த நிலுவையை எமக்குச் செலுத்தி எமது உணவு விநியோகப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஒத்துழைக்காத போக்கே காணப்படுகின்றது. இந்த நிலைமையில் மடு அகதி முகாமிற்கான நிவாரண உணவு விநியோகம் பற்றி எம்மால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதுள்ளது'' என்று வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மடு அகதிகளின் ஆர்ப்பாட்ட நடவடிக்கையை அடுத்து நவம்பர் மாதத்தில் மேலும் இரு வாரங்களுக்குரிய நிவாரண உணவுப் பொருட்களை அனுப்பி வைக்க புனர்வாழ்வு அமைச்சு இணக்கம் தெரிவித்திருந்தது. எனினும் யூ.என்.எச்.சி.ஆர் அதிகாரிகளின் சேவை நிறுத்தம், அதனைத் தொடர்ந்து பூநகரி அனர்த்தங்களுக்கான ஊரடங்குச் சட்டம் என்பவற்றினால் மடு அகதி முகாமிற்கும் வவுனியாவிற்கும் இடையேயான போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.



இந்த நிலையில் மடு அகதிகளான 32ஆயிரம் தமிழ் மக்களின் நிலைமை மேலும் மோசமடைந்து செல்கின்றது.

ஏற்கனவே கொழும்பில் இருந்த அகதி முகாம்களை மூடிப் பலாத்காரமாக அவர்களைக் கிழக்கிற்கு அனுப்பியதன் மூலம் கிழக்கு சுமுகமான நிலைமைக்கு வந்து விட்டது எனக் காட்டிக் கொள்ளும் முயற்சியில் இறங்கிய அரசு இப்போது மடு முகாமையும் புனர்வாழ்வு என்ற போர்வையில் மூடி விட முயல்கிறது.

அரசைப் பொறுத்தவரை இந்த மக்களுடைய பிரதேசங்களில் வாழ்வதற்கான நிலைமை இருக்கிறதோ இல்லையோ அவர்களை அகதி முகாம்களிலிருந்து விரட்டியாவது தனது அரசியல் நோக்கை எட்டுவதாகவே உள்ளது.

---

## மணிவாசகம்

### ஏன்?

மாகாண சபைகளின் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு ஜனாதிபதி என்ற வகையில் தாங்கள் எதிர்ப்பீர்களாயின், கோடிக்கணக்கான பொதுமக்களின் நிதியைச் செலவழித்து, மாகாண சபைகளை அமைத்துள்ளது ஏன் என்கிற பிரச்சினையான கேள்வியொன்று எழும்.

**ஸ்ரீ லங்கா மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க - லங்காதீபவில்- 8.11.1993**

### சிங்களம் சாக தமிழ் வாழ்கிறது.

அண்மையில் தமிழ் மொழி அரசகரும மொழியாக்கப்பட்ட பின் வடக்கு-கிழக்கு உட்பட ஒன்பது மாகாணங்களிலும் உபயோகிக்கப்படும் அரச கரும மொழியாகத் தமிழ் மொழி உள்ளது. சிங்களம் அதற்கு முன்பிருந்தே அரச கரும மொழி அந்தஸ்துப் பெற்றிருந்தாலும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி ஆட்சி செய்யத் தொடங்கியதால் சிங்களம் உபயோகிக்கப்படுவது ஏழு மாகாணங்களில் மட்டுமேயாகும். அதன்படி தமிழ், ஆங்கில மொழிகள் ஒன்பது மாகாணங்கள் பூராகவும், சிங்கள மொழி ஏழு மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எனவே இன்று நாடு முழுவதிலும் அரச கரும மொழியாக உள்ளது தமிழ் மொழியாகும். இதேவேளை சிங்களப் பிள்ளைகள் தமிழ் மொழியைக் கற்பது கட்டாயமாக்கப்பட்டு வருகின்றது. ஆனாலும் தமிழ்ப் பிள்ளைகள் கட்டாயமாக சிங்களத்தைப் படிக்க வேண்டும் என்று உத்தரவு இடப்படவில்லை. இதனால் சிங்கள மொழி குற்றுயிராகி சிங்களம் கொல்லப்பட்டுத் தமிழ் மொழி எழுந்து வருவதே நடைபெறுகிறது. மொழி ஆராய்ச்சியாளர்கள் இதுவரை செய்துள்ள ஆராய்ச்சிகளிலிருந்து வெளிவந்துள்ள விடயங்களின் படி ஏதாவதொரு இனத்தின் மொழி மரணிப்பது என்பது அவ் இனத்தின் மரணத்தினை ஒத்ததாகும்.

**மிகப் பிரசித்திபெற்ற இலக்கியவாதியும் பண்டிதரும் சரித்திராசிரியருமான அறிசென் அஹுபுது -லங்காதீபவில்- 09.11.1993**

### சட்டமாற்றம்

''எமது நாட்டைப் போல் சட்டத்தை மாற்றியமைக்கும் நாடொன்று உலகிலேயே வேறெங்கும் கிடையாது. கட்சியொன்றிலிருந்து இன்னொரு கட்சிக்குத் தாவ வேண்டியவுடன், பல் தேசிய நிறுவனமொன்றிற்குக் காணி ஒன்றை விற்க வேண்டியவுடன் சட்டம் மாற்றியமைக்கப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் சட்டம் மாற்றப்பட்டாலும் நாட்டின் மக்களைப் பாதுகாக்கத் தேவையான முறையில் சட்டத்தில் மாற்றம் செய்ய இன்னும் முடியாதுள்ளது''

**செடெக் நிறுவனத்தின் பணிப்பாளர் வண. அருட்தந்தை ஓஸ்வல்ட் பேன் -லங்காதீபவில்- 12.11.1993**

### ஒரு போதனை

''யுத்தமொன்றிற்கு முகங் கொடுக்க ஆயுதங்களும், படையினரும் மட்டும் போதுமானவை அல்ல. அதற்கான உபாயங்கள், அர்ப்பணிப்பு, திடசங்கற்பம், நேர்மையான நோக்கம் ஆகியன அவசியமானதாகும்''

**ஆசிரியர் தலையங்கத்திலிருந்து... -திவயினவில்- 13.11.1993**

### இன்னொரு போதனை

''புலிப் பயங்கரவாதிகளுடன் போர் புரிவதும், தாய் நாட்டைப் பாதுகாப்பதும் இராணுவத்தின் கடமை எனக் கருதி நாட்டின் ஏனைய மக்கள் கூட்டத்தினர், தத்தமது வேலைகளைப் பார்த்தபடி அமைதியாகவிருப்பது துர்ப்பாக்கியமானதாகும்.

யுத்தம் புரிவது இராணுவத்தின் பொறுப்பு என்பது உண்மையே. ஆனால் அவர்கள் யுத்தம் புரிவதும், உயிர் நீப்பதும், அங்கவீனர்கள் ஆவதும் எம் அனைவர்களுக்குமாக என்பதைச் சில வேளைகளில் ஏனையவர்கள் மறப்பது என்பது அநீதியானதாகும்''.

**ஆசிரியர் தலையங்கத்திலிருந்து.... -திவயினவில்- 15.11.1993**

### படையினருக்கு ஸ்ரீமாவோவின் அன்பளிப்பு

''இவ் வருடம் ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட எனது சம்பளத்தை வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் அங்கவீனர்களான படையினருக்குத் தேவையான உபகரணங்களையும், பொருட்களையும் வாங்குவதற்காக அன்பளிப்புச் செய்வேன்''

**ஸ்ரீ லங்கா எதிர்க் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா - லங்காதீபவில்- 16.11.1993**

### சமதர்மம்=ஒன்று

''இலங்கையினுள் சமதர்மத்திற்காகப் போராட இரண்டு கட்சிகள் தேவையில்லை. இப்போராட்டத்தை ஒரே இடத்திலிருந்து நடாத்தக் கூடியதாக உள்ளது''.

**லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேனாட் சொய்சா -லங்காதீபவில்- 16.11.1993**

### பிக்குகளின் ஒப்பாரி

''யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை அரசினால் நடாத்தப்படும் ஒன்றாகும். அதன் செயற்பாடுகள் செஞ்சிலுவைச் சங்கத்தினால் நிர்வகிக்கப்படுகிறது. வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதிகள், ஏனைய ஊழியர்களும் அரசிடம் சம்பளம் பெறுபவர்கள். மருந்துகளும், உபகரணங்களும் கூட அரசினாலேயே வழங்கப்படுகின்றன. எவ்வாறெனினும் வடக்குப் போராட்டத்தில் காயமடையும் அரச படையினருக்கு வைத்தியசாலையின் சேவையையோ, வசதிகளையோ பெறமுடியாதுள்ளது. அச்சேவைகளும், வசதிகளும் புலிகளில் காயமடைந்தவர்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. எதிரிக்கு மட்டுமே வைத்திய வசதிகளும், சிகிச்சையும் வழங்கும் ஒரே இடமாக, உலக வரலாற்றில் எடுத்துக் காட்டக் கூடிய உதாரணம் இவ்விடமாகும். வைத்திய வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்த பக்கத்தில் காயமடைந்தவர்களுக்கு அவை கிடைப்பதில்லை''.

**றுஹுனு பிக்குகள் முன்னணி -திவயினவில்- 16.11.1993**

### ஒரு சிப்பாயின் விலை இரண்டரை லட்சம்.

''இன்று நாட்டில் உருவாகியுள்ள நிலைமையின்படி யுத்த களத்தில் போராட்டங்களில் இனத்திற்காக உயிரிழந்த சிப்பாயொருவருக்கு தற்போது கொடுக்கப்படும் ரூபா ஒரு இலட்சம் நஷ்ட ஈடு போதாத காரணத்தால் அதனை ரூபா இரண்டரை இலட்சமாக்க வேண்டும்''

**காலி மாவட்ட பா.உறுப்பினர் பியசேன கமகே -லங்காதீபவில்- 18.11.1993**

- சீ.சாத்தனார்

சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச. பாலகிருஷ்ணன். 03/12/1993

அச்சுப்பதிவு: 334, காலி வீதி இரத்மலானை நவமம் அச்சகம்.